நவம்பர், 1957

ஹேவிளம்பி - கார்த்திகை

40 நயா பைசா

# மஞ்சரி

# சம நோக்கு

கல்வியும் பணிவும் வாய்ந்த சாமானிய மனிதனையும் பிரம்மஞானியையும், பசுவையும் யானையையும், நாயையும் அந்த நாயைச் சமைக்கும் புலையனையும் சான்றோர் சமமாகவே காண்கிறார்கள்.

—பகவத் கீதை


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: நவம்பர் 1957 [இதழ் 11

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

**சுடும் சந்திரன்:** குளிர் நிலவைப் பொழியும் சந்திரனை, பிரிவாற்றுமையால் வாடும் காதலர்கள், ''ஐயோ! நிலவு சுடுகிறதே'' என்று நோவதாகக் கவிஞர்கள் பாடுவது வழக்கம். நிலவே பொழியாத - கண்ணுக்கே புலப்படாத - ருஷியச் சந்திரன், அமெரிக்கரின் தற்பெருமையைச் சுட்டுவிட்டது. ''வானத்தில் ஒரு செயற்கைச் சந்திரனை இதோ விடப்போகிறோம்; அதோ விடப் போகிறோம்'' என்று அமெரிக்கர் பல வருஷங்களாக ஆர்ப்பாட்டம் செய்து வந்தார்கள். திடீரென்று ஒரு நாள், ''இதோ நாங்கள் விட்டு விட்டோம்'' என்றது ருஷியா. அமெரிக்கா திடுக்கிட்டது; உலகமே பரபரப்படைந்தது. இப்போது, ''நாங்கள் அடுத்தபடி அதை விடப் போகிறோம்; இதை விடப் போகிறோம். சந்திரனுக்கே போய்விடப் போகிறோம்'' என்றெல்லாம் ருஷியா ஆர்ப்பாட்டம் செய்கிறது. இது இயற்கை. அமெரிக்கா முதலில் ஆட்டம் குண்டு போட்டது; ஹைட்ரஜன் குண்டு போட்டது. ''ருஷியாவிடம் இதெல்லாம் ஒன்றுமே இல்லை; அது இவற்றைத் தயாரித்துக்கொள்ள வெகு நாள் ஆகும்'' என்று அது டம்பம் பேசியது. ருஷியாவும் அந்தக் குண்டுகளைப் போட்ட பிறகு அந்த நிலை மாறியது. விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளைப் போர்க் கலையோடும் சர்வதேச அரசியல் பிரசாரச் சூதாட்டங்களோடும் ஒட்டுவதால் தான் இந்த விபரீதம் நேர்கிறது. உலகத்து விஞ்ஞான அறிஞரெல்லாம், இந்தச் சர்வதேசப் பூ-பௌதிக ஆண்டிலாவது ஒரு விரதம் ஏற்பது அவசியம்: 'அழிவு வேலைக்கு விஞ்ஞானத்தை இனி ஈடுபடுத்துவதே இல்லை; ஆக்க வேலைக்கே ஈடுபடுத்துவோம்' என்று அவர்கள் உறுதி பூண வேண்டும். அப்புறம் போய்ச் சந்திர மண்டலத்தில் இடம் பிடிக்கலாம்.

* * *

**ராமநாதபுரம் கலகத்துக்குப்பின்:** கீழத்தூவல் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகமும் அதற்குப் பின்னே பெருங்கலகமும் நடந்து தமிழ் நாடே அசந்து போய்விட்டபின், சற்று அமைதி ஏற்பட்டது. அந்தச் சமயம் பார்த்து ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரை நீதி விசாரணையில்லாமலே சர்க்கார் சிறையிட்டது. கீழத்தூவலில் போலீஸ் சுட்டதுபற்றி இலாகா ரீதியாக நியமித்த ஸ்ரீ வேங்கடேசுவரன் தம் விசாரணை முடிவைத் தெரிவித்துச் சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பித்தார். அது வெளிவந்தது. போலீஸ் சுட்டது நியாயமே என்று அவர் அபிப்பிராயம் சொல்லிவிட்டார். ஆனால், அவருடைய விசாரணையில் பல குறைகள் உண்டு; நீதி விசாரணை போல் நிர்த்தாட்சிண்யமானதாக, இலாகா அதிகாரி ஒருவரின் விசாரணை இருக்க முடியாது. தவிர, கீழத்தூவல் சம்பவத்தோடு போகவில்லை; அதன்பின் வேறு பல சம்பவங்களும் நிகழ்ந்துவிட்டன. இந்த நிலையில், முழு வரலாற்றையும்பற்றி நீதி விசாரணைக் கமிஷன்

ஒன்று விரிவாக விசாரணை செய்வது அவசியம். இப்போதுங்கூட அதற்குக் காலங் கடந்து விடவில்லை. ராமநாதபுரம் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பானவரைத் தண்டிப்பது அவசியம். ஆனால் அதையும்விட முக்கியம், இனி நாட்டிலே இந்த மாதிரி நிகழ்ச்சிகளே நடவாதிருக்க முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் எவை எவை தேவை என்பதை அறிவதாகும். எனவே, அப்படிப்பட்ட ஒரு கமிஷனைச் சர்க்கார் இப்போதாவது நியமிப்பதுதான் நியாயம். அதோடு கூட, ஸ்ரீ தேவரை விடுவிக்கவேண்டும்; அவர்மீது குற்றம் ஏதேனும் இருக்குமானால், முறைப்படி நீதிவிசாரணைக் கோர்ட்டில் வழக்குத் தொடரவேண்டும். அரசியலில் எதிர்க்கட்சியே இராதபடி நசுக்கும் எதேச்சாதிகார ராஜ்யங்களைப் போல் தமிழ் நாட்டிலும் அரசாட்சி நடக்கிறது என்ற அபவாதத்துக்கு ஆளாகாதிருக்க வேண்டுமானால், இது மிக மிக அவசியம்.

காமகோடி பீடாதிபதிகள் விஜயம்: காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்து, மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் தங்கியதிலிருந்து எண்ணற்ற மக்கள் திரள் திரளாக வந்து அவரைத் தரிசித்து, அவர் வாக்கைக் கேட்டு இன்புறுகிறார்கள். அவருடைய வாக்கு, ஞானமும் கல்வியும் அநுபவ அறிவும் பொதிந்திருக்கிறது. எல்லாருக்கும் விளங்கும் எளிய சொற்களால், உயர்ந்த கருத்துக்களை அவர் வழங்குகிறார். அவருடைய வாழ்க்கை விரதமும் தியானமும் நிறைந்திருக்கிறது. சகல மக்களின் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் வசீகர சக்தி அவரிடம் இருக்கிறது. நாஸ்திகம் தலைதூக்கி யிருக்கும் இந்த நாளிலும் ஆத்மிக வேட்கை தீர்க்கும் உண்மையான குரலுக்கு மக்கள் ஏங்கிக் கிடக்கிறார்கள், என்பதை, அவருடைய சென்னை விஜயம் மெய்ப்பித்துவிட்டது.

## என்றும் நடவாதது

ஸரோஜா கண்ணீருங் கம்பலையுமாய்ச் சேலை நுனியால் கண்ணைத் துடைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டபடி கணவன் முன் நின்றாள்.

இரவு உண்டபின் வெற்றிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கணவன் நிமிர்ந்து பார்த்துக் கவலையுடன், ''என்ன, ஸரோஜா, என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''அடுத்த வீட்டுக்காரி இன்றைக்குச் சாயங்காலம் வந்தாள். அவள் புருஷன் வாங்கி வந்த புது வைரத்தோட்டை எனக்குக் காண்பித்தாள். எனக்குந்தான் கலியாணம் நடந்து பத்து வருஷ காலம் ஆகிறது. என்றைக்காவது இந்த மாதிரி ஒன்று நடந்ததுண்டோ?'' என்று ஸரோஜா விம்மினாள்.

கணவன் சற்று நேரம் அவளையே பார்த்தான். பிறகு சிரித்துக்கொண்டே, ''அது சரி; ஸரோஜா, அடுத்த வீட்டுக்காரிக்குத் தினம் நாலு உதை விழுகிறதே; அதுதான் என்றைக்காவது உனக்கு நடந்ததுண்டோ? அதையும் நீ கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும்'' என்றான்.

—'கஹானியா'

மனிதனைப் பூலோகத்திலே வாழவைப்பது
இந்த விநோதப் பிராணிதானும்!

# சிலந்தி புரியும் உதவி

கீத் வார்னர்

ஸ்விட்ஜர்லாந்து சர்வகலா சாலை ஒன்றிலுள்ள ஆராய்ச்சிக் கூடத்தில் மயக்க மருந்தின் போதையில் சிலந்திகள் தாறுமாறாகக் கூடு கட்டுகின்றன. சமீபத்தில் கண்டு பிடித்து நோயாளிகளுக்குப் பயன்படுத்தும் சில மருந்துகளைக் கொடுத்தபோது அவை வழக்கம் போல் கூடு கட்ட முயன்றும் அப்படிச் செய்ய முடியவில்லை. 'வெரோனல்' என்ற மயக்க மருந்து கொடுத்ததால் ஒரு சிலந்தி கூடு கட்டிக்கொண்டிருக்கும்போதே பாதியில் கண்ணயர்ந்து விட்டது! சிலந்தி சகஜமாக இப்படிக் கண்ணயரவே அயராது. 'நெம்புடால்' என்ற தூக்க மருந்தைக் கொடுக்கவே, இன்னொரு சிலந்தி மிகவும் சின்னக் கூடு ஒன்று கட்டித் தனக்குத்தானே அவமானத்தைத் தேடிக்கொண்டது.



மருந்துவத் துறையிலே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகளுக்கு இவை பல விதங்களில் பயன்படுகின்றன. சாதாரணமாக, நோயாளிகளுக்குக் கொடுத்தால் இந்த மயக்க மருந்துகளால் என்ன விளைவுகள் நேரும் என்று இந்தச் சிலந்திகளைக் கொண்டு தெரிந்துகொள்கிறார்கள். பெர்ன் சர்வகலாசாலையில் டாக்டர் பீட்டர் விட் என்ற மருத்துவ நிபுணர் ஒரே சமயத்தில் வெவ்வேறு ஆசாமிகள் பத்துப் பேருக்கு ஒரே மயக்க மருந்தைக் கொடுத்துப் பார்த்தார்; அப்போது ஒவ்வொருவரும் வேறு வேறு விதமாக நடந்துகொண்டார்கள். இது மிகவும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஆராய்ச்சி; இதற்கு முன் மொத்தத்தில் எல்லா டாக்டர்களுமே ஒரே விதமான பலன்தான் கிட்டும் என்று முடிவு கட்டி எல்லாருக்குமே ஒரே மருந்துதான் கொடுத்து வந்தார்கள்.

ஆனால் பல நோயாளிகளைப் பரிசோதித்து அநுபவப்பட்ட டாக்டர் விட்டுக்கு வேறு விதமாகப் பட்டது.

முயல்கள், சுண்டெலிகள் இவைகளுக்கு இந்த மயக்க மருந்தைக் கொடுத்துப் பார்த்தார். அவைகளும் வேறு வேறு விதமாக நடந்துகொண்டன. சட்டென்று ஒரு நாள், 'சாதாரணச் சிலந்தியைக் கொண்டு மனித நரம்புகள் இயங்கும் விதத்தை அறியலாம்' என்பது நினைவுக்கு வந்தது. பத்துச் சிலந்திகளுக்கு இந்த மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தார். இவை எல்லாவற்றுக்கும் ஒரே

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 17-8-'57), கல்கத்தா.

அளவு மருந்து கொடுத்தபோது எல்லாம் ஒரே மாதிரியாக நடந்து கொண்டன; அதோடு மருந்து எவ்வளவு தூரம் பலித்திருக்கிறது என்பதை, அவை அப்போது பின்னியிருந்த கூட்டின் அளவைக் கொண்டு அறிய முடிந்தது. ஒவ்வொரு வகை மருந்து கொடுத்ததும் அவை கூடு கட்டினுல் ஒவ்வொரு விதமான தவறு நேர்ந்தது. இப்படிப் பல நாள் பல விதமாக இவைகளைச் சோதித்துப் பார்த்தார். இதிலிருந்து ஒவ்வொரு மருந்தினுலும் நரம்புகள் பாதிக்கப் பெறும்போது இன்ன இன்ன விளைவு நேரும் என்பது தெளிவாகத் தெரிந்தது. கூடு அமையும் விதத்தைக் கொண்டு இதை அறிய முடிந்தது.

ஒவ்வொரு புது மருந்தினுலும் என்ன நேரும் என்பதை அறியச் சிலந்திகள் இப்படிப் பயன்பட்டன.

இன்னும் ஒரு முக்கியமான விதத்திலும் மனித சமுதாயத்துக்குச் சிலந்திகள் நன்மை செய்கின்றன. இன்னும் கேட்டால், சிலந்திகள் இல்லாவிட்டால் மனிதன் இந்தப் பசுமையான மாநிலத்தில் வாழவே முடியாது என்றுகூடச் சொல்லிவிடலாம்; கணக்கற்ற பூச்சி புழுக்கள் அவனை முந்திக்கொண்டு அவனுக்கு உணவு கிட்டாதபடி செய்து சாக அடித்து விடும். பிரிட்டனில் ஆறு ஆண்டுகளாகச் சிலந்திகளைப் பற்றி ஆராய்ந்து வருகிறுர்கள் சில விஞ்ஞானிகள். அவர்கள் கண்ட முடிவுதான் இது.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் இரண்டு லட்சங் கோடி சிலந்திகள் ஆண்டுதோறும் பிரிட்டனிலுள்ள ஜனத்தொகைக்கு ஈடான நிறையுள்ள பூச்சிகளைத் தின்பதாக நிரூபித்திருக்கிறுர்கள். ஒரு சிலந்தி நாள் ஒன்றுக்கு, சாப்பிடும் ஆகாரம் எவ்வளவு தெரியுமா? ஒரு மனிதன் காலையில் ஒரு முழுக் காளையையும், பகலில் ஒரு காளையையும் ஐந்து ஆடுகளையும், இரவில் இரண்டு எருது, எட்டு ஆடு, நாலு பன்றி இவைகளையும், கடைசியாக நாலு அண்டா மீனையும் உண்பதற்கு ஈடான இரை தின்கிறது.

மனிதன் இன்று உயிரோடு இருப்பதே சிலந்தியைப் பொறுத்துத்தான் என்று எண்ணும்போது, விஷயம் ரசமாகவும் வேடிக்கையாகவுந்தான் படுகிறது! சிலந்தியைப்பற்றி இன்னும் இதைவிடக் கவர்ச்சியான தகவல்களும் உண்டு. சிலந்தி தேள் இனத்தோடு சம்பந்தம் உள்ளது. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் இது தெரிந்திருக்கும். பொதுவாகப் பெண்களுக்குச் சிலந்திகள் என்றுல் ஒரே திகில்; அலறிச் சாவார்கள். இருந்தாலும், பெண்கள் - அதுவும் 'பெண்களே உயர்ந்தவர்கள்' என்று கருதுவோர் - சிலந்தியைக் கவனிக்கவேண்டும். இயற்கையிலேயே எந்த இனத்திலும் பெண் சிலந்தி மாதிரி ஆணைவிட மிகவும் ஆபத்தான-மிகவும் வலிமை உள்ள-ஜந்து வேறு இல்லை. உதாரணமாக, ஓர் ஆறடி மனிதனை ஆண் சிலந்தியோடு ஒப்பிட்டு, பெண் சிலந்திக்கு ஈடாக ஒரு பெண்ணைத் தேடுவதாயிருந்தால் அவள் 80 அடி உயரம் உள்ளவளாகவும் 90 டன் எடை உள்ளவளாகவும் இருக்கவேண்டும். அது மட்டுமா? ஜீவ உற்பத்திக்கு ஆணைப் பயன்படுத்திக் கொண்டதும், பெண் சிலந்தி ஆணைத் தன் பெரிய மார்பகத்தில் அழுத்தி அணைத்துக் கொண்டு தின்று விடுகிறதென்றுல் பாருங்கள்!

ஆண் சிலந்திகளின் நிறம் பெண்களின் நிறத்தைவிடப் பளிச்சென்று இருக்கும். பின்னுல் தங்களுக்கு நேரப் போகும் பயங்கரமான முடிவை உணராமல், பாவம், இந்த ஆண்கள், பெண் சிலந்தி எதிரே ஒய்யாரமாக ஆடி அசைந்து காதல் புரிவதைப் பார்க்க வேண்டும்!

சிலந்திகள் கடிப்பதில்லை. தங்கள் கொடுக்கை இரையாகும் பிராணியின் உடலில் செலுத்தி ரத்தத்தை உறிஞ்சும். இந்தக் கொடுக்குகள் சிலந்தியின் தாடையில் இருக்கின்றன. சிலந்தியின் எட்டுக் கண்களுக்குக் கீழ் இருக்

கிறது தாடை. எட்டுக் கண்கள் இருந்தாலும் (மற்றும் பல பூச்சி களுக்கு இருப்பது போல் இவை தனித் தனிக் கண்ணுக இல்லே.) ஒரே கண்ணுக்குள்ள பார்வைதான் உண்டு. அதுவும் மங்கின பார்வை. ஸ்பரிச உணர்ச்சியினுல்தான் பெரும்பாலும் சமாளித்து வரு கிறது சிலந்தி; பல சிலந்திகள் தாங்கள் பிடித்த ஈக்களேயும் மற் றப் பூச்சிகளேயும் கொட்டும்போது விஷம் கக்கும்; ஈக்கள் சாக இந்த விஷமே போதும்! மனிதர் களின் உடம்பில்கூட இந்தக் கொடுக்குப் பாய்ந்து விஷம் ஏறும் என்று பலர் எண்ணிக்கொண் டிருந்தார்கள்; இது உண்மையல்ல. பெரும்பாலான சிலந்திகள் கொட்டு வதே யில்லே. அப்படிக் கொட்டி ஞலும் சற்று நேரம் வரை அந்த இடத்தில் எரிச்சல் இருக்கும்; அவ்வளவுதான். ஆனுல் ஆஸ்தி ரேலியாவில் உள்ள ட்ராப்-டோர் சிலந்தி, அமெரிக்காவிலுள்ள பிளாக்-விடோ (கறுப்பு விதவை), நியூஜீலந்திலும் வட ஆப்பிரிக்கா விலும் ஆஸ்திரேலியாவிலும் காணும் காட்டிபோ இவை இதற்கு விலக்கு. இவை மனிதனேக் கொட்டிஞல் ஆபத்து; சாவும் நேர லாம். ஆனுலும், மொத்தத்தில் சிலந்திகள் அதிசயப் பிராணிகள் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு வகைச் சிலந்தி இரை தேடக் குட்டை குளங்களில் மூழ்கும். அப்போது கனமான பொருள் ஒன் றைக் கவ்விக்கொண்டு முழுகும்; இரை தின்றதும் கல்லே விட்டு விடும்; நீர்க் கொப்புளம் கிளம்ப மறுபடியும் கப்பென்று அது மேலே எழும்பி வந்துவிடும். இன்னெரு வகைச் சிலந்தி, பறவைகள் எச்ச மிடுவது போல் கூடு கட்டும்; பறவை எச்சத்தை உண்டு வாழும் வண்ணுத்திப் பூச்சி, அது தன் உணவுதான் என்று ஏமாந்து அந் தக் கூட்டில் வந்து அமரும்; உடனே கூட்டிலுள்ள சிலந்தி, வண்ணுத்திப் பூச்சியைப் பிடித் துக்கொண்டு நிம்மதியாக உண்ணும்.

சிலந்திக் கூடு அல்லது ஒட்டடை யிலிருந்து பட்டை விட மிகவும் மெல்லியதாகவும் உறுதியாகவும் ஆடை நெய்திருக்கிருர்கள். என்ரு லும், சிலந்தியைக் கொண்டு அப்படி யாரும் அதிகமாகப் பணம் திரட்டியிருப்பதாகத் தெரிய வில்லே. ஒரே ஒரு பிரெஞ்சுக் காரர் மட்டும் இதற்கு விலக்கு. சில ஆண்டுகளுக்கு முன் அவர் ஆயிரக்கணக்கில் சின்னச் சின்னச் சிலந்திகளே வளர்த்து வொயின் வியாபாரிகளுக்கு விற்றுப் பணங் குவித்தார். புதிய வொயின் அடைத்த புட்டிகளின்மேல் இந்தச் சிலந்திகளே ஏவி விட்டால் போதும்; செக்கச் செவேல் என்று சிறந்த வொயின் இருப்பதுபோல் தோன் றும்படி கூடு கட்டி வைக்குமாம்!

## வாடகைப் பெருமை

வீண் டம்பம் உள்ள ஒரு பெண், வாடகை அதிக மான ஒரு வீடு பிடிக்கும்படி தன் கணவனே ஓயாமல் அலட்டிக்கொண் டிருந்தாள்.

கணவன் இந்தத் தொல்லே சகிக்காமல் பல நாள் தவித்தான்.

அப்புறம் ஒரு நாள் எங்கேயோ வெளியே போயிருந்த அவன் விடு விடு என்று திரும்பி ஓடி வந்து வெகு உற்சாகத்துடன் வீட்டுக்குள்ளே புகுந்து மனே வியைப் பார்த்து, ''கடைசியாக நாம் ஜாகை கிளப்பத் தேவையே இல்லாது போய்விட்டது. நம் வீட்டுக் காரரே வாடகையை உயர்த்திவிட்டார்'' என்ருன்.

—'கான்ஸ்டெல்லேஷன்,' பாரிஸ்.

**சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்தக் கோட்டை ஆந்திர ராஜ்யத்தின் கேந்திரமான ஹைதராபாது அருகில் உள்ளது.**

# கோல்கொண்டா கோட்டை

**என். வி. ஆர். சாமி**

தென்னிந்தியாவில் வேலூர்க் கோட்டை எப்படி முக்கியம் வாய்ந்ததோ, அப்படியே வட இந்திய சரித்திரத்தில் கோல்கொண்டா கோட்டை மிகவும் புகழ் வாய்ந்தது. பாழடைந்த அரண்மனைகள், மண்டபங்கள், மசூதிகள், அகழிகள் முதலியவை நிறைந்து பார்ப்பவர் மனத்தை மிகவும் கவர்ச்சியடையச் செய்வதுடன், சரித்திரத்தில் பழங்காலத்து அரசர்களைப்பற்றியும் அவர்களுடைய ஆட்சியைப்பற்றியும் நாம் படித்ததை நேருக்கு நேர் காண்பது போல் அங்கே நமக்குத் தோன்றுகிறது.



கோட்டையின் நுழைவாயில்

குதுப்ஷா அரசர்களின் தலைநகராக இருந்த கோல்கொண்டா, ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகரான ஹைதராபாதுக்குச் சமீபத்தில் இருப்பதால், வெளியூர்களிலிருந்து ஹைதராபாதுக்கு வரும் ஒவ்வொருவரும் கோல்கொண்டாவைப் பார்க்கத் தவறுவதில்லை. மொகலாயர்கள் படையெடுப்புக்கு முன்பு அநேக ஆண்டுகள் வரையில் கோல்கொண்டா வைர வேலைகளுக்குப் பெயர்பெற்று விளங்கி வந்தது. 'கோஹிநூர்' வைரம் கோல்கொண்டாவிலிருந்துதான் சென்றதாம்.

ஹைதராபாது நகரத்துக்கு மேற்கே சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள இந்த ஊருக்குப் பஸ் போக்குவரத்து இருக்கிறது. இதைத் தவிர, குதிரை வண்டிகளும் சைக்கிள் ரிக்ஷாக்களும் நிறைய வந்து போகின்றன. புராதனக் கோட்டைகளையும், இடிந்து பாழடைந்து கிடக்கும் மண்டபங்கள், அரண்மனைகள், குதுப்ஷா அரசர்களின் புராதன சின்னங்கள் முதலியவைகளையும் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இந்தியாவுக்கு வரும் அநேக யாத்திரிகர்கள் கோல்கொண்டாவுக்கு வந்து செல்லுகிறார்கள்.

1358 முதல் 1375 வரையில் இதை ஆண்டுவந்த வாரங்கல் ராஜாக்களில் ஒருவர் இந்தக் கோட்டையைச் சுற்றிலும் ஒரு பெரிய மண் சுவர் எழுப்பினார். 1357-இல் தஸ்தவேஜின் மூலம் கோல்கொண்டா பாமினி அரசர்களின் கைக்கு மாறியது. சில வருஷங்களுக்குப் பின் பாமினி ராஜ்யம் சீர்குலைந்திருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, கோல்கொண்டா ராஜதானியின் கவர்னராயிருந்த குலி குதுப்ஷா சுல்தான் என்பவர் 1512-இல் தம்மை

காப்பிரைட்: தினமணி சுடர் (தமிழ்: 2-6-'57), சென்னை.

அந்த ராஜதானியின் அரசராகப் பிரகடனம் செய்துகொண்டு அதற்கு 'முகம்மது நகர்' என்று பெயரிட்டார். இருந்தபோதிலும் கோல்கொண்டா என்ற பழைய பெயரே வழக்கத்தில் இருந்து வந்தது. கோட்டையைச் சுற்றிலும் இருந்த சுவரை, அவர் காலத்தில் பலமாகக் கட்டினார்கள்.

சில வருஷங்களில் அங்கே தண்ணீர்க் கஷ்டம் அதிகம் ஏற்படவே, தலைநகரை மாற்றத் தீர்மானித்தார்கள். மூஸி ஆற்றங்கரையில் இப்போது ஹைதராபாது நகரம் இருக்கும் இடத்துக்குத் தலைநகரை மாற்றி, அதற்குப் 'பாக் நகர்' என்று பெயரிட்டார்கள்.

1512 முதல் 1687 வரையில் மொகலாய வம்சம் அரசாட்சி புரிந்து வந்தது. இந்தக் காலத்தில் குதுப்ஷா அரச வம்சத்தில் இறந்தவர்களையெல்லாம் கோல்கொண்டாவில் அடக்கம் செய்து வந்தார்கள். 1687-இல் ஔரங்கசீப் இதை முற்றுகையிட்டு இதன் மீது படையெடுக்கவே, பீரங்கிகளுக்கும் குண்டுகளுக்கும் இலக்காகிக் கோட்டை மிகவும் சிதறுண்டது.

தரை மட்டத்துக்குமேல் சுமார் 400 அடி உயரத்தில் உள்ள இந்தக் கோட்டை, கற்பாறையான ஒரு பெரிய குன்றின்மீது அழகாக அமைந்திருக்கிறது. இதைச் சுற்றி நான்கு மைல் நீளத்துக்கு எழும்பியிருக்கும் கருங்கல் சுவரின்மீது சுமார் அரை வட்ட வடிவமாகத் தூண்கள் (Bastions) அழகாக அமைந்திருக்கின்றன. அந்தச் சுவரில் அநேக இடங்களில் கதவு பொருத்தி, காவல் புரிய அதன் பக்கங்களில் பெரிய பெரிய பீரங்கிகள் வீற்றிருக்கின்றன. மதில் சுவரைச் சுற்றிலும் அநேகம் சிறு குன்றுகள் தென்படுகின்றன.

கோட்டையின்மேல் உச்சியில் நின்றுகொண்டு பார்த்தால், சுமார் இருபது மைல் தூரத்துக்கு எல்லாம் தெரிகின்றன. வெளிப்புறத்திலிருந்து கோட்டைக்குள் புகவேண்டுமானால், ஒன்றன்பின் ஒன்றாகச் சுமார் ஏழு சுவர்களைத் தாண்டிச் செல்ல வேண்டும்.



குதுப்ஷா நிறுவிய மசூதி



கோட்டையின் பின்புறத் தோற்றம்



கோட்டையின் மற்றொருபுறத் தோற்றம்



கோட்டையின் தூரத்துக் காட்சி

கோட்டையைச் சுற்றிலும் எட்டுப் பெரிய வாயில்கள் இருக்கின்றன. ஆனால் இவைகளில் நான்கு வாயில் கதவுகள்தான் நல்ல நிலையில் இருந்து வருகின்றன. ஒவ்வொரு வாயிலுக்கும் பிரம்மாண்டமான இரட்டைக் கதவுகள் போட்டிருக்கிறார்கள். அந்தக் கதவுகளின் முன்புறம் கனத்த இரும்புப் பட்டைகளும், அவற்றின்மீது கூர்மையும் கெட்டியுமான இரும்புக் கம்பிகளும் பொருத்தியிருக்கிறார்கள். கம்பிகள் என்று கூறுவதைவிட இரும்புக் கடப்பாரை என்று சொன்னாலும் மிகையாகாது. ஏனென்றால், அவைகள் அவ்வளவு கூர்மையாயும் கெட்டியாயும் இருக்கின்றன.

எதிரிகளின் யானை கோட்டை வாயில் கதவுகளை முட்டித் தாக்கினால், கூர்மையான இரும்புக் கம்பிகளால் யானையின் தலை காயமுற வேண்டும் என்று இப்படிச் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

கோட்டையின் கீழ்ப்புறம் அமைந்திருக்கும் பிரதான வாயிலுக்குத் 'தார்வாஸா' என்று பெயர். ஔரங்கசீப் இந்தக் கோட்டையின்மீது படையெடுத்து வெற்றி அடைந்ததன் ஞாபகார்த்தமாக, அவர் இந்தப் பெயரிட்டாராம். இந்த வாயிலைத் தாண்டி அடுத்த வாயிலுக்குப் போவதற்குள், சுமார் அரைப் பர்லாங்கு தூரத்துக்கு வழியின் இரு புறமும் படை வீரர்களின் வீடுகள் அமைந்திருக்கின்றன. அதன்பிறகு பிற வாயில்களைத் தாண்டிச் சென்றால் கோட்டை அமைந்திருக்கும் குன்றை அடையலாம்.

குன்றின்மீது அமைந்திருக்கும் பிரதானக் கோட்டையை அடையக் கரடுமுரடான கருங்கல் படிகள் மீது நடந்து குன்றின்மேல் செல்ல வேண்டும். அந்தப் பெரிய கோட்டையைச் சுற்றி நான்கு புறமும் சுவர்கள் இருக்கின்றன. நடுவே அநேகம் பெரிய மண்டபங்களும், அறைகளும் நம்மைப் பயமுறுத்தும்படி அமைந்திருக்கின்றன. அரசர் தர்பார் நடத்தும் இடம், குளிக்கும் அறை, ராணியின் குளிக்கும் இடம் என்று பலவாறாக இருக்கின்றன. நம்முடன் கூட வரும் வழிகாட்டி அவைகளைப் பற்றியெல்லாம் விவரித்துக் கூறும்போது, நமக்குப் பயங்கரமாய்த்தான் இருக்கிறது.

ஓர் அறையில் 20·25 அடி நீளமுள்ள துப்பாக்கிகள் குவிந்து கிடக்கின்றன. மற்றோர் அறையில் ஏராளமான பெரிய இரும்புக் குண்டுகள் குவிந்து கிடக்கின்றன.

பிரதானக் கோட்டையின் மேலிருந்து கீழே இறங்கும் பொழுது, ஒரு சிறிய கோயில் இருக்கிறது. அதில் இப்பொழுதும் அங்குள்ளவர்கள் பூஜை நடத்தி வருகிறார்கள். குதுப்ஷா அரசர்களின் காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய பிரதம மந்திரி 'மாதண்ணா'வின் பெயர் இந்தக் கோயிலுக்கு வழங்கி வருகிறது.

கோல்கொண்டாவில் மற்றெல்லாவற்றையும் விட மிகவும் முக்கியம் வாய்ந்தவை குதுப்ஷா அரசர் நிறுவிய மசூதிகள். கோட்டைகளுக்கு வடக்கே சுமார் அரை மைல் தூரத்தில் இவைகள் அமைந்திருக்கின்றன. பழைய காலத்தில் சிற்ப வேலைப்பாடுகள் எவ்வளவு நேர்த்தியா யிருந்தன என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த மசூதிகள், ஔரங்கசீப் படையெடுப்பின்பொழுது ஏற்பட்ட தாக்குதல்களால் அநேக இடங்களில் சேதமுற்றிருக்கின்றன. ஒவ்வொரு மசூதியின்மேலும் நான்கு

மூலைகளிலும் உள்ள உயரமான கோபுரங்களும், அவைகளின் நடுவே உள்ள வட்டமான மண்டபமும் மிகவும் அழகு வாய்ந்தவை. உட்புறம் முழுவதும் பீங்கான் கற்களின்மேல் எனுமல் பூசியிருக்கிறது. ஹைதராபாது நகரத்தை நிர்மாணித்த குலி குதுப்ஷா அரசர் கட்டிய மசூதிதான் மிகச் சிறந்தது. சுமார் 22 அடி உயரமுள்ள தூண்களுடைய அந்தக் கட்டிடம் 180 அடி உயரம் இருக்கிறது. கீழ்ப்பாகம் தரையில் சலவைக் கல் போட்டிருக்கிறது.

கோல்கொண்டா கோட்டையைச் சுற்றிலும் வெளிப்புறத்தில் 50 அடி அகலமுள்ள ஒரு பெரிய அகழி அமைந்திருக்கிறது. எதிரியிடமிருந்து பாதுகாப்பாக இது ஏற்பட்டதாம். இதைத் தவிர, கோட்டைகளுக்குத் தென்புறத்தில் மூஸி நதி கிழக்கு மேற்கில் ஓடுகிறது.

கோட்டையின் மதில் சுவர், அதற்குள் இருக்கும் பல சிறு கோட்டைகள், மண்டபங்கள், பல ஆயுதங்கள் எல்லாவற்றையும் காணும்போது, புஸ்தகத்தில் முன் கால சரித்திரத்தைப் படித்த நமக்கு, அந்தக் காலத்தில் நாம் வாழ்ந்து வந்தது போலவே ஞாபகம் ஏற்படுகிறது.

ஹைதராபாதுக்கு வருபவர்கள் எல்லாரும் கோல்கொண்டாவைப் பார்க்கத் தவறுவதில்லை. என்றாலும், கோல்கொண்டா கோட்டையைப் பார்ப்பதற்கென்றே இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் அங்கு வந்து, எல்லாவற்றையும் பார்த்துப் பிரமித்துப் போகிறார்கள்.

## வீடும் சிறையும்

வடக்கு ரோடீஸியாவில் சிறு நகரம் ஒன்றில் ஒரு சிறை முகாமில் இருந்த கைதி ஒருவன் ஒரு நாள் தப்பி ஓடிவிட்டான். மற்றக் கைதிகளெல்லாம் இதனால் பரபரப்புற்றார்கள். அவனைத் தேடிப் பிடிப்பதற்காகக் கைதிகள் கோஷ்டி ஒன்றே புறப்பட்டது.

எவ்வளவு தேடியும் பயனில்லை. ஆனால், இரண்டு நாள் கழித்து, தானாகவே அந்தக் கைதி திரும்பி வந்தான்.

''என் ஊருக்குச் சென்று, குடும்பத்தினருக்கு என் க்ஷேமாதிசயத்தைச் சொன்னேன். இங்கே வாழ்க்கை மிகவும் சுகமாயிருப்பதாகத் தெரிவித்து, 'நீயும் என்னோடு வருகிறாயா?' என்று தம்பியைக் கேட்டேன். இதோ இருக்கிறான் பாருங்கள் அவன்'' என்று தன் தம்பியை மற்றவருக்கு அறிமுகம் செய்து வைத்தான்!

—'ரோடீஸியா ஹெரால்ட்'

## குழந்தைப் பெருமை

நாம் பிறரிடம் நம் குழந்தையைப்பற்றிப் பெருமையாய்ப் பேசிக்கொள்வது பிறருக்கு வேதனையாயிருக்கிறது. இதற்குக் காரணம்: ஒன்று, அவர்களுக்குக் குழந்தை இருப்பது; அல்லது குழந்தை இல்லாமல் இருப்பது: அவ்வளவுதான்.

—டான் பென்னெட்

# சுந்தனும் உபசுந்தனும்

★



பாண்டவர் திரௌபதியை மணந்துகொண்டு துருபதனின் நகரத்தில் வாழும் செய்தியை ஒற்றர்கள் மூலம் எல்லா அரசர்களும் அறிந்தார்கள்; திருதராஷ்டிரன், பீஷ்மர் முதலியோரை இகழ்ந்தார்கள். துரியோதனன் படை திரட்டிக்கொண்டு பாஞ்சாலம் சென்று போர் தொடுத்தான். அர்ஜுனன் அவனைத் தோற்றோடும்படி செய்தான். அஸ்தினாபுரம் திரும்பி வந்தான் துரியோதனன்.

திருதராஷ்டிரன் பாண்டவர்களைத் திரௌபதியுடன் அழைத்துவரச் செய்தான். தருமனுக்கு முடிசூட்டிப் பாதி ராஜ்யத்தையும் கொடுத்தான். ''காண்டவப் பிரஸ்தம் என்ற இடத்தில்தான் ஆயுஸ், புரூரவஸ், நகுஷர், யயாதி முதலிய நம் முன்னோர்கள் வாழ்ந்திருந்தார்கள். பிறகு அந்த ராஜதானியை முனிவர்கள் பாழாக்கிவிட்டார்கள். இப்பொழுது அங்கே சென்று நகரத்தை நிர்மாணம் செய்து வாழலாம். உன்னிடம் அன்புகொண்டு நான்கு வருணத்தவரும் மற்றப் பிராணிகளும் அங்கே வந்து சேரலாம், நீ அங்கிருந்தவாறே நன்றாக அரசாட்சி செய்யலாம்'' என்று கூறித் திருதராஷ்டிரன் பாண்டவர்களை வழியனுப்பினான். ஆயினும், அப்போது அவர்களைத் தொடர்ந்து செல்லும் குடிகளைப் போகாதபடி தடுத்துவிட்டான்.

பாண்டவர் காண்டவப்பிரஸ்தத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கிருஷ்ணர் தேவேந்திரனை மனத்தால் நினைத்து வரச் செய்தார். இந்திரன் வாயிலாக விசுவகர்மனைக் கொண்டு மிகவும் அழகான ஒரு நகரத்தை அங்கே நிர்மாணிக்கும்படி செய்தார். அதற்கு இந்திரப்பிரஸ்தம் என்ற புதிய பெயரையும் சூட்டினார். அங்கே பாண்டவர்களைத் திரௌபதி

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல, கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.



யுடன் இன்பமாக வாழும்படி செய்தார். தருமனும் நீதி தவறாமல் அரசு செலுத்தி வந்தான்.

ஒரு நாள் தருமனைப் பார்க்க விரும்பி, தேவரிஷியான நாரதர் அங்கு வந்தார். அரசன் அவரை முறைப்படி எதிர்கொண்டு வரவேற்று வணங்கி உபசரித்தான். அழகிய ஆசனம் அளித்து அதில் அமரச் செய்தான். அர்க்கியம் கொடுத்து ராஜ்யத்தையே அவர் திருவடியில் அர்ப்பணம் செய்தான். முனிவரும் அதை ஏற்றுக் கொண்டு ஆசி கூறி அரசனை ஆசனத்தில் அமரும்படி சொன்னார். அரசனும் அமர்ந்து திரௌபதியை அழைத்துவரச் செய்தான். உடனே அவள் முறைப்படி வந்து முனிவருடைய திருவடி பணிந்தாள். முனிவர் அவளுக்கும் ஆசி கூறி அனுப்பினார்.

பின்பு அவர் தனிமையில் பாண்டவரிடம், ''நீங்கள் திரௌபதி காரணமாகப் பகை கொள்ளும்படி நடந்துகொள்ளக் கூடாது. உங்கள் அன்பு மாறாமல் இருக்கும்படி ஓர் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். சுந்தன், உபசுந்தன் என்ற வலிமை மிக்க இரண்டு அசுரர்கள் திலோத்தமைக்காக அடித்துக் கொண்டு மடிந்ததுபோல் நீங்கள் மடிந்து போகக்கூடாது'' என்று, அந்த அசுரர்களின் வரலாற்றைக் கூறலானார்:

* * *

ஹிரண்யகசிபுவின் வம்சத்தில் நிகும்பன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவனுக்கு இரண்டு மைந்தர்கள் பிறந்தார்கள்; சிறந்த வீரர்கள்; பயங்கரமான பராக்கிரமம் உள்ளவர்கள்; எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். சேர்ந்தே உண்பார்கள். ஒரே குணம், ஒரே செயல் உடையவர்கள்; எந்தக் காரியத்தைச் சாதிப்பதற்கும் சேர்ந்தே போவார்கள். அவர்களைக் காண ஒரே உயிர்,

இரண்டு உடல்களில் இருப்பது போல் தோன்றும்.

இருவரும் மூன்று உலகத்தையும் வெல்லத் தீர்மானித்தார்கள். தீட்சை பூண்டு விந்திய மலைக்குச் சென்று கடுந்தவம் செய்தார்கள். நீண்ட காலம் ஜடை தரித்து மரவுரி உடுத்துப் பசி தாகத்தால் வாடியவண்ணம் தவத்தில் ஆழ்ந்தார்கள். உடல் முழுவதும் புழுதி படிந்திருந்தது. வாயுவையே உண்டார்கள். கால் கட்டை விரல்களை ஊன்றிக்கொண்டு உயரத் தூக்கிய கைகளுடன் கண் திறக்காமல் வெகு காலம் தவம் செய்தார்கள். உடம்பிலிருந்து மாமிசத்தை அறுத்து அக்கினியில் ஹோமம் செய்தார்கள். அவர்களுடைய தவத்தின் வெம்மையால் விந்திய மலை புகையைக் கக்கத் தொடங்கியது. ஆச்சரியமான இந்தத் தவத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சினார்கள். ரத்தினங்களைக் கொடுத்து அவர்களை ஏமாற்ற முயன்றார்கள். பெண்களை அனுப்பி மயக்கப் பார்த்தார்கள். இன்னும் பல வழியில் பாடுபட்டு அவர்களுடைய தவத்தைக் கலைக்கக் கருதினார்கள். ஒன்றும் பயன்படாமல் போகவே தேவர்கள் சோர்ந்துவிட்டார்கள்.

அப்பொழுது பிரம்மதேவர் அவர்கள்முன் தோன்றி, வேண்டிய வரம் கேட்கும்படி சொன்னார். இருவரும் அவரைக் கண்டு கை கூப்பி வணங்கினார்கள். ''எங்கள் தவத்தால் தாங்கள் திருப்தி அடைந்திருந்தால் ஒன்று அருள வேண்டும்: நாங்கள் மாயையை அறிந்து, அஸ்திரங்களையும் உணர்ந்து, பலம் மிகுந்தவர்களாகவும் விரும்பிய உரு எடுத்துக் கொள்ளும் திறமையுடனும் அமரராக இருக்கும்படி வரம் கொடுங்கள்'' என்று வேண்டினார்கள்.

''அமரத் தன்மையைத் தவிர நீங்கள் கேட்ட யாவும் உங்களுக்கு உண்டாகும். நீங்கள் தவம் செய்யும்பொழுது அமரத்தன்மையை விரும்பவில்லை. மூவுலகையும் வெல்லவேண்டும் என்றுதான் எண்ணினீர்கள். அதனால் உங்களுக்குத் தேவத்தன்மையை நான் கொடுக்க விரும்பவில்லை'' என்றார் பிரம்மதேவர். உடனே அசுரர்கள், ''மூவுலகிலும் எங்கள் இருவரைத் தவிர மற்ற எவராலும், எதனாலும் எங்களுக்குப் பயம் ஏற்படாமல் இருக்க வரம் கொடுங்கள்'' என்று வேண்டினார்கள். பிரம்மதேவர், ''அப்படியே'' என்று சொல்லி அவர்களுடைய தவத்தை நிறுத்திவிட்டுப் பிரம்மலோகம் சென்றார்.

அசுரர்கள் வரம் பெற்று மகிழ்வுடன் பூவுலகம் வந்து ஜடையைப் பிரித்து வாரி முடிந்துகொண்டார்கள். சிறந்த ஆடை உடுத்து அணிகளை அணிந்து இன்பமாகக் காலங் கழித்தார்கள். அந்த அணிகளின் ஒளி எப்பொழுதும் எங்கும் நிலவு பரவியிருப்பதுபோல் சுடர்விட்டது. அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் உண்டு களித்துப் பாடி இன்புற்று வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த நகரமே இன்பமயமாக இருந்தது. இவ்வாறு ஆனந்தத்தில் மூழ்கிக்கிடக்கும் அவர்கள் பல ஆண்டுகளை ஒரு நாள் போல் கழித்தார்கள்.

சுந்தனும் உபசுந்தனும் ஒரு நாள் மூவுலகையும் வசப்படுத்த எண்ணினார்கள். பலருடன் கலந்து ஆலோசித்து, சேனையைத் திரட்டிப் போருக்குப் புறப்பட்டார்கள். சேனைகள் பின்தொடர, மங்கல வாத்தியங்கள் முழங்க, துதிப் பாடகர்கள் புகழ் மாலை சொரிய, மகிழ்வுடன் அரக்கர் ஆகாயத்தில் கிளம்பித் தேவலோகம் சென்றார்கள். தேவர்கள் அவர்கள் வருவதையும் அவர்களுக்குப் பிரம்மதேவர் கொடுத்திருக்கும் வரத்தையும் எண்ணி வேறு வழியின்றித் தேவலோகத்தை விட்டுப் பிரம்மலோகம் சென்றார்கள்.

அரக்கர்கள் இந்திரலோகத்தை வென்றார்கள். யட்சர்கள், ராட்சசர்கள், ஆகாயத்தில் வாழும் மற்றவர்கள் எல்லாரையும் கொன்றார்கள். பாதாளம் சென்று நாகர்களையும் வென்றார்கள். கடலில் வாழும் 'மிலேச்சர்' என்ற ஜாதியினரையும் அடக்கினார்கள். பிறகு பூமிக்கு வந்து சேனையைப் பார்த்து, ''அரசர்களும் அந்தணர்களும் யாகம் முதலியவற்றைச்

செய்து தேவர்களின் வலிமையையும், வீரத்தையும், செல்வத்தையும் வளர்க்கிறார்கள். ஆகவே, அரசர்களையும் அந்தணர்களையும் ஒழித்துக் கட்டுங்கள்'' என்று உத்தரவிட்டார்கள். அப்படியே சேனைகள் ஆசிரமங்களுக்குச் சென்று முனிவர்கள் செய்யும் அக்கினிஹோத்திரம் முதலியவற்றை நீர் கொட்டி அணைத்தன. அவர்கள் இட்ட சாபம் பிரம்மதேவர் அளித்த வரத்தால் அசுரர்களை ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, அனைவரும் பயந்து ஓடி ஒளிந்தார்கள். அரக்கர்கள் அவர்களைக் கொல்வதற்காக மதயானையின் உருவம் கொண்டார்கள்; அவர்கள் மறைந்திருக்கும் இடத்துக்குச் சென்று அவர்களைக் கொன்றார்கள். சிங்கமாகவும் புலியாகவும் தோன்றி முனிவர்களை வதைத்தார்கள். பூவுலகம் முழுவதும், ''ஹா ஹா'' என்று கதறத் தொடங்கியது. தேவ காரியங்களும் பிதுரு காரியங்களும் நின்றுவிட்டன. அரசரும் அந்தணரும் அழிந்தார்கள். வைசியரும் தம் வேலையைச் சரிவரச் செய்ய முடியவில்லை. எங்கும் எலும்பும் மண்டையோடும் சிதறிக் கிடந்தன.

இவ்வாறு உலகத்தை அழித்துப் பகைவரின்றி அசுரர்கள் குருக்ஷேத்திரத்தில் இருந்துகொண்டு அரசு செலுத்தி வந்தார்கள். தேவரிஷிகளும் சித்தரும் மற்றப் பெரியோர்களும் உலகத்தின் நிலையைப் பார்த்து மனம் வெதும்பினார்கள்; பிரம்மதேவரிடம் சென்று சுந்தனும் உபசுந்தனும் செய்யும் கொடுமையைப்பற்றிக் கூறினார்கள். அப்பொழுது அங்கே கூடியிருந்த தேவர்களும் தக்க சமயம் கிடைத்ததால் தமக்கு நேர்ந்த துன்பத்தை அவரிடம் சொல்லி முறையிட்டார்கள். உடனே பிரம்மதேவர் சுந்தனையும் உபசுந்தனையும் கொல்லவேண்டி அதற்குரிய வழியையும் தீர்மானித்தார். விசுவகர்மனை அழைத்தார். அனைவர் மனத்தையும் கவரக்கூடிய ஒரு பெண்ணைப் படைக்கும்படி உத்தரவிட்டார். விசுவகர்மனும் அப்படியே செய்வதாக வாக்களித்தான். உலகில் உள்ள அழகிய பொருள் ஒவ்வொன்றிலிருந்தும் சாரத்தைத் திலத்தின் (எள்) அளவு எடுத்து ஓர் அழகிய பெண்ணைப் படைத்தார். அவள் உலகிலேயே ஒப்பற்ற பெண்ணாக விளங்கினாள். அவள் உடலில் மக்கள் எந்த இடத்தைப் பார்த்தாலும் அவர்கள் நோக்கு அங்கேயே பதியுமாறு திகழ்ந்தாள். அவள் பிரம்மதேவரிடம் சென்று, ''என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டாள். அவர் அவளுக்கு அனைவர் கண்களையும் மனத்தையும் கவரும் வரத்தைக் கொடுத்தார். அழகிய பொருள்களின் சாரத்தைத் 'தில'த்தின் (எள்) அளவில் எடுத்துப் படைத்ததால் திலோத்தமை என்ற பெயரையும் அவளுக்குச் சூட்டினார். ''திலோத்தமே! நீ சுந்தனும் உபசுந்தனும் இருக்கும் இடம் சென்று அவர்களை மயக்கி உனக்காக அவர்கள் சண்டையிடும்படி செய்யவேண்டும்'' என்றார். அவள், ''அப்படியே ஆகட்டும்'' என்று கூறிப் பிரம்மதேவரை வணங்கினாள். மும்மூர்த்திகளும், இந்திராதி தேவரும், முனிவர்களும் இருக்கும் அந்தச் சபையை அவள் வலம் வந்தாள். அவள் நான்கு திசைகளில் வரும்பொழுதும் அந்த அந்தத் திசைகளிலும் முகத்தை உண்டாக்கிக்கொண்டு ருத்திரர் அவளைப் பார்த்தார். இந்திரன் உடல் முழுவதும் கண்களை வைத்துக்கொண்டு அவளைப் பார்த்ததால் ஆயிரங் கண்ணன் ஆனான். இவ்வாறு பிரம்மதேவரைத் தவிர எல்லாத் தேவர்களும் முனிவர்களும் அவளைப் பார்த்து மயங்கினார்கள்.

திலோத்தமை விடை பெற்றுச் சென்றவுடன் பிரம்மதேவர், ''காரியம் கைகூடிவிட்டது'' என்றார். தேவர்களும் முனிவர்களும் அவ்வாறே எண்ணினார்கள். பிரம்மதேவர் சபையோருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

அரக்கர் இருவரும் உலகத்தை வென்று இன்பத்தில் ஆழ்ந்து, பெண்கள் சூழ, நறுமணம் வீசும் மலர்களை அணிந்து, சந்தனம் பூசிக் குடித்து மெய்மறந்து

காலங் கழித்துவந்தார்கள். ஒரு நாள் இருவரும் விந்திய மலையின் சாரலில் பூத்து எழிலுற்றிருக்கும் தேக்கமரக் காடுகளில் சில பெண்களுடன் வீற்றிருந்தார்கள். பெண்களில் சிலர் பாடினார்கள்; சிலர் வாத்தியம் வாசித்தார்கள். அந்தச் சமயத்தில் திலோத்தமை சிவந்த ஆடை அணிந்து மயக்கும் தோற்றத்தோடு மலர் கொய்து கொண்டே அசுரர்களின் முன் தோன்றினாள். குடித்து மயங்கிக் கிடக்கும் அசுரர்கள் அவளைப் பார்த்தவுடனே காமம் மேலிடக் குதித்து அவள் அருகில் சென்று அவளை வேண்டினார்கள். சுந்தன் அவளுடைய வலக் கையைப் பற்ற, உபசுந்தன் அவள் இடக் கையைப் பற்றிக்கொண்டான். வரம், பணம், குடி மூன்றினாலும் மதி இழந்த அரக்கர் கடைக்கண் காட்டி அவளைத் தம்வசம் அழைத்தார்கள்.

திலோத்தமை சுந்தனை வலக் கண்ணாலும், உபசுந்தனை இடக் கண்ணாலும் பார்த்தாள். ''இவள் என் மனைவி; உனக்கு மதனி'' என்றான் சுந்தன். ''இவள் என் மனைவி; உன் மருமகள்'' என்று உபசுந்தன் கூறினான். இவ்வாறு, ''இவள் எனக்குத்தான்; உனக்கில்லை'' என்று கூறிக் கொண்டு, சண்டையிடத் தொடங்கினார்கள். கதாயுதத்தை எடுத்து அடித்துக்கொண்டார்கள். முடிவில் உயிர் இழந்து தரையில் கவிழ்ந்து சாய்ந்தார்கள். சூரியனும் சந்திரனும் ஆகாயத்திலிருந்து நழுவிப் பூமியில் விழுந்திருப்பது போல் இருந்தது இந்தக் காட்சி. அவர்களின் மனைவிமார் அங்கிருந்து பயந்து ஓடிவிட்டார்கள். மற்ற அரக்கர்கள் வருத்தத்தாலும் பயத்தாலும் என்ன செய்வது என்று அறியாமல் பாதாளம் சென்றார்கள்.

அப்பொழுது பிரம்மதேவர் திலோத்தமையைப் பாராட்டத் தேவர்களுடன் அங்கே தோன்றினார். அவளுக்கு வேண்டிய வரன் கொடுப்பதாகவும் சொன்னார். பகவானிடம் பக்திதான் தனக்கு வேண்டும் என்று அவள் பிரம்ம தேவரை வேண்டினாள். அவரும், ''அப்படியே'' என்று கூறி, ''நீ ஆதித்தன் இருக்கும் உலகில் இருப்பாய். ஆதித்தனின் ஒளியால் அங்கு உன்னை எவரும் பார்க்க முடியாது. எனவே, உனக்குப் பயமில்லை'' என்று அருள் புரிந்தார்.

* * *

''திலோத்தமைக்காக அந்த அசுரர்கள் பகைகொண்டு மடிந்தது போல் நீங்களும் திரௌபதிக்காகப் பகைவர்கள் ஆகிச் சீரழியக் கூடாது. ஆகவே, அப்படி நேராத படி ஓர் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும்'' என்றார் நாரதர்.

பாண்டவர்களும் முனிவரின் முன்னிலையிலேயே, ''திரௌபதி ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொருவர் வீட்டில் வசிக்கவேண்டும்'' என்றும், ''அப்பொழுது தனிமையில் இருக்கும் அவர்களை மற்றவர்கள் பார்த்தால் விரதம் பூண்டு ஓர் ஆண்டு காட்டில் வாழவேண்டும்'' என்றும் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். இந்த விரதத்தைத் தவறாமல் கடைப்பிடித்துப் பாண்டவர் இன்புற்று வாழ்ந்து வந்தார்கள்.

### நாணயமான வேலை

நாணயமான வேலை செய்து சம்பாதிப்பது மிகவும் சுலபமான காரியம். அதில் போட்டி மிகவும் குறைவு.

—'ந்யூ யார்க் மிரர்'

# தாவர உணவு மகாநாடு

★

தாவர உணவுப் பிரசாரம் செய்பவரின் உலக மகா நாட்டு நிகழ்ச்சிகள் நவம்பர் மாதம் இந்தியாவின் பல பகுதிகளில் நடக்கப் போகின்றன. ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரசாதே மகாநாட்டைத் துவக்கி வைக்கப் போகிறுர். ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் நூற்றுக்கு மேற்பட்ட முக்கியஸ்தர்கள் பிரதிநிதிகளாய் வந்து அதில் கலந்துகொள்ளப் போகிறுர்கள். மகாநாடு பம்பாயில் நவம்பர் 9-12, டில்லியில் 14-16, காசியில் 17-18, கல்கத்தாவில் 21-24, சென்னையில் 28-30 தேதிகளில் நடைபெறும். மகாநாட்டுத் தலைவி ருக்மிணி தேவி. தென்னிந்தியப் பகுதியின் காரியதரிசி ஸ்ரீமதி ஸரோஜினி வரதப்பன், 8, வெஸ்ட்காட் ரோடு, சென்னை-14. பிரிட்டிஷ் தாவர உணவுக் காரரின் வேண்டுகோளைக் கீழே தந்திருக்கிறோம்.

**ராஷ்டிரபதி ராஜேந்திரருக்கு:** தாவர உணவு இந்தியாவிலே தர்ம அநுஷ்டானங்களில் ஒன்றுக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்து வருகிறது. எல்லா உயிர்களையும் போற்ற வேண்டும், ஒன்றென்று கருதவேண்டும் என்பதை உள்ளூற இந்தியர் உணர்ந்திருந்ததுதான் இதற்குக் காரணம். இருந்தாலும், தர்மத்தையே அடிப்படையாகக் கொண்ட ஒழுக்க முறை, சில வாலிபர்களைக் கவரும் விதத்தில் அமையவில்லை; அவ்வளவு வலிமை அதற்கு இல்லை. ஆகவே, விஞ்ஞான ரீதியாக உடலுக்குத் தாவர உணவுச் சத்து எவ்வளவு அவசியம், மருத்துவ ரீதியில் அது பயன்படும் விதம் இவைகளைப் பற்றி இன்னும் நன்றுகப் பிரசாரம் செய்ய வேண்டும்.

ஒழுக்கம்பற்றிக் கைக்கொண்ட கொள்கைகள் விஞ்ஞான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தால்தான் தாவர உணவு ஏன் அவசியம் என்று நிரூபிக்க முடியும்.

தாங்கள் வாழும் முறை, இந்த மகாநாட்டைத் துவக்கி வைக்கத் தாங்கள் அன்புடன் இசைந்தது இவற்றிலிருந்தே, 'எங்கள் நோக்கங்களை ஆதரிக்கிறீர்கள். அவைகளை அநுதாபத்தோடு கவனிக்கிறீர்கள்' என்று தெரிகிறது. இந்த நாட்டில் தங்களுக்குப் பெருஞ் செல்வாக்கு உண்டு; ஆகவே, அஹிம்ஸையையே வழிவழியாகக் கடைப்பிடிக்கும் இந்தியா அந்த மார்க்கத்தினின்றும் வழுவாமல் இருக்க அந்தச் செல்வாக்குப் பயன்படவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அஹிம்ஸையைவிட அரிய பொருள் ஏது? உலக அமைதிக்கும், எல்லா நாட்டு மக்களும் ஆத்மிகத் துறையில்

மூலம்: தி லைஃப் நாச்சுரல் (ஆங்கிலம்: செப்டம்பர் '57), புதுக்கோட்டை.

முன்னேறவும் அஹிம்ஸையே அவசியம் அடிப்படையானது.

* * *

**பிரதமர் நேருவுக்கு:** மின்சார விசையால் இயங்கும் பெரிய நீர்த் தேக்கத் திட்டங்கள், மோட்டார்கள், ரிஃப்ரிஜிரேட்டர்கள் இப்படித் தற்கால வசதிக்கான புதிய புதிய சாதனங்கள் எல்லாம் மக்கள் வாழ்வை வளப்படுத்தலாம். இவைகளே முக்கியம் என்று மேல்நாட்டார் கருதி வருகிறார்கள்; இந்தியாவும் அதேமாதிரி தவறான நோக்கம் கொண்டு செயற்கை வாழ்வு நடத்தும்படி விடாதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம். ஆத்மிக முன்னேற்றமே வாழ்வின் லட்சியம் என்பது மற்ற நாடுகளையெல்லாம் விட இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும்.

* * *

**இந்திய மக்களுக்கு:** வழி வழியாக ஒரு நாட்டுக்குரிய அருமை பெருமைகளைப் பாதுகாக்கும் பொறுப்புத் தனி மனிதனையும் சார்ந்ததுதான். தனி ஒருவன் இழிந்த முறையில் நடந்துகொண்டால் அந்த நாடே இழிந்த மாதிரிதான். அதோடு மனித சமூகமும்-பூலோகமே - வீழ்ந்தது என்று தான் கொள்ளவேண்டும்.

உங்களில் அநேகம் பேர் இயல்பாகவே தாவர உணவுக்காரர்கள். உங்கள் பெற்றோர்கள் மாமிச உணவு இடாமலே உங்களை வளர்த்தார்கள். இதற்கு மத நம்பிக்கையோ, உங்கள் பொருளாதார நிலைமையோ காரணமாக இருக்கலாம். ஆனால் சில காலமாக மத நம்பிக்கைகளில் தளர்ச்சி ஏற்பட்டுவருகிறது. இருந்தாலும் இதை எதிர்ப்பதோ, இதற்கு அஞ்சுவதோ சரியல்ல. நாமே சொந்தமாகச் சிந்தித்தும் ஆராய்ந்தும் பார்க்கவேண்டும். ஒருவன் வெளித் தோற்றத்துக்கு ஆத்மிகத் துறையில் பற்றுள்ளவன் போல் இருந்தாலும் அவன் உண்மை இயல்பு அதற்கு மாறாக இருக்கிறது. ஆகவே, சுபிட்சம் நிலவிப் பல மாறுதல்கள் நிகழ்ந்து, புதுமை நோக்கு ஏற்படவேண்டிய இந்தக் காலத்தில் எது நல்லது, எது கெட்டது என்று ஆய்ந்தோய்ந்து அறிந்து அதன்படி நடக்கவேண்டும்.

தாவர உணவு மிகவும் நன்மை விளைக்கும்; ஆத்மிக வளர்ச்சிக்கு அதுவே அவசியமானது. உங்கள் நாட்டில் கடைப்பிடித்து வரும் மகத்தான கோட்பாடுகளும் சரி, உங்கள் யோகிகளும் சரி இதையே தான் யுகம்யுகமாக உபதேசித்து வருகிறார்கள். புலால் உண்பதற்கும் நரமாமிசத்தை உண்பதற்கும் அதிக வேற்றுமை இல்லை. இதனால் மீண்டும் காட்டில் வாழும் விலங்கின் நிலைக்கு மனிதன் இழிந்து விடுகிறான்; அவ்வளவுதான்.

நிறை வாழ்வு வாழும் நிலையிலிருந்து மனிதன் இழிந்து விடாதிருக்க, தாவர உணவுச் சங்கம் இருப்பது மிகவும் அவசியம். ஒவ்வோர் ஊரிலும் இந்த மாதிரி சங்கங்களை நிறுவித் தக்கப்படி பிரசாரம் செய்ய வேண்டும். மாமிச உணவு உடல்நலத்தைப் பாதிக்கும் விதம், கண்ட பொருளிலும் சத்து இருப்பதாகத் தவறாய் எண்ணிக்கொண் டிருப்பது, ஒழுக்க முறைக்கே மாமிச உணவு மாறாக இருப்பது, பிராணிகளின் வளர்ச்சிக்கும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் மாமிச உணவு தடையாக இருப்பது - இவைகளை யெல்லாம் தகுந்த அத்தாட்சிகளுடன் நிரூபித்துக் காட்டவேண்டும்.

இதுவரையில் சத்துள்ள பொருள் பற்றிச் சரியாக ஆராயாமல் அக்கறையின்றி இருந்துவிட்டோம். இப்போது (15-ஆம்) உலகத் தாவர உணவு மகாநாடு கூடுவதால் புத்துணர்வு ஏற்பட்டு இந்தியா முழுதும் இந்தமாதிரி பல தாவர உணவுச் சங்கங்கள் தோன்ற வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை.

# வீட்டுப் பாடம்

**விக்கிரமன்**



நான் காலையில் காபி சாப்பிட்டு விட்டு, பேப்பர் பார்த்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தேன். அப்போது எங்கள் பூனைக்குட்டி என் பக்கத்து நாற்காலியில் குதித்தது. மேஜை மேல் வைத்திருக்கும் பாகவத புத்தகத்தின்மேல் அங்கிருந்து தாவியது. அங்கேயே சிறிது நேரம் இருந்து ஏதோ சப்தம் செய்தது. பாகவதந்தான் படித்ததோ என்னவோ? பிறகு மெதுவாக என் மடியில் இறங்கிப் படுத்தது. இது எனக்குப் பிடிக்கவில்லை. தள்ளினேன்; அது போகவில்லை. கழுத்தைப் பிடித்துத் தூக்கி மெதுவாக இறக்கிவிடப் பார்த்தேன். ஆனால் அது கூரிய நகங்களால் என் வேஷ்டியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. 'இந்தச் சனியன் என் வேஷ்டியைக் கிழித்துவிடுமோ!' என்று அஞ்சினேன். அவசரப்பட்டால் வேஷ்டி இன்னும் அதிகமாய்த்தான் கிழியும். ஆகவே, தூக்கு மரத்திலிருந்து இறக்குவதுபோல், மெதுவாகப் பூனைக்குட்டியை இறக்கித் தரையில் விட்டேன். உடனே அது புலிக் குட்டியாக மாறி என்னைக் கடித்தது; பிருண்டியது. மடியில் படுத்து உறங்கும் உரிமையும் நட்பும் கொண்ட ஒரு பிராணி ஒரு நொடியில் பகைவனுக மாறிவிட்டது! இதோடு அதைத் தள்ளிவிட்டு மீண்டும் பேப்பரைப் பார்க்கலானேன்.

திடீர் என்று தாழ்வாரத்தில் ஒரு சப்தம் கிளம்பியது: ''அம்மா, என் பை எங்கே?''

பரீட்சை தேறி மூன்ருவது வகுப்புக்குப் புதிதாய்ச் சென்றிருக்கும் பிள்ளையின் வீட்டுப்பாடத் தொழிற்சாலை ஆரம்பமாவதற்கு அறிகுறியான சங்கு ஊதல் அது! அம்மாவை வேலைக்கு அழைக்கும் அழைப்பு! பெஞ்சின்மேல் பையன் குப்புறப் படுத்துக் கைவிரல்களைக் கடித்துக் கொண்டிருந்தான். பெஞ்சுதான் அவன் மேஜை; உட்கார சிறிய ஸ்டூல் உண்டு. அம்மா அடுக்குள்ளில் ஈர விறகை அடுப்பில் செருகிப் புகையைக் கிளப்பிவிட்டு இருமிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் ஆனவுடன், மீண்டும் அதே சப்தம்: ''அம்மா, என் பை எங்கே?''

அம்மா அடுப்பங்கரையில் இருந்துகொண்டே, ''எங்கேன்னு நீயே பார்த்து எடுத்துக்கோ. நீதானே நேத்தைக்கு வெச்சாய்'' என்று பதில் சொன்னுள். பையன் படுத்த நிலையிலிருந்து அசையாமல், ''பாத்தாச்சு, அம்மா; அகப்படலே'' என்ருன். அம்மா பையை எடுத்து வராவிட்டால், அன்று பையன் படிக்கமாட்டான். ஆகவே, அம்மா பையைத் தேடிப் பிடித்து மகன் முன்னே கொண்டு வந்து வைத்துவிட்டு அடுக்குள் பக்கம் திரும்பினுள்.

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 25-8-'57), கோழிக்கோடு.



இதற்குள் அவசரமான மற்றொரு வேண்டுகோள் கிளம்பியது. ''அம்மா, ரப்பரைக் காணலை.''

''காணாட்டால், வேண்டாம்.''

''அம்மா, ரப்பரில்லாட்டா எப்படி எழுதறது?''

''டேய், நீ ரப்பராலேயா எழுதறாய்?''

''அதென்னமோ, ரப்பரில்லேன்னா என்னாலே எழுத முடியாது!''

அவன் கூறியது உண்மை. ஒவ்வோர் எழுத்தையும் எழுதியும் அழித்தும் திரும்பத் திரும்பக் கிறுக்கினால்தான் அவனுக்கு எழுத வரும். தன் முன்னே ரப்பர் இல்லாவிட்டால் அவனால் எழுதவே முடியாது. குப்பைக்கூடை அருகில் இல்லாவிட்டால் சிலருக்கு எழுத்து ஓடாது, இல்லையா? தாய் மீண்டும் வந்து, அலமாரி, மேஜை முழுவதும் தேடிக் கடைசியில் அவன் பையிலிருந்தே ரப்பர்த் துண்டை அவனுக்கு எடுத்துக் கொடுத்தாள். மீண்டும் அவன் அம்மாவைப் பல முறை கூப்பிடவே, இதே மாதிரி அவளும் வந்து வந்து, ஸ்கேல், சிலேட்டு, அழிக்க ஜலம், துடைக்கத் துணி, உட்கார ஸ்டூல் எல்லாத் தளவாடங்களையும் சேகரித்துக் கொடுத்துவிட்டு, ''இனிமேல் கூப்பிட்டால் வர முடியாது; பேசாமல் எழுது'' என்று கூறி அடுப்பங்கரைக்குப் போய் விட்டாள்.

இதற்குள் பெண் எழுந்து அடுக்குள்ளே வந்திருந்தாள். அம்மா அவளைப் பல் தேய்க்கச் செய்து காபி கொடுத்தாள். காபியைக் கையில் வாங்கிக்கொண்ட உடனேயே, ''காபியில் ஒரு ருசியுமில்லை'' என்று அம்மாவுக்குப் பெண் சர்ட்டிபிகேட் கொடுத்தாள். அம்மா அதில் கொஞ்சம் சர்க்கரை போட்டாள். தானே அதைக் கலக்கவேண்டும் என்று பெண் பிடிவாதம் செய்து, பின்னும் ஒரு டம்ளர் வாங்கி, இப்படியும் அப்படியும் ஊற்றி ஆற்றிக் காபியைக் கீழே கொட்டினாள். அம்மா அவளுக்கு ஓர் அடி கொடுத்துவிட்டு, மீண்டும் அடுப்பு ஊதச் சென்றாள்.

அதற்குள், ''அம்மா, எங்கேயிருந்து காப்பி எழுதணும்?'' என்று சப்தம் போட்டான் பையன்.

''உன் தலையிலேருந்து! உங்கிட்டத்தானே டீச்சர் சொன்னார்.''

''எனக்கு நினைவில்லை.''

''அப்படியானால் நேத்து விட்டதிலிருந்து ஆரம்பித்து எழுது.''

''நேத்து எங்கே விட்டேன்?''

''டேய்! அதான் உன் தலையிலேன்னு சொன்னேனே.''

''அம்மா, உன் தலையிலேதான்!'' என்று சளைக்காமல் மகனும் பதில் கொடுத்தான்.

உண்மைதான்! இரண்டு பேர் தலையிலுமே இதெல்லாம் எழுதியிருக்கிறது!

இதற்கு மேல், சிவந்த கண்களோடும் சாம்பல் படிந்த தலை மயிருடனும் மகனிடம் தாய் வந்தாள். பையன் பார்த்துப் பயந்து ஓட முயன்றான். அதற்குள் அம்மாவின் கவனம் வேறிடத்தில் செல்வதைக் கண்டு பேசாமல் இருந்தான்: இப்போது தாய் கூறிய வார்த்தைகள் என் காதில் விழுந்தன. ''சில பேருக்கு நாற்காலியில் சாய்ந்து பேப்பர் படித்தால் போதும். அடுக்குள்ளே சமைப்பது, பையனுக்குப் படிப்புக் கற்றுக் கொடுப்பது எல்லா வேலையையும் பெண்டாட்டியே செய்யவேண்டும். நல்ல விறகு வாங்கித் தரணுமே, குழந்தைகளை அடக்கி வளர்க்க வேணுமே என்ற ஒரு கவலையும்

கிடையாது. எவ்வளவு படித்திருந்தும் என்ன? குழந்தைகளுக்கு ஓர் எழுத்துக்கூடச் சொல்லிக் கொடுப்பதில்லை.'' - இதைக் கேட்டும் நான் பேசவில்லை. பாடம் கற்பிக்கத் துணிந்தால் முதலில் தாய்க்குத்தான் போதனையை ஆரம்பிக்கவேண்டும். அதற்கு எனக்குத் திறமையில்லை.

இதற்குள் செல்லப்பெண் தன் தலைமயிரைக் கடித்துக்கொண்டு போய்ப் பெஞ்சில் மறுபடியும் உட்கார்ந்தாள்.

''அம்மா, என் பாக்.''

அவள் கான்வெண்ட் பள்ளியில் இரண்டாம் வகுப்புக்கு வந்திருக்கிறாள்; அவ்வளவுதான். ஆயினும், தானும் அண்ணனுக்குச் சமமாக வீட்டுப் பாடம் படிக்கவேண்டும், எழுதவேண்டும் என்றெல்லாம் அவளுக்கு ஆசை. தாய் அவளிடம் வந்து பாக்கையும் அதோடு ஒரு முத்தத்தையும் சேர்த்துக் கொடுத்தாள். அப்போதுதான் அவளுக்கு வாசிக்கப் புதிய 'ஃபராக்' போட்டுக் கொள்ள வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. அம்மா அவளுக்குப் புதிய 'ஃபராக்' அணிவித்து அழுது கரைந்த கண் மையைத் துடைத்துவிட்டுச் சின்ன ஸ்டூலின் மேல் அவளை உட்கார்த்தி வைத்தாள்.

பெண் படிக்கத் தொடங்கினாள். 'தா, ரு, பரு, பா, ருத, ரு' என்று அவள் வாசிப்பதைக் கேட்டுப் பையன், ''அம்மா, இவள் வாசிப்பதைக் கேட்டாயா!'' என்று கத்தினான். மகள், ''என் டீச்சர் எனக்குச் சொல்லித் தந்தது அண்ணுவுக்கு எப்படித் தெரியும்? அவன் ஆண் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான். எங்க டீச்சர் தா, ரு, பரு என்றுதான் சொல்லித் தந்தார்'' என்றாள். அது தப்பு என்று தாய் திருத்த முயன்றதும், ''எனக்கு இந்தப் புஸ்தகம் வேண்டாம். பழைய ஒண்ணும் பாடம் போதும்'' என்று சொல்லி, அதை எடுத்து வைத்துக்கொண்டு 'அம்மி', 'அம்மா' என்று படிக்கத் தொடங்கினாள். எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. தாயும் சிரித்தாளோ என்னவோ? இருந்த இடத்தில் இருந்தபடியே நான், ''என்னடி, உளர்றாய்! அ-ம்-மா, அம்மா என்று சொல்'' என்றேன். அவள், ''உளறல்லே. எனக்கு நன்னா நெனவிருக்கு. அம்மி என்று டீச்சர் சொன்னாள்'' என்று பதில் சொன்னாள். ''மம்மி என்றால் அம்மா என்று டீச்சர் சொல்லியிருப்பாள்'' என்று நான் சொன்னேன். உடனே அவள், ''ஆமாம், அப்பா; மம்மி என்றால் அம்மா; பப்பி என்றால் அப்பா என்றுதான் டீச்சர் சொன்னாள்'' என்றாள். இதைக் கேட்டு நான் சிரித்துவிட்டு, 'என்னை நாய்க்குட்டியாக்கினாலும் போகட்டும். நான் இவளைத் திருத்தவே முடியாது. வேண்டுமானால் அம்மா திருத்திக்கொள்ளட்டும்' என்று பேசாமல் இருந்தேன்.



இதற்குள் பையன் காப்பி நான்கு வரிகள் எழுதி முடித்துக் கணக்குக்கு வந்துவிட்டான். முதல் கணக்குச் சுலபம். முப்பத்தேழையும் முப்பதையும் கூட்டினால் போதும். பையன் முப்பத்தேழுக்கு அப்புறம் முப்பத்தெட்டு, முப்பத்தொன்பது என்று விரல் விடத் தொடங்கினான். அதற்குள் அம்மா, ''முட்டாள், முதலில் பூஜ்யத்தையும் ஏழையும் கூட்டிப் பிறகு மூன்றையும் மூன்றையும் கூட்டு'' என்றாள். பையன், ''ஏழுக்கப்புறம், எட்டு, ஒன்பது'' என்று ஆரம்பித்தான். தாய், ''ஒன்று, இரண்டு, மூன்று'' என்று அவன் முதுகில் வைத்தாள். நானும் அவள் முதுகில் ஒன்று வைத்தேன், ஆனால் மனசால்தான். ஐயோ பாவம்! போதனைக் கலை பற்றி அவளுக்கு என்ன தெரியும்? கிளி கற்பதுபோல் பாடங் கற்று, ஏழும் பூஜ்யமும் ஏழு என்று



எளிதில் அறிந்துவிடலாம் என்று அவள் எண்ணிக்கொண்டிருக்கிறாள். தேம்பி அழுதுகொண்டே மகன் முதல் கணக்கைப் போட்டு முடித்தான். அடுத்த கணக்கு இன்னும் கஷ்டம். 'ஓர் எண்ணுடன் முப்பத்தேழு கூட்டினால் அறுபத்தேழு வரும்; அந்த எண் என்ன?' ''அறுபத்தேழிலிருந்து முப்பத்தேழைக் கழித்தால், அந்த எண் கிடைக்கும்'' என்று தாயார் சொல்லிக் கொடுத்தாள். ''எதற்குக் கழிக்கவேண்டும்? 'கூட்டினால்' என்றில்லையா கணக்கில் இருக்கு?'' என்று மகன் மீண்டும் மீண்டும் கேட்கவே, அம்மாவுக்குக் கோபம் வரத் தொடங்கியது. ''அட முட்டாள்! நான் கழி என்றால் கழி. கண்ட கேள்விகளையும் என்னிடம் கேட்காதே. எனக்கு நீ கணக்குச் சொல்லித் தரவேண்டாம். நீ கழிக்காவிட்டால் மண்டையில் குட்டுவேன்'' என்றாள். இதைக் கேட்டு எனக்குப் பொறுக்கவில்லை. ''சொல்லிக் கொடுக்கத் தெரியாவிட்டால் பேசாமல் இருக்க வேண்டும். குழந்தைகளைக் கொல்லுவதா? பொறுமையுடன் நிதானமாக அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் நூறு தடவை சந்தேகம் கேட்டாலும் பதில் சொல்லவேண்டும்; ஆயிரந் தடவை பிழை செய்தாலும் பொறுக்க வேண்டும். இந்த டீச்சர் அடுக்குள் வேலைக்குத்தான் லாயக்கு. போகலாம்'' என்று சொன்னேன். அவள் என்னை உறுத்துப் பார்த்துவிட்டு உதட்டைக் கடித்துக்கொண்டு அடுக்குள்ளுக்குச் சென்றாள். அங்கிருந்தபடியே, ''பெரிய கோர்ட் குமாஸ்தா சொல்லிக் கொடுக்கும் அழகைப் பார்ப்போம். இது கோர்ட்டில்லை'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வதுபோல உரக்கச் சொன்னாள்.

நான் வெகு அலட்சியமாக மகனுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். ''ஐந்து அப்பமும், ஐந்து அப்பமும் சேர்ந்தால் பத்து அப்பம் இல்லையா?'' என்றேன். ''ஆமாம், அஞ்சு எனக்கு; அஞ்சு அண்ணாவுக்கு'' என்று அருகில் இருந்த மகள் பதில் சொன்னாள். ''ஆமாம், கண்ணு'' என்று நான் ஒப்புக்கொண்டேன். உடனே, ''அப்பா, அப்பம் எங்கே!'' என்றாள் மகள். ''இது கணக்கு'' என்று நான் பதில் சொன்னேன். ''இருக்கட்டும், அப்பம் எங்கே!'' என்று விடாமல் பெண் கேட்டாள். நான், ''நீ அடுக்குள்ளுக்குப் போ'' என்று நான் உத்தரவிட்டேன். ''அப்புறம் அப்பா அஞ்சும் அண்ணா அஞ்சும் ஆகத் திங்கணமாக்கும்?'' என்று அவள் முணுமுணுத்தாள். ''உன்னைப் போகத்தானே சொன்னேன். போ!'' என்று நான் கர்ஜித்தேன். அப்புறமும் அவள் போகாமல் சற்று நகர்ந்து நின்றாள். அவ்வளவுதான்; நான் பையனிடம், ''இப்போ சொல்லு பார்ப்போம்; ஐந்து அப்பங்களுடன் எத்தனை அப்பங்கள் சேர்ந்தால் பத்து அப்பங்கள் ஆகும்?'' என்று கேட்டேன். அவன் துளியும் தயங்காமல், ''அஞ்சு அப்பம்'' என்றான். ''பேஷ்! கெட்டிக்காரப் பையன். இப்போ உனக்குப் புரிகிறதா? இந்த விடை உனக்கு எப்படிக் கிடைத்தது? பத்து அப்பங்களிலிருந்து ஐந்து அப்பங்களைக் கழித்தாய் அல்லவா?'' என்று கேட்டேன்.

அவன், ''நான் கூட்டவுமில்லை; கழிக்கவும் இல்லை. நீ முதல்லெ சொன்னதை நானும் அப்படியே திருப்பிச் சொன்னேன். அவ்வளவுதான்'' என்று பதில் தந்தான். பெண் இடையே குறுக்கிட்டு,

"பத்து அப்பம் கிடைத்தால் யாராவது கூட்டவோ குறைக்கவோ செய்வாளா? அம்மாவும் அப்பாவுந்தான் அப்படிச் செய்வா. நாங்க திங்கத்தான் செய்வோம்" என்றுள். கோபம் மேலிட, "போடீ" என்று அதட்டினேன். ஆயினும் நான் அடைந்தது தோல்விதான். என்ன செய்தும் பையனுக்குக் கணக்குப் புரியவில்லை.

எனக்குச் சில விஷயங்கள் அப்போது தெளிவாயின. தாயின் பொறுமையே பொறுமை. மனத் தத்துவ சாஸ்திரங்கள் என்ன கூறினுலும், குழந்தைகளுக்குக் கூறி விளங்க வைக்கப் பாடுபடுவது பெரிய முட்டாள்தனம். பொறுமைக்குப் புகழ் பெற்ற வாத்தியார்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே பாடம் கற்பிக்கும் போது கோபம் வந்தே தீரும். இன்னும் கொஞ்ச நேரம் நான் கணக்குக் கற்பித்தால் பையனுடைய துடையில் மட்டுமல்ல, முதுகிலும் தோல் இருக்காது என்பது நிச்சயம்.

நான் பேசாமல் எழுந்து என் அறைக்குத் திரும்பிப் போய் விட்டேன். தாய் வந்து பையனைச் சமாதானம் செய்து கணக்குச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினுள்.



எனக்கு ஆபீஸ் போக நேரமாகிவிட்டதால், அடுப்பங்கரையில் சென்று அடுப்பை ஊதத் துணிந்தேன். புகை இரண்டு மடங்காயிற்று. குனிந்து ஊதியதுடன் தலைமயிர் கொஞ்சம் எரிந்தது கூடத் தெரியவில்லை. கண்ணீர் வழிந்து விறகு மீண்டும் ஈரமாயிற்று. இதற்குள் பூனை மரத்தில் ஏறியதைப் பார்க்கக் குழந்தைகள் புஸ்தகத்தை எறிந்துவிட்டு வெளியே ஓடிவிட்டார்கள்.

## ஜனுதிபதி தளபதியாயிருந்தபோது—

ஜனுதிபதி ஐஸன்ஹோவரைப்பற்றி, ஜெனரல் க்ரூயெந்தர் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியைச் சொல்கிருர்.

ஐஸன்ஹோவர் ஐரோப்பாவில் நேசப்படைகளின் தளபதியாயிருந்த நாள் அது.

ஒரு ஸார்ஜெண்ட் டிரில் நடத்திக்கொண்டிருந்தார். ஒரு ஸோல்ஜர் மகா அசடாயிருந்தான். ஸார்ஜெண்டுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. ஸோல்ஜரைப் பார்த்து, "இதோ பார், நீயும் தளபதி ஐஸன்ஹோவரும் இந்தச் சேனையிலே உங்களால் எவ்வளவு மேலே வரமுடியுமோ அவ்வளவும் வந்துவிட்டீர்கள்; இனி உயர முடியாது" என்ருர்.

—ஏ பி.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

**ராஜகோபால ஐயங்கார், டாடாநகர்.**

**கேள்வி-1:** வயது 70. சாப்பாடு ஜீர்ணமாகிறது. சில சமயங்களில் வாயு உபத்திரவம் உண்டாகிறது. உள்ளங்காலில் உணர்ச்சி இல்லை. மேலான ஆங்கில டாக்டர்கள் பலர் இஞ்செக்ஷன் செய்தும் பயனில்லை. இப்போது ஆயுர்வேதப் படி சியவனப்பிராச லேகியம் சாப்பிட்டு வருகிறேன். தாங்கள் ஏதாவது யோசனை கூறினுல், அந்தப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

**விடை:** நண்பர் 70 வயதுக்கு நல்ல ஆரோக்கியமாய்த்தான் இருக்கிருர். உள்ளங் காலில் உணர்ச்சி போய் வெகு காலம் ஆகியிருக்க வேண்டும். அதனுல்தான் வைத்தியம் பலிக்கவில்லை. இதற்குமேல் நான் வேறே உபதேசம் செய்வதில் பயனில்லை.

**சா. பெரியசாமி, கடையநல்லூர்.**

**கே-1:** பாதத்துக்குமேல் உள்ள மூட்டில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு வீக்கம் கண்டு ஒரு மாதம் இருந்து குணமாயிற்று. இது திரும்பிக்கொள்ளுமா? இதன் காரணம் என்ன?

**வி:** இது வாதத்தைச் சேர்ந்த வியாதி. திரும்பி வராமலே இருந்துவிடலாம். அப்படித் திரும்பினுலும் லேசாகப் போய்விடக் கூடும்.

**ஸி. ராசு, பீலமேடு.**

**கே:** யானைக்கால் நோயைப்பற்றி முழு விவரம் வேண்டும். நான் மணம் செய்துகொள்ள விரும்பும் பெண்ணுக்கு இந்த வியாதி இருக்கிறது. அவளுடன் சேருவதால் இது என்னையும் பாதிக்குமா?

**வி:** யானைக்கால் நோய் கொசுக்கடியால் உண்டாகிப் பரவுகிறது. கும்பகோணம், கொச்சி, சென்னை போன்ற ஊர்களில் இந்த நோய் அதிகம். மனைவியிடமிருந்து கணவனைப் பாதிக்கும் என்று சொல்ல இயலாது. இந்த வியாதி பரவியிருக்கும் ஊர்களில் கொசுக்கடி மிகுந்திருப்பதுதான் இதன் காரணம். விரும்பும் பெண்ணை இந்த நோய்க்குப் பயந்து, கைவிடலாகாது.

**ஜயசங்கர், சென்னை.**

**கே-1:** நான் ஆரோக்கியமாய்ப் பலமுள்ளவனுயிருக்கிறேன். கால்களில் பலம் இருக்கிறது. ஆனுல் பாதங்களில் பலம் இல்லை. அவை மெலிந்திருக்கின்றன. காலையில் எழுந்தவுடன் வலிக்கின்றன. நாலு அல்லது ஐந்து மைல் நடந்தாலும் வலிக்கின்றன. என்ன செய்யலாம்?

**வி:** கால் பலமாயும் பாதம் மட்டும் பலக் குறைவாயும் இருப்பது அசாதாரணம். அதிகமாக நடந்தும் ஓடியும் பழகாதது ஒரு காரணமாயிருக்கலாம். பாதங்களுக்குப் பலம் கொடுப்பது பாதத்



தின் அடியில் இருக்கும் வளைவு அல்லது பாலம். இந்த வளைவில்லாமல் தரையில் சுவடு ஒரே மட்டமாய்த் தோன்றலாம். இந்த மாதிரி பாதம் பலக் குறைவானது; வலிக்கும். இந்தப் பாதம் உடையவர்கள் அதிக நேரம் நிற்கக்கூடாது; ஓடலாம், நடக்கலாம். இதற்கு வேறு பரிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நண்பரின் கோளாறு இதுதான் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வைத்தியரை நேரடியாய் அணுக வேண்டும்.

கே-2: முகத்தில் எல்லாருக்கும் சில இடங்களில்தான் மயிர் முளைக்கிறது. ஆனால் எனக்கோ முகத்தில் பல இடங்களில் (மற்றவர்களுக்கு வளராத இடங்களில்) மயிர் வளர்ந்திருக்கிறது. மூக்கு, காது இரண்டிலும் மயிர் அதிகம். க்ஷவரம் செய்தும் பயனில்லை. மருந்துகள் போட்டு நீக்கிய பிறகு சில நாளைக்குள் திரும்பவும் முளைக்கிறது. இது அவமானமா யிருக்கிறது.

**வி:** ஆண் பிள்ளைகளுக்குப் பருவ காலம் வரும்போது பல இடங்களில் மயிர் வளர்வது இயல்பே. இவை ஆண்மையைத் தெரிவிக்கும் குறிகள். மயிர் அப்படி வளராது போனால் துயரப்படுவது நியாயம். இந்த மாதிரி வளருவது குடும்பத்துக் குணமா யிருக்கலாம். பரிணாம முறையில் குரங்குக்கும் நமக்கும் ஒரே வகைப் பிராணிகள் மூதாதையர் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பிராணிகளின் உடல் சருமத்தில் மயிர் அதிகம் இருந்ததால், நமக்கும் ஓரளவு அதே மாதிரி அது வளர்கிறது. இதில் வெட்கம் வேண்டாம்; பெருமிதப் படலாம்.

**வரதராஜன், ஆம்பூர்.**

**கே:** எனக்குச் சுமார் பத்து வருஷ காலமாகக் காலில் ஏதோ சிரங்குபோல் வந்துகொண் டிருக்கிறது. முதல்முதல் இது வலது காலின் கீழ்ப்பாகத்தில் ஒரு சிறு குருவாக ஆரம்பித்தது. அதை நான் கிள்ளவே அது பரவிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி, அதிலிருந்து வடியும் நீர் இடது காலில் பட்டு அதிலும் சிரங்கு உண்டாயிற்று. பிறகு இரண்டு கால்களிலும் சிரங்கு தோன்றிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது உள்ளங்காலிலிருந்து முழங்கால் வரையில் ஒரே சிரங்கு மயமாயிருக்கிறது. சில நாட்களாக உள்ளங்காலின் பின்புறம் வெடிப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன. புதுப் பானையில் தண்ணீர் வைத்தால் நீர் கசிவதுபோல் கால் சிரங்குகளிலிருந்து கசிந்துகொண் டிருக்கிறது.

**வி:** இந்த நோயை ஆங்கிலத்தில் எக்ஸீமா என்று சொல்வார்கள். தமிழில் மேகநீர் சிரங்காய் வந்திருக்கிறது என்பார்கள். இதைக் குணப்படுத்துவது கஷ்டம். வெகு நாள் சிகிச்சை செய்ய வேண்டும். உடம்பில் ஏ-வைட்டமின் குறைவினால் இந்த நோய் ஏற்படக்கூடும். காலைக் கூடிய மட்டும் சற்றுத் தூக்கி வைத்துக்கொண்டால் புது ரத்தம் வந்து புண் விரைவில் குண



மாகலாம். மருந்து ஷாப்புகளில் எத்தனையோ ஏ - வைட்டமின் மாத்திரைகள் விற்பனையாகின்றன. மேலும் சிகிச்சைக்கு வைத்தியரை நேரில் கேட்க வேண்டும்.

**மாதேசன், தார்க்காடு.**

**கே:** எனக்குக் காலையில் ஒரு முறையும், சாப்பிட்ட பிறகு ஒரு முறையும் மலங் கழிகிறது. இதை நிறுத்த உபாயம் வேண்டும்.

**வி:** காலையில் மலங் கழித்து மூன்று மணி நேரமாவது ஆன பிறகு, உணவு உண்பது இந்தப் பழக்கத்தை நிறுத்தலாம். சாப்பாட்டின் அளவையும் சற்றுக் குறைத்துப் பார்க்கலாம். அன்னத்தையும் பிற பதார்த்தங்களையும் நன்ருகச் சுவைத்துச் சாப்பிட வேண்டும்.

**பாபு, ஈரோடு.**

**கே:** என் மகன் பிறந்து இரண்டு மாதகாலம் ஆகிறது. தினம் எண்ணெய் கொடுத்துத்தான் மலங் கழிப்பான். இரண்டு வாரகால மாகப் பாலில் தேன் கலவை செய்து கொடுப்பதால் தினமும் மலங் கழிக்கிருன். இது நல்லதா? வேறு பரிகாரம் உண்டா?

**வி:** இந்தக் குழந்தைக்குத் தேன் சேர்த்துப் பால் கொடுப்பது ஒத்துக்கொண்டுவிட்டது. வேறு பரிகாரம் அவசியமில்லை. ஆனுல் மலச் சிக்கலுக்குக் காரணம் தாய்ப் பால் இல்லாமல் பசுவின் பாலைக் கொடுத்ததேயாகும்.

**ஜி. நாகலட்சுமணன், மன்ஞர் கோவில்.**

**கே:** என் வலது கண்ணுக்குள் கருவிழியை ஒட்டிச் சதை வளர்கிறது. கடுகளவு வெண்மையாயும், இன்ஞெரு கடுகளவு சிவப்பாயும் சதை தெரிகிறது. இது வளர்ந்து கண் பார்வை மறைந்துவிடுமோ என்று பயமா யிருக்கிறது. இரவில் இதுவரைக்கும் நாலு மணி நேரம் படித்து வந்தேன். இப்பொழுது நாலு பக்கங்கள்கூடப் படிக்க முடியவில்லை.

**வி:** இந்தச் சதை வளரக் காரணம் ஏ - வைட்டமின் குறையாக இருக்கலாம். மீன் எண்ணெய், முட்டை, பால் ஆகிய உணவுகள் சாப்பிட்டு வந்தால், விரைவில் சதை மறைந்து பார்வையும் விருத்தி அடையலாம். ஒரு மாதமாவது இந்த வைத்தியம் செய்து பார்க்கலாம்.



**எஸ். பி. நமசிவாயம், இலங்கை.**

**கே:** பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறத் துணிகளில் குடைகள் இருக்கின்றனவே; இவை அழகுக்கு மட்டுமா, அல்லது சுகாதார சம்பந்தமான நன்மை ஏதாவது உண்டா?

**வி:** குடை பிடித்துக்கொள்வது வெயிலையும் மழையையும் தடுப்பதற்கே. கறுப்புத்துணிக்கு வெள்ளை உறையிட்டுக் குடை செய்வது சுகாதார விதிகளை அநுசரித்தது. கறுப்பு நல்ல நிழல் கொடுக்கும்; வெள்ளை வெப்பத்தைத் திருப்பிவிடும். பிற வர்ணங்கள் அலங்காரத்துக்காகவே.

**சி. அ. அனந்தராமன், தஞ்சை.**

**கே:** என் வயது 23. எனக்கு அடிக்கடி உடல் சோர்வு ஏற்படுகிறது. சுறுசுறுப்பில்லாமல் படுத்திருக்கிறேன். நெஞ்சு வலி திடீரென்று ஏற்படுகிறது. ஒரு நாளைக்குச் சுமார் 20 தடவை சிறுநீர் கழிக்கிறேன்.

**வி:** வியாதி இன்னதென்று அறிய உடம்பைச் சீராகச் சோதனை செய்ய வேண்டும். வைத்தியரை நேரில் போய்ப் பார்க்க வேண்டும்.

இந்த அதிசயப் பிராம்மணர் கத்தோலிக்கர்;
அதோடு ஐரோப்பியர்! விசித்திரமாக இல்லையா?

# பெஷி பாதிரியார்

**எஸ். ராஜி**

எதிர்பாராத நிகழ்ச்சிகளையெல்லாம் ஏராளமாகக் கொண்டது, தற்காலத்து இந்திய சரித்திரம். தமிழ்மொழியில் நவீன வசனத்துக்குப் பிதாவாக விளங்கியவர், பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் இத்தாலிய மதகுரு என்பதை இந்த நாட்டில் தவிர, வேறு எங்கும் எண்ணிப் பார்க்கவும் முடியாது.

கான்ஸ்டன்ஸோ கிஸப்பே பெஷி என்பவர், 1680-ஆம் ஆண்டில் மான்டுவா நகர் அருகில் பிறந்து, ரோம் நகரில் கல்வி பயின்றார். மொழிகளைப் பயில்வதில் அவருக்கு இருந்த ஆர்வமும், பாரத நாட்டைப்பற்றி அவருக்கு இருந்த அக்கறையும் அவரை மதப் பிரசாரப் பணிக்குத் திருப்பின. 1698-இல் அவர் ஏசு சொசைட்டியின் அங்கத்தினராகி, அதற்குப் பத்து ஆண்டுகள் கழித்து, கோவாவில் வந்து இறங்கினார். அங்கு அவர் இந்திய மொழிகளைக் கற்றார். மதுரை மிஷனுக்கு அனுப்புவதற்கு முன்பு, அவருக்குத் தெரிய வேண்டிய வேலைகளையும் கற்றுக்கொடுத்தார்கள்.

மதுரை மிஷனைப்பற்றி ஏறக்குறைய நூறு ஆண்டுகளாகவே சர்ச்சு சம்பிரதாய வட்டாரங்களில் கடுமையான விவாதங்கள் நடந்து வந்தன. ஏனெனில், இத்தாலியில் பிறந்த கனவானான ராபர்ட்டோ த நோபிலி என்பவர், சம்பிரதாயத்துக்கு மாறான முறைகளில் இந்த மிஷனை நிறுவினார். அவர் இரண்டு போப்பாண்டவர்களுக்கும் ஒரு கார்டினலுக்கும் உறவினர். அவர் தம்மை ரோமாபுரியிலிருந்து வந்த பிராம்மணர் என்று சொல்லிக்கொண்டார். படைப்புக் கடவுளான பிரம்மா, ரோமானியப் பிராம்மணர்களின் தலைவரான போப்பாண்டவருக்குத் தரிசனம் அளித்து, தமிழ் நாட்டில் பணியாற்றவும் உயர்சாதிப் பிராம்மணர்களைக் காக்கவும் மிஷனரிகளை அனுப்பக் கட்டளையிட்டார் என்றும் அவர் சொன்னார். உள்ளூர்ப் பிராம்மணர்கள் இருவர் அவருக்கு வசமாகி, அவருக்குத் தமிழையும் ஹிந்துப் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்து, மதுரையில் ராஜப் பிரதிநிதியாக இருந்த ராணிக்கு அவரை அறிமுகப்படுத்தினார்கள். அரசி அவரைப் பிராம்மணராகவே வரவேற்று, மதப்பிரசாரம் செய்ய அவரை அநுமதித்தாள்.

த நோபிலி தம்முடைய பெயரை, தத்துவ போதக சுவாமிகள் என்று வைத்துக் கொண்டு, உடம்பையும் கறுப்பாக்கிக்கொண்டார். காவியாடை உடுத்து, நெற்றியில் சந்தன நீறு அணிந்து, மார்பில் பூணூல் தரித்து, ஹிந்து முறையிலேயே அவர் வாழ்ந்தார். அவர் மதப்பற்றுடையவர்; தமிழில் வேகமாகப் பேசுவார். நூற்றுக்கணக்கான உயர்சாதி ஹிந்துக்களைக் கிறிஸ்துவர்களாக அவர் மாற்றியபோதிலும், சர்ச்சு அவரைச் சுதேசி ஆகிவிட்டதற்காக எதிர்த்தது. ஆனால் அவர் பிடிவாதமாகவே இருந்தார். கடைசியில் ரோம் அவருடைய ஆசார சீலத்தை ஒப்புக் கொண்டது. ஒரு மகானுக்குரிய மதிப்புடனும் மரியாதையுடனும் அவர் தமது 76-ஆம் வயதில், 1648 - இல் தென்னிந்தியாவில் காலமானார்.

இதற்குப் பின்பு அறுபது ஆண்டுகள் கழித்துப் புதிதாக வந்த பெஷி, அவருடைய வழியையே பின்

மூலம்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: செப்டம்பர் '57), சென்னை-1.

பற்றத் தீர்மானித்தார். கோவாவில் அவர் தமிழ்மொழியைக் கற்று, அதில் மிகுந்த ஆசை கொண்டார். பிற்காலத்தில் அந்தப் பற்று மிகவும் கெட்டியாகிவிட்டது. 1714-இல் அவர் மதுரைக்கு வந்ததும், சுப்பிரதீபக் கவிராயர் என்னும் அறிஞரிடம் தமிழை நன்ருகப் பயின்ருர்.

பெஷியும் தமக்கு முந்திய ஞானசிரியருடைய வழியையே கடைப்பிடித்தார்; ஆனுல் அவரை யாரும் கண்டிக்கவில்லை. மதுரையில் வாழ்ந்த மக்கள் அவரைத் தத்துவத் துறையில் தலைவராகவும், லௌகிகம் நன்கு அறிந்தவராகவும் மதித்தார்கள். பெஷி, ஒரு காலத்தில் திருச்சியில் சந்தா சாகிபுக்கு அமைச்சராக இருந்தார். பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருடன் போராடியபோது, இந்தச் சந்தா சாகிபைத்தான் ஆர்க்காட்டு நவாபாக நியமித்திருந்தார்கள். மராட்டியர்கள் சந்தா சாகிபைத் தோற்கடித்ததும், 1740-இல் பெஷி திருச்சிக்கு ஓட வேண்டியதாயிற்று. ஆனுல், நவாபு மானியமாகக் கொடுத்த நான்கு கிராமங்களிலிருந்து ஆண்டுதோறும் பன்னீராயிரம் ரூபாய் அவருக்குக் கிடைத்து வந்தது. தம் வாழ்நாள் முழுவதும் இந்த வருமானத்தை அவர் அநுபவித்து வந்தார்.

அவருடைய பெருமைகள் இதனுடன் நின்று விடவில்லை. சந்தா சாகிப் அவரை முஸ்லிம் துறவியாக மதித்து 'இஸ்மத்தி சந்நியாசி' என்ற பெயரை அளித்து, அரசவையில் ஒரு கனவானுக்குரிய மரியாதைகள் அனைத்தையும் வழங்கினுர். தம்முடைய தாத்தாவுக்குச் சொந்தமான தந்தப் பல்லக்கையும் சந்தா சாகிப் அவருக்குப் பரிசாக அளித்தார்.

பெஷி, ஹிந்து மதத் தலைவர்களைப் போலவே வாழ்ந்தார். யாவரும் அவரை உயர்சாதியைச் சார்ந்த துறவி என்றே மதித்தார்கள். அவர் அயல் நாட்டினர் என்பதை அவருடைய வாழ்நாளில் அறிந்தவர்கள் மிகவும் குறைவு. பல மொழிகளில் அவருக்கு அபாரமான தேர்ச்சி இருந்தது. தாய் மொழியான இத்தாலிய பாஷையைத் தவிர ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், போர்த்துகீஸ், ஸ்பானிஷ், பிரெஞ்சு ஆகிய மொழிகள் யாவும் அவருக்குத் தெரியும். இந்தியாவில் அவர் சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, இந்துஸ்தானி, பெர்சியன் ஆகிய மொழிகளைப் பயின்ருர். இந்துஸ்தானியும் பர்சியனும் சந்தா சாகிபின் சபையில் வழங்கிய மொழிகள். பெஷி மதப் பிரசாரம் செய்து வந்த நாட்டின் மொழிகளாக விளங்கியவை தமிழும் தெலுங்கும். இந்த மொழிகள் யாவற்றையும் அவர் சொந்த மொழி போலவே வேகமாகவும் புலமையோடும் பேசி வந்தார்.

பெஷிக்குத் தமிழ் இலக்கண நுட்பங்களைக் கற்றுக் கொடுத்த சுப்பிரதீபக் கவிராயர், அவருக்குத் தமிழ் இலக்கியத்தில் ஆர்வத்தையும், தமிழை எழுதுவதிலும் பேசுவதிலும் திறமையையும் உண்டாக்கினுர். தமிழ் இலக்கிய வடிவங்களைப் பெஷி செம்மையாக அறிந்தார் என்பதற்கு அவருடைய உரைநடை நூல்களும் காவியங்களுமே சான்று.

தமிழ் இலக்கிய சரித்திரத்தை எழுதிய நவீன ஆசிரியர் ஒருவர், "1724-இல் பெஷியின் பெருங்காப்பியமான 'தேம்பாவணி' வெளிவந்தது. பழைய ஐம்பெருங்காப்பியங்களுக்கு இணையான நூல் அது. பைபிள் பழைய ஏற்பாட்டையும் புது ஏற்பாட்டையும் சார்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு 30-சருக்கங்களில் ஆகிய காவியம் அது. நடையழகிலும் கற்பனை வளத்திலும் சமய நம்பிக்கையிலும் ராமாயணத்துக்கு ஒப்பாக அது விளங்குகிறது" என்று எழுதியிருக்கிருர்.

மடோனுவைப் புகழ்ந்து பெஷி மூன்று நீண்ட கவிதைகளை இயற்றியிருக்கிருர். அவை கருத்துச் செறிந்த நல்ல கவிதைகளுக்கு உதாரணமாகப் பொலிகின்றன. புலம்பும் தாயைப்பற்றி அவர் எழுதியுள்ள நூறு செய்யுட்களும் அந்த வகையில் சிறந்தவை. கி. பி.

*130* - இல் பாம்பர் மலையில் தன் எட்டுச் சகோதரர்களோடு உயிர்த் தியாகம் செய்த தூய கன்னியும் லூயிஸ்தான் அரசன் ஸினுயகன் மகளுமான கித்தேரியின் வரலாற்றை அவர் நாடோடிப் பாடல் மெட்டில் அழகாகப் பாடியிருக்கிறார். *1100* கண்ணிகள் அடங்கிய பாடல் இது. போர்த்துக்கலில் வீரத்தியாகியும் புனிதக் கன்னியுமாக விளங்கிய க்வின்டேரியா அல்லது ஸிதீயா என்பவளைப்பற்றிய வரலாறாக இது இருக்கக்கூடும் என்பார்கள்.

எழுதும் முறையிலும் பேசும் முறையிலும் தமிழ் இலக்கணம் அமைந்திருக்கும் வகைகளைப் பற்றிப் பெஷி எழுதியிருக்கும் நூல்கள் அன்றாட வழக்குக்கு மிகவும் பயன்படுபவை. தமிழ் இலக்கணத்திலுள்ள சொன்னதையே சொல்லும் பல விஷயங்களையும் குறைகளையும் நீக்கி, அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். தமிழில் எழுதும் பழக்கமுள்ள எனக்கு அவருடைய இலக்கணம் இன்னும் பயன்படுகிறது.

நவீனத் தமிழ் அகராதிகளுக்கு வழிகாட்டியாக முதல் முதலாகச் சதுரகராதியைத் தொகுத்தார் பெஷி. தமிழிலிருந்து பிரெஞ்சு, லத்தீன், போர்த்துகீஸ் ஆகிய மொழிகளில் பல அகராதிகள் வெளியாவதற்குக் காரணமாக இருந்தவர் அவர். பழைய பாடல்களின் தொகுதி ஒன்றையும் அவர் வெளியிட்டதாகத் தெரிகிறது. குறளைப் பேரளவுக்கு அவர் லத்தீனில் மொழிபெயர்த்திருக்கிறார்.

பெஷியின் வசன நூல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. அவை பெரும்பாலும் கிறிஸ்துவ மத உண்மைகளை அறிவுறுத்தவும், லூதர்ன் மிஷனரிகளை எதிர்க்கவும் தோன்றியவை. கிறிஸ்துவக் கொள்கைகளை வைத்து வானநூல் ஒன்றையும் அவர் எழுதியிருக்கிறார்.

தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளாகவே 'சிலப்பதிகாரம்' போன்ற காவியங்கள் நிலவி வருகின்றன. யுனெஸ்கோ தொகுதியில் பிரெஞ்சு மொழியில் சிலப்பதிகாரத்தை வெளியிடப் போகிறார்கள். ஆயினும், தமிழில் பழமையான தனி வசன நூல்கள் இல்லையெனலாம். நீண்ட கவிதைகளை இணைக்கவும், செய்யுட்களுக்கு உரை எழுதவுமே வசனநடை பயன்பட்டது. முதல் முதலில் பெஷியே 'பரமார்த்த குரு' கதையை எழுதித் தமிழில் தனி வசன நடையைத் தோற்றுவித்தார். வேடிக்கையான அவருடைய கதைகள் நாடோடிக் கதைகளாகப் பரவி யிருக்கின்றன. வேறு பல இந்திய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஒரு குருவுக்கு ஊசி தேவையாக இருக்கிறது. நான்கு சீடர்கள் அவருக்காக ஊசி வாங்கி வரக் கடைக்குப் போனார்கள். ஊசியைத் தானே நேரில் கொடுத்துக் குருவினிடம் புகழ் பெறவேண்டும் என்று ஒவ்வொரு சீடனும் விரும்புகிறான். ஆனால் சிறிய ஊசியை அவர்கள் நால்வரும் எப்படி எடுத்துச் செல்ல முடியும்? அவர்கள் ஒரு நீண்ட பனமரத்தில் அதைச் செருகி, குருவிடம் கொண்டு போனார்கள். அங்கே போனதும், ஊசி இன்ன இடத்தில் இருக்கிறதென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் இன்னமும் அதைத் தேடிக்கொண் டிருக்கிறார்கள். இப்படிப் பல வேடிக்கைக் கதைகளைப் பெஷி எழுதியிருக்கிறார்.

இவை பெஷி சொந்தமாக எழுதிய கதைகளாக இல்லாமலிருக்கலாம்; ஆனால் தமிழ் வசன நடையைத் தோற்றுவித்தவர் அவர் என்பது முக்கியமான விஷயம்.

*1746* - இல் பெஷி காலமானார். தமது கூட்டத்தாருக்குக் கிறிஸ்துவ மதக் கொள்கைகளை விளக்கி வந்த ஊரிலே அவர் புதைக்கப்பட்டார். இந்திய நாட்டுச் சந்நியாசியைப் போலவே மதித்து, அவருடைய கல்லறையில் யாரும் அவர் பெயரை எழுதவில்லை; இன்னும் அது கண்டு பிடிக்க முடியாமலே இருக்கிறது. ஆனால் தமிழ் இலக்கியத்துக்கு அவர் செய்த தொண்டு இன்னும் வாழ்கிறது. இதைவிட வேறு அடையாளமோ நினைவுச் சின்னமோ அவருக்குத் தேவை இல்லை.

# நிபுணர் கணக்கு

செயற்கைச் சந்திரனைப்பற்றி நிகெல் கால்டர் என்பவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்று 'ஹிந்து'வில் வெளியாகி இருக்கிறது. நிபுணர்கள் கணக்கிட்டு வைத்திருக்கும் இந்தப் புள்ளி விவரங்களை அதில் அவர் தந்திருக்கிறார்.

### 1. சுற்றக்கூடிய நேரம்

கீழே கண்ட உயரங்களில் கீழே கண்ட காலம் வரைக்கும் சந்திரன் விழாமல் சுற்றும்:

| உயரம் மைல் | நேரம் |
|---|---|
| 78 | 15 நிமிஷம் |
| 98 | 22 மணி |
| 124 | 4 நாள் |
| 155 | 12 ,, |
| 217 | 58 ,, |
| 279 | 173 ,, |
| 311 | 358 ,, |
| (560 | பல வருஷம்?) |

### 2. ஒரு சுற்று நேரம்

கீழ்க் கண்ட உயரங்களில் சந்திரன் பூமியை ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு ஆகக்கூடிய நேரம்:

| உயரம் மைல் | ஒரு சுற்று நேரம் |
|---|---|
| 200 | 90 நிமிஷம் |
| 1000 | 2 மணி |
| 22,000 | 1 நாள் |
| 2,35,000 | 28¼ ,, |

### 3. வாண வகை விவரம்

வாண வகைகள் கீழ்க்கண்ட உயரம் போகும்:

| வாணம் | கட்டம் | உயரம் மைல் |
|---|---|---|
| வி-2 | 1 | 130 |
| வைக்கிங் | 1 | 160 |
| கார்ப்பொரல் | 2 | 240 |
| வாங்கார்டு | 3 | 300? |
| ருஷியன் | 3? | 560 |

# ருஷியச் சந்திரன்

டாக்டர் ரவீந்திரநாத் ராய்

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த மேரிலாண்ட் என்ற இடத்தில், வாணம் வீசும் ஆராய்ச்சியில் டாக்டர் எஸ். எஃப். ஸிங்கர் என்ற நிபுணருடன் சேர்ந்து வேலை செய்தவர் இந்தக் கட்டுரையாளர்.

ருஷிய விஞ்ஞானிகள் ஒரு புதிய யுகத்தைத் துவக்கி வைத்து விட்டார்கள். மனிதன் இல்லாததும் மிகச் சிறு அயன வீதியில் செல்லுவதுமான ஒரு செயற்கைச் சந்திரன் பூமியைச் சுற்றிவரும்படி அவர்கள் விட்டிருக்கிறார்கள். முதல் செயற்கைச் சந்திரனான இந்த 'மவுஸ்' (மினிமம் ஆர்பிட்டல் அன்மாண்டு ஸாட்டலைட் அவ் எர்த்) 29-ஸெண்டி மீட்டர் அளவு ஆரம் (ரேடியஸ்) உள்ளது; 83.6 கிலோ கிராம் நிறை உள்ளது. நீள் வளையமான (எல்லிப்டிக்கல்) அயன வீதியில் இது சுற்றுகிறது. அந்த நீள் வளையத்தின் மையங்கள் (ஃபோஸை) இரண்டில் ஒன்று பூமி (படம் 1). அயன வீதியில் செகண்டு ஒன்றுக்கு 8 கிலோ மீட்டர் வேகத்தில் இந்தச் செயற்கைச் சந்திரன் சுற்றுகிறது. பூமியிலிருந்து இந்த அயன வீதியின் சராசரி உயரம் 900 கிலோ மீட்டர். இந்தச் சந்திரன் 96 நிமிஷத்தில் ஒரு சுற்றுச் சுற்றி விடுகிறது.

மூன்று கட்ட வாணம் (த்ரீ ஸ்டேஜ் ஸ்டெப் - ராக்கட்) ஒன்றின் இறுதிப் பகுதியிலிருந்து வெளிப்பட்டதுதான் இந்தச் செயற்கைச் சந்திரன் (படம் 2). வாணத்தை முதல் கட்டத்தில் செங்குத்தாக மேலே ஏற்றிவிடுகிறார்கள். வாயு மண்டலம் (அட்மாஸ்ஃபியர்) அடர்த்தியாக இருக்கும் இடத்துக்கு மேலே வாணம் போய் விடுகிறது; இதற்குள் முதல் பகுதியின் எரி பொருள் (ஃப்யூயல்) முழுவதும் எரிந்து விடுகிறது. இதோடு முதல் பகுதி கழன்று விடுகிறது. இதற்கு மேலே வேண்டிய உயரம் செல்ல வாணத்தின் இரண்டாவது பகுதியில் எரிபொருள் இருக்கும். இதனால் அது இன்னும் மேலே செல்லுகிறது. இரண்டாவது பகுதியின் எரிபொருள் தீர்ந்ததும் அதுவும் கழன்று விடுகிறது. இந்த இரண்டாவது கட்டத்தில் 'கைராஸ்கோப்' என்ற பம்பரம் போன்ற கருவி ஆட்டிவைப்பதால் வாணத்தின் திசை மாறிச் சாய்வாகச் செல்லுகிறது. கடைசியில் சரி மட்டமான (ஹரிஸாண்டல்) நிலையை வாணம் அடைகிறது. மூன்றாவது பகுதி இப்போது செயற்கைச் சந்திரனை முடிவாக உந்தித் தள்ளுகிறது. இப்படித் தள்ளும்போது, சரி மட்டமான திசையில் துளியும் கணக்குப்




1. நீள் வளைய அயன வீதி

காப்பிரைட்: ஏ. பி. பத்திரிகை (ஆங்கிலம்: 12-10-'57), கல்கத்தா.



2. மூன்று கட்ட வாணம்

பிசகாமல் அது தள்ளுகிறது. செயற்கைச் சந்திரனுக்கு எந்த விதமான நீள் வளைய அயனம் வேண்டும் என்று விரும்புகிறோமோ அதற்கேற்ற உயரத்திலும் வேகத்தோடும் திசையிலும் வாணத்தின் இந்த மூன்ருவது பகுதிதான் தள்ள வேண்டும். நம் செயற்கைச் சந்திரன் இந்த அயன வீதியை அடைந்த பிறகு, பூமியின் ஆகர்ஷண சக்தியே (கிராவிட்டேஷனல் அட்ராக்ஷன்) முற்றும் இதைக் கண்காணித்துக் கொள்ளுகிறது.

பூமத்திய ரேகையின் அயன வீதிக்கு எந்தக் கோணத்தில் இந்தச் செயற்கைச் சந்திரனின் அயன




3. அயன வீதியின் சாய்ந்த கோணம்

வீதியைச் சாய்த்து (படம் 3) வைக்கிறோம் என்பது முக்கியமான விஷயம். பூமியின் எவ்வளவு பிரதேசத்தைச் செயற்கைச் சந்திரன் கடக்கும் என்பது இந்தச் சாய்வையே பொறுத்திருக்கிறது. பூமத்திய ரேகைக்கு மேலே செல்லும் அயன வீதியில் செயற்கைச் சந்திரன் இயங்குமானால், பூமியில் மிகக் குறுகிய பிரதேசத்தை மட்டுமே அது கடக்கும். தெற்கு வடக்கான தீர்க்க ரேகை (மெரிடியன்) தளம் ஒன்றில் அந்த அயன வீதி செல்லுமானல். பூமியின் சகல பிரதேசங்களையும் செயற்கைச் சந்திரன் கடக்கும். பூமத்திய ரேகையிலிருந்து 66 டிகிரி ருஷியச் சந்திரன் சாய்ந்திருக்கிறது. இதனுல், வட துருவப் பிரதேசத்தைத் தவிரப் பூமியின் மீதிப் பிரதேசங்கள் அனைத்திலும் அது புலப்படும் (படம் 4).

செயற்கைச் சந்திரனின் இந்த அயன வீதி மாறுபடாமல் ஒரே ரீதியில் இருந்து வராது. கிழக்கிலிருந்து மேற்கே சிறிது சிறிது முன்னேறிக்கொண்டே யிருக்கும் தன்மை (ப்ரிஸிஷெனல் மோஷன்) பெற்றிருக்கும் (படம் 5). இதற்குக் காரணம், உப்பிய பூமத்திய ரேகைப் பகுதியின் ஆகர்ஷண சக்திதான். அயன வீதியின் இந்த முன்னேற்றத் தன்மையின் பயனுகத்தான், பூமியின் வெவ்வேறு பிரதேசங்களையும் செயற்கைச் சந்திரன் கடக்கிறது.

பொழுது விடியும்போதும், சூரியன் மலை வாயில் விழுந்த உடனுந்தான் செயற்கைச் சந்திரனை நாம் பார்க்க முடியும். 6 - ஆவது படத்தைப் பார்த்தால் இதன் காரணம் விளங்கும். காலையிலும் மாலையிலும் பூமியின் நிழலிலே நாம் இருக்கிறோம்; ஆனுல், செயற்கைச் சந்திரன் மட்டும் சூரிய ஒளியிலே இருக்கிறது. பலமான சூரிய ஒளி வீசும் பகலிலோ, பூமி




4. சந்திரன் கடக்கும் பிரதேசங்கள்

யின் இருண்ட நிழல் சூழ்ந்த இரவிலோ செயற்கைச் சந்திரனை நாம் காண முடியாது.

காலம் செல்லச் செல்ல அயன வீதி எப்படி மாறும் என்பதை முதல் படம் காட்டுகிறது. நீள் வளைய உருவம் குறுகி, நல்ல வட்டமாகி விடும். பூமிக்கு மிகக் கிட்ட உள்ள நீள் வளையக் கோடியான 'பெரிஜீ' என்ற இடத்துக்குச் சந்திரன் வரும்போது, சந்திரனைப் பூமி மிகவும் பலமாய் இழுக்கிறது. இங்கே வாயு மண்டலம் சற்று விலத்தியாக இருக்கிறது. பூமிக்கு மிக எட்டி உள்ள நீள் வளையக் கோடியான 'அப்பொஜீ' என்ற இடத்திலோ ஒரே சூன்ய வெளியாக இருக்கிறது. கிட்ட உள்ள கோடிக்குச் சந்திரன் வரும்போதெல்லாம், அதன் சக்தி (எனர்ஜி) கொஞ்சம் கொஞ்சம் குறைகிறது. இதனால் நீள்வளையம் குறுகிக்கொண்டே வந்து வட்டம் ஆகிவிடும். கடைசியில் வட்டமும் வரவரக் கம்பிச் சுருள் மாதிரி குறைந்துகொண்டே வரும்; பூமியின் வாயு மண்டலத்துக்குள் சந்திரன் வந்து சேர்ந்து விடும். அங்கே அடர்த்தியாயுள்ள வாயு மூலக் கூறுகள்(மாலெக்யூல்ஸ்) குறுக்கிட்டுச் சந்திரனை மோதும். சந்திரன் அதிவேகமாய் ஓடுவதால், உராய்வு (ஃப்ரிக்ஷன்) ஏற்பட்டுச் சந்திரனை உஷ்ணப்படுத்தும். இறுதியில் சந்திரன் பற்றி எரிந்து, எரிநட்சத்திரம் மாதிரி ஒளி செய்து அந்தரத்திலேயே கரிந்து புகையாய்ப் போகும்.




5. அயன வீதியின் முன்னேற்றம்



இந்தச் செயற்கைச் சந்திரன் விஷயம் சாதாரண மனிதனுக்குப் பெரிய விந்தையாய் மட்டுமல்ல, பெரிய மர்மமாயும் இருக்கிறது. அண்ணாந்து அண்ணாந்து பார்த்து, அவன் கழுத்துத்தான் வலிக்கிறதே யன்றி வேறொன்றும் புரியவில்லை. அதைக் கேலி செய்கிறது 'சங்கர்ஸ் வீக்லி'யின் இந்தச் சித்திரம்

இப்படிச் செயற்கைச் சந்திரனை ஆகாயத்திலே விடலாம் என்று முதல் முதல் யோசனை சொன்னவர் புரொஃபஸர் எஸ். எஃப். ஸிங்கர் என்பவர்தான். பூமி, வான மண்டலங்கள் இவற்றின் பௌதிக இயல்புகளை ஆராய இந்தச் செயற்கைச் சந்திரன் உபயோகப்படும் என்று அவர் கூறினார்.

சூரியனிலிருந்துவரும் கதிரியக்கத்தில் கண்ணுக்குப் புலப்படாத 'அல்ட்ரா - வயலெட் ரேஸ்' (ஊதாவுக்கும் அப்பாற்பட்ட கதிர்), எக்ஸ்-ரே என்ற கதிர் இவை எந்த அளவு பலமாயிருக்கின்றன? நட்சத்திர இடை வெளியிலிருந்து வருவதாகத் தோன்றும் ஆச்சரியமான மிக நுண்ணிய காஸ்மிக் - ரேஸ் என்ற கதிர்களின் தன்மை என்ன? அவை எங்கெங்கே எந்த எந்த அளவில் வருகின்றன? பூமியின்மீது விழும் சூரிய ஒளி எப்படி எந்த அளவில் பிரதிபலிக்கிறது? அந்தப் பிரதிபலிப்பு விகிதம் (ஆல்பிடோ) எப்படி மாறுகிறது? பூமியைச் சூழ்ந்துள்ள மேகத்தில் விழும் ஒளி, பூமியில் எப்படிப் பிரதிபலிக்கிறது? பூமியின் காந்தப் புல (மாக்னட்டிக் ஃபீல்டு) அடர்த்தி, மிக உயரமான ஆகாயத்தில் பல இடங்களிலும் எந்த அளவில் இருக்கிறது? எப்படி மாறுகிறது? பூமியைச் சூழ்ந்துள்ள 'அயான்' என்ற மின்துகள் மண்டலங்களில் மின்சார ஓட்டம் எப்படி நிகழ்கிறது? - இந்த மாதிரியான எத்தனையோ கேள்விகளுக்கு விடை காணும் ஆராய்ச்சியில் செயற்கைச் சந்திரன் பயன்படும்.

சூரிய ஒளியில் உள்ள அல்ட்ரா - வயலெட், எக்ஸ்-ரே கதிர்களைக் கண்டு பிடிக்கும் கருவிகள் (டிட்

டெக்டர்ஸ்), காஸ்மிக் - ரே என்ற கதிர்களை எண்ணும் கருவி (கவுண்டர்), காந்த அளவுக் கருவி (மாக்னெட்டோமீட்டர்) இவற்றையும் இவற்றுக்குத் துணையான கருவிகளையும் சந்திரனில் வைக்க வேண்டும். இந்தக் கருவிகள் எடுக்கும் கணக்குகளையெல்லாம் பூமியில் உள்ள நமக்கு அனுப்ப, ரேடியோ செய்தி அனுப்பும் கருவி (ட்ரான்ஸ்மிட்டர்) ஒன்றும் அதில் இருக்கவேண்டும். 'டெலிமீட்டரிங் டெக்னீக்' என்ற முறையைக் கொண்டு இந்தக் கணக்குகளைப் பெறவேண்டும். சகல கணக்குகளும் 'பிப்-பிப்' என்று விட்டு விட்டு எழும் ரேடியோ அலைகளாக மாறி வரும். 'ஃப்ரீக்வென்ஸி-மாடுலேஷன்' என்ற முறையில், இந்தக் கணக்குகளை மிக வேகமான அலை அதிர்ச்சிகளில் (அல்ட்ரா - ஹைஃப்ரீக்குவன்ஸி) பதித்து அனுப்பக்கூடிய ரேடியோ கருவியைச் சந்திரனில் வைக்க வேண்டும்.

தவிர, இந்தக் கணக்குகளையெல்லாம் பதித்து வைத்துக்கொண்டு, நாம் கேட்கும்போது நமக்குத் தகவல் அனுப்பக்கூடிய 'ஞாபகக் கருவி'களையும் (மெமரி ஸர்க்கூட்) செயற்கைச் சந்திரனில் வைக்கலாம்.

இந்த மின்சாரக் கருவிகளையெல்லாம் நெடுங்காலம் இயக்கி வருவதற்கு, மின்சாரம் வேண்டாமா? சூரியனின் வெயில் உஷ்ணம் பட்டே மின்சார சக்தி உண்டாகக்கூடிய 'ஸிலிக்கான் ஸோலார் பாட்டரி'களைச் சந்திரனில் வைத்துவிடலாம். ஆனால் அந்த பாட்டரிகள் வேலை செய்ய வேண்டுமானால், சந்திரனில் அவற்றை வைத்திருக்கும் பகுதி எப்போதும் சூரியனையே பார்த்திருக்க வேண்டும். இதற்கு வசதியாக, சூரியனை நோக்கியுள்ள அச்சு (ஆக்ஸிஸ்) மீது சுழலும்படி பம்பரம் போல் சந்திரனைச் சுழற்றி விடலாம்.




6. காலையிலும் மாலையிலுமே தெரியும் காரணம்

ருஷியாவின் செயற்கைச் சந்திரன் நீண்ட ஆயுள் பெற்றிருக்கும். ஏனென்றால், இதன் அயன வீதியில் பூமிக்கு மிகவும் கிட்ட உள்ள கோடியே, மிக விலத்தியாயுள்ள வாயுமண்டலத்தில் இருக்கிறது. இந்த அயன வீதி நீள் வளையமா யிருப்பது குன்றி வட்டமாகும்போது, பூமியின் சரியான வடிவம் நமக்குத் தெரியும். இதுவரைக்கும் யாருக்கும் அது தெரியவில்லை. வாயுமண்டலத்தின் மேல் பகுதியில் மிக உயரத்தில் பலவித வாயுக்கள் (காஸ்) எப்படியெல்லாம் பரந்து கிடக்கின்றன, அவற்றின் அடர்த்தி அளவு என்ன என்ற விவரங்களும் அப்போது நமக்குக் கிடைக்கும்.

இப்போது நடக்கும் வருஷத்தைச் சர்வதேசப் பூ-பௌதிக ஆண்டு (இன்டர்நேஷனல் ஜியோபிஸிக்கல் ஈயர்) என்று குறிப்பிட்டு, பல நாட்டு விஞ்ஞானிகளும் ஒன்றாய் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். இதில் பூ-பௌதிக ஆராய்ச்சிக்கு மிக முக்கியமான ஒரு கருவியை (செயற்கைச் சந்திரனை) முதல் முதலாக ருஷிய விஞ்ஞானிகள் தயாரித்து விட்டார்கள். அடுத்த வசந்த காலத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் தங்கள் குட்டிச் சந்திரனையும் கிளப்பி விட்டு விடுவார்கள். விஞ்ஞானத்தின் இந்த வெற்றியைக் கண்டு உலகெங்கும் மக்கள் வியந்து போற்றுகிறார்கள்.

'குட்டி யானைக்குக் கொம்பு முளைத்ததாம்; பட்டண மெல்லாம் பார்க்க வாருங்கள்' என்ற பாட்டை இலங்கையிலே பாட முடியாது!

# கொம்பில்லா யானை

★

இலங்கைக் காடுகளில் வாழும் ஜனங்கள் யானையின் பெயரைச் சொல்ல மாட்டார்கள். சொன்னால் அதற்குக் கோபம் வந்துவிடும் என்று அஞ்சுவார்கள். 'பெரும் பந்து' என்றோ, 'அந்தக் கிழடு' என்றோ, 'அவன்' என்றோ தான் குறிப்பிடுவார்கள். பிராணிகளுக்குள்ளே மிகப் பிரம்மாண்டமானதும், மகா அறிவுள்ளதுமான யானையைக் கண்டால், உலகத்து மக்கள் எல்லாருக்குமே ஒரு மரியாதையும் பயமும் உண்டு. இலங்கைக் காட்டு மக்களும் இப்படித்தான் அதனிடம் மரியாதையும் பயமும் காட்டுகிறார்கள்.

யானையை முதல் முதல் மனிதன் எப்போது பழக்கினானோ; அது யாருக்கும் தெரியாது. ஆசியாவில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக யானையிடம் மனிதன் பழகி வருகிறான். சுமை தாங்கும் பிராணிகளுக்குள்ளே மிக உயர்ந்து விளங்குவது யானை. சில சமயம் வைபவமான ஊர்வலங்களில் யானையைச் சிங்காரமெல்லாம் செய்து வாகனமாகக் கொள்வதும் உண்டு. கொஞ்சம் வெளுத்த யானையாக இருந்துவிட்டால், அந்த யானையைக் கடவுளாகவே மதிக்கிறார்கள். அதைக் கைப்பற்ற யுத்தங்களும் மூண்டிருக்கின்றன. குறிப்பிட்ட ஒரு வெள்ளை யானை ஸையாம் நாட்டில் இருந்தது. அதைக் கைப்பற்றுவதற்காக மூன்று ராஜ்யங்களுக்குள் நூறு வருஷ காலம் போர் நடந்து கொண்டேயிருந்தது; ஐந்து அரசர்கள் அதில் மடிந்தார்கள். மனித வாழ்க்கையில் யானை எந்த விதமாகச் சம்பந்தப்பட்டாலும் சரிதான்; மனிதன் அதை அடிக்கிறானோ, தொழுகிறானோ என்ன செய்தாலும் சரிதான் - யானை மட்டும் தன் கம்பீரத்தையும் சாந்தத்தையும் இழப்பதில்லை. சொல்லப் போனால், மனிதனிடம் அது அன்பு கொள்ள நியாயமே இல்லை; அப்படியிருந்தும் அது அவனிடம் கொள்ளும் அதிசயமான அன்பு குன்றுவதில்லை.

யானையில் இரண்டே வகைதான் உண்டு. ஒன்று, ஆசிய அல்லது இந்திய யானை; மற்றது, ஆப்பிரிக்க யானை. யானையின் காதளவைக் கொண்டே அது எந்த வகையைச் சேர்ந்தது என்று கண்டு பிடித்துவிடலாம். ஆசிய யானையின் காது சிறுத்திருக்கும்; ஆப்பிரிக்க யானையின் காது பெரியதாயிருக்கும். வேறு பல முக்கியமான



மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 52), சென்ட்ரல் ஆபீஸ் அவ் இன்ஃபர்மேஷன், லண்டன்.



வித்தியாசங்களும் உண்டு. நெற்றி, துதிக்கையின் நுனி, பெரிய கடைவாய்ப் பல் அமைப்பு இவற்றிலும் வேற்றுமை உண்டு.

ஆப்பிரிக்க யானையில் ஆண், பெண் இரண்டுக்குமே நீண்ட வக்கிர தந்தம் முழு வளர்ச்சி பெற்றிருக்கும். ஆசிய யானையில் பெண்ணுக்கு வக்கிர தந்தமே இராது; தவறினால், அதன் முனை மட்டுமே இருக்கும். இலங்கை யானை, தன் இந்திய சகோதரனைவிடச் சிறியது. பெரும்பாலும் இலங்கை யானையில் ஆணுக்குக்கூட வக்கிர தந்தம் இருப்பதில்லை. இதை அதன் அதிருஷ்டம் என்றே சொல்ல வேண்டும். மனிதனின் பேராசைக்குத்தான் அளவில்லையே; வக்கிர தந்தத்தைப் பெறுவதற்காகவே எத்தனை யானைகளை அவன் கொன்றிருக்கிறான்! இலங்கை யானை மிகச் சிறு காடுகளில் வசிக்கிறது. இந்தத் துர்ப்பாக்கிய வக்கிர தந்தம்மட்டும் அதற்கு இருந்திருந்தால், அங்கே இன்று யானை வம்சமே அழிந்து போயிருக்கும்.

இப்போதே அங்கே யானையின் எண்ணிக்கை, திடுக்கிடச் செய்யும் அளவுக்குக் குறைந்து வருகிறது. பாதுகாப்பு (ஸாங்சுவரி) வனங்களும் விசேஷக் காவல்களும் சட்டப்படி ஏற்பட்டிருந்தாலும், இலங்கைக் காட்டு யானைகளின் பிறப்பு விகிதத்தைவிடச் சாவு விகிதம் மிக அதிகமாயிருக்கிறது. 1951-இல் காட்டு யானைகள் 1000 இருக்கலாம் என்று மதிப்பிட்டார்கள். அதற்கு ஐந்து வருஷத்துக்குப் பின் 800 ஆக அந்த எண்ணிக்கை குறைந்துவிட்டது. பயிர்களை யானை அழிப்பதுண்டு. இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, 'பயிர்களைப் பாதுகாக்கிறோம்' என்று சொல்லிக்கொண்டு யானையைச் சுட்டுவிடுகிறார்கள். இப்படிச் சுடுவதால் யானைக்கு ஏற்படும் சாவுதான் மற்றச் சாவு விகிதங்களைவிட மிக அதிகம்.

இதுபற்றிய புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது, நிபுணர்கள் துயரப்பட வேண்டியிருக்கிறது. என்றாலும், யானை இலங்கையின் ஈடு செய்ய முடியாத பெரிய தேசிய மூலதனம். ஆகவே, யானையைப் பராமரிக்கும் வேலையில் இலங்கை பெரிதும் கவனம் செலுத்தித்தான் வருகிறது.

அங்கே யானையைப் பெருஞ் செல்வமாய்ப் போற்றிப் பாதுகாக்கிறார்கள். யானைகளைக் கொண்டு தங்கள் சொந்த வேலைகளைச் செய்து கொள்கிறார்கள். உற்சவ காலங்களில் யானையைக் கோவிலுக்கு இரவல் கொடுக்கிறார்கள். காட்டு யானை மந்தைகளில் ஏற்படும் சாவைக் குறைக்கவும், பிறப்பு விகிதத்தைப் பெருக்கவும் இலங்கையின் அற்புதப் பிதுரார்ஜிதப் பெருந்தனமான யானை வம்சத்தை என்றென்றும் நிலைத்திருக்கும்படி செய்யவும் மிக விரிவான முயற்சிகள் எடுத்து வருகிறார்கள்.

# அந்தக் காலம்

## ரா. நா.

திருச்சியிலிருந்து வரும் 'சிவாஜி' வாரப் பத்திரிகை, அலாதியான பாணியில் சுயேச்சையுடன் நிமிர்ந்து நடந்து 23 ஆண்டுகளைக் கடந்துவிட்டது. எப்போதும் போலவே அதன் இந்த ஆண்டு மலரும் சிறந்த எழுத்தாளரின் கட்டுரை, கதைகளைத் தாங்கியிருந்தது. அதிலிருந்து எடுத்த ஒரு கட்டுரை இது.

தற்கால அனுபவங்கள் மனத்துக்குப் பெரிதும் கசப்பையே அளிக்கின்றன. ஆகையால், பழங்காலத்தையும், அப்போது நிகழ்ந்தவைகளையும் நினைத்துக் கொண்டால் மனத்தில் இன்பம் தோன்றி அமைதியும் நிலவுகிறது.

முதியவர்கள் தங்கள் ஆதிகால வாழ்க்கையை நினைத்துப் பெருமிதம் அடைகிறார்கள். அவர்களுக்குத் தற்காலச் சிறப்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் கிடையாது என்று இந்தத் தலைமுறையினர் நினைக்கலாம். ஆனால் உண்மை அதுவல்ல. வெளிநாடுகளில் வல்லரசுகளின் போராட்டத்தைக் காண்கிறோம். நம் தாய்த் திரு நாட்டில் சாதிச் சண்டையையும் மொழி வெறியையும் தவிர, வேறு எதைக் காண முடிகிறது? பகைவனை விரட்டும் ஒரே குறிக்கோளுடன் எல்லோரும் ஒன்றுபட்டுப் பணிபுரிந்த காலத்தை இந்த நிலையில் நினைவுபடுத்திக் கொள்வது நல்லதல்லவா? அந்த நாட்களில் ஆத்திரம் பொங்கி எழுந்ததென்றால், நம்மை அடக்கியாளும் ஆட்சியாளர்களிடமும் அவர்களுடைய அடிவருடிகளிடமும்தான் வேகமும் வெறியும் சென்றன. இந்த மாதிரி சம்பவங்களில் சிலவற்றை இங்கு விவரிக்கிறேன்.

நான் கல்லூரி மாணவனாயிருந்த காலத்தில்தான் அன்னி பெசண்ட் அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கம் மும்முரமாக நடந்தது. அம்மையாரின் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாரும் பிரசங்கம் செய்ய வந்தார்கள். பொதுக்கூட்டங்களில் மாணவர்கள் ஏராளமாகப் பிரசன்னமாயிருந்தார்கள். இந்த அரசியல் கொந்தளிப்புகளில் இளைஞர்கள் பங்கு கொண்டால் அவர்கள் பாழ்பட்டுவிடுவார்கள் என்று எண்ணி அரசாங்கத்தார், 'மாணவர்கள் அரசியல் கூட்டங்களுக்குச் செல்லலாகாது' என்று உத்தரவு பிறப்பித்தார்கள். இதுதான் புகழ் பெற்ற 559 எண்ணுள்ள அரசாங்க உத்தரவு.

இதை மாணவர்கள் புறக்கணித்தார்கள். திருச்சியில் 500 மாணவர்களுக்கு மேல் கையெழுத்திட்டு, தாங்களே அரசியல் பொதுக்கூட்டம் கூட்டினார்கள். டவுன் ஹால் சதுக்கத்தில்தான் அந்தக் கூட்டம் கூடியது. இதற்கு மேல் தமிழ் நாடெங்கும் இந்த மாதிரி கூட்டங்கள் கூடின. ''இந்த உத்தரவு ரத்து செய்யப்படவில்லை என்றால், நாங்கள் பள்ளிக்கூடப் பகிஷ்காரம் செய்வோம்'' என்று பகிரங்கமாகப் பொதுகூட்டங்களில் மாணவர்கள் அறிவித்தார்கள். பள்ளிக்கூடங்கள் காலியாகி

மூலம்: சிவாஜி (ஆண்டு மலர்), திருச்சி-1.

விட்டால் தங்களுக்கு அவமானம் என்று கருதி முதலில் இரண்டு வாரங்களுக்கும், பின்பு இரண்டு வாரங்களுக்கும் கல்லூரிகளைப் போலிக் காரணங்கள் கூறி நிர்வாகிகள் மூடிவிட்டார்கள். மீண்டும் கல்லூரிகளைத் திறக்குமுன் அந்த உத்தரவைச் சர்க்கார் ரத்து செய்துவிட்டார்கள். அந்தச் சமயம் கல்வி இலாகாத் தலைவர் ஸ்டோன் (கல்) என்பவர். அவர் அப்போது நீலகிரியில் இருந்தார். சர்க்கார் பணிந்து வந்ததை, ''நம் கிளர்ச்சியால் நீல மலையில் இருந்த **கல்** சரிந்து விழுந்தது'' என்று மாணவர்கள் கேலியாகக் கூறிச் சிரித்தார்கள்.

* * *

**ஹோ**ம் ரூல் இயக்கத்தின் விளைவாகப் பெசண்டம்மையாரும் அவருடைய சகாக்களான அருண்டேலும் வாடியாவும் கவர்னர் பெண்ட்லண்டு ஆட்சியில் சிறைப்பட்டார்கள். மூன்று மாதங்களுக்குப் பின் அவர்கள் விடுதலையானார்கள். பின்பு அம்மையாரின் தொனி மாறிவிட்டது. இதைப் புனாவில் திலகரும், சென்னையில் 'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரி ரங்கையங்காரும் வன்மையாகக் கண்டித்து எழுதினார்கள். இது பற்றி அம்மையார் தம் 'நியூ இந்தியா' என்னும் தினசரியில், 'திலகரும் கஸ்தூரி ரங்கையங்காரும் நாட்டுக்கு அபாயம் விளைவிப்பவர்கள்' என்று எழுதியிருந்தார். இந்தக் கருத்து வெளியான பின், அவர் திருச்சிக்கு வந்தார். அவர் டவுன் ஹாலில் பேச ஏற்பாடாகி இருந்தது. மூன்று மாதத்துக்குமுன் பூர்ணகும்பம், மாலை மரியாதைகளுடன் வரவேற்புப் பெற்றவரை இந்தச் சமயம் யாரும் லட்சியம் செய்யவில்லை. அதற்குப் பதிலாக டவுன் ஹாலில் கூடியிருந்தவர்கள், ''திலகர், ஐயங்கார் பற்றிய அவதூறை அம்மையார் வாபஸ் பெறுவிட்டால் பேச விடமாட்டோம்'' என்று சவால் விடுத்தார்கள். கூட்டத்தினரும் பிடிவாதமாயிருந்தார்கள்; அம்மையாரும் பணிவதாயில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் சையத் முர்த்தூசா சாகேப் அவர்கள் எழுந்து, ''அம்மையாரின் கருத்தை வெறுப்பவர்கள் வெளியே திறந்த வெளிக்கு வாருங்கள்'' என்று அழைத்தார். மண்டபத்தில் இருந்தவர்கள் எல்லாரும் வெளியேறினார்கள். உள்ளே சில பிரம்மஞான சங்கத்தினரே இருந்தார்கள். வெளியேறிய மக்கள் மௌல்வி அவர்கள் தலைமையில் கூட்டம் கூடி, அம்மையாரின் கூற்றைக் கண்டித்து ஏகமனதாகத் தீர்மானம் செய்தார்கள்.

* * *

**உ**ப்புச் சத்தியாக்கிரகம் மும்முரமாக நடந்த காலம். திருச்சியில் உள்ள தலைவர்கள் எல்லாரும் சிறை சென்றுவிட்டார்கள். இயக்கம் சிறுவர்களாலே நடந்தது. கிலேதார் தெருவில் தொண்டர் முகாம் இருந்தது. ஒரு நாள் கோயமுத்தூர் என். எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் பேச வந்திருந்தார். வக்கீல் தொழிலில் எப்படி நாவன்மையுடன் பேசுவாரோ அப்படியே பிரசங்க மேடையிலும் தமிழ் மொழியில் கடல் மடை திறந்தாற்போல் பேசுவார். அவர் பேச்சை எல்லாரும் ரசித்துக் கேட்டார்கள். ஆனால் தொண்டர் படையில் மட்டும் ஆட்கள் சேரவில்லை. அந்தச் சமயத்தில் தோழர் பாலு எழுந்து, 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்னும் பாரதியார் பாட்டை உணர்ச்சியுடனும் குன்றாத இசை அழகுடனும் பாடினார். அவர் பாடி முடித்ததும் பல இளைஞர்கள் தொண்டர் படையில் சேர்ந்தார்கள். உண்டியல் பெட்டிகள் நிறைந்தன. அழகு மிக்க சொற்பொழிவுகளைவிட ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த பாட்டுக்களின் வலிமையை அன்று மக்கள் கண்டார்கள்.

* * *

**1934**-ஆம் ஆண்டு ராஜேன் பாபு ராஷ்டிரபதி என்ற முறையில் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்தச் சமயத்தில் சென்னை 'ஜெய பாரதி' தின

இதழின் விசேஷ நிருபராகப் பாபுஜியுடன் நான் சென்று வந்தேன். தமிழ் நாடெங்கும் கறுப்புக் கொடியினர் அவரைத் தொடர்ந்து சென்று, ''ராஜேன் பாபு, திரும்பிப் போ'' என்று கோஷமிட்டு வந்தார்கள். பொறுமையே பூஷணமான ராஜேன் பாபு பொறுத்துக்கொண்டு வந்தார். திருச்சியில் கறுப்புப் படையினர் பெருகி, அவர்கள் குரலொலியும் வலுத்திருந்தது. டவுன் ஹால் மைதானத்தில் இந்த எதிர்ப்புக் கோஷத்தைக் கண்டு ராஜேன் பாபு சற்றுக் கலங்கிவிட்டார். ஆனால் உடனே நிதானம் அடைந்து, தம் சக்தியையும் மீறிய உரத்த குரலில், ''திரும்பிப் போ, திரும்பிப் போ என்று நண்பர்கள் கோஷமிடுகிறார்கள். நான் எங்கே திரும்பிப் போவது? இந்த நாடு முழுவதும் என் தாய்த்திரு நாடாயிற்றே!'' என்றார். கறுப்புப் பக்தர்களின் கல்மனமும் கரைந்து அமைதி நிலவியது. பாபுவும் தம் கொள்கைகள்பற்றி நிதானமாகப் பேசினார்.

* * *

**கா**ந்தியடிகள் தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் ஒன்றில் திருச்சி வந்தார். மணிக்கூண்டுக்கு எதிரில் அவர் பிரசங்கத்துக்காகத் தனிப் பந்தல் அமைந்திருந்தது. அந்தத் தடவை எங்கும் ஏராளமான கூட்டம் கூடிக் கட்டுப்பாடில்லாமல் மகாத்மா தரிசனத்துக்காக வந்து வளைத்துக்கொண்டதால் அவருக்கு அலுப்பும் சோர்வும் ஏற்பட்டு, அவர் சொல்ல விரும்பியதை ஒழுங்காக எடுத்துக் கூற முடியாமல் போய்விட்டது. இந்த நிலையில் அவர் திருச்சி வந்து சேர்ந்ததும், பத்திரிகை நிருபர்கள் வளைத்துக்கொண்டு விட்டார்கள். 'ஜனங்களின் கட்டுப்பாடற்ற அன்பைச் சமாளிக்கும் வகையறியேன்' என்பதை எடுத்துரைப்பதற்காக 'ஐ ஆம் அட் தி எண்ட் அவ் மை ரிஸோர்ஸஸ்' (I am at the end of my resources) என்று கூறினார். நிருபர்கள் இதை அப்படியே நாடெங்கும் பரப்பி விட்டார்கள். அவர் உடல்நிலை மோசமாகிவிட்டதாக இதற்கு மக்கள் பொருள் செய்துகொண்டு கவலை தோய்ந்த தந்திகள் அனுப்பிய வண்ணம் இருந்தார்கள். பின்பு தம் நிலையை அவர் விளக்கியதுந்தான் மக்கள் நிம்மதி பெற்றார்கள்.

* * *

**சு**தந்தரம் வேண்டினோம்; சுதந்தரம் அடைந்துவிட்டோம். ஒரு லட்சியத்துக்காகப் பாடுபடுகையில் உள்ள இன்ப உணர்ச்சி அந்த லட்சியம் கைகூடியதும் இருப்பதில்லை என்று மேல்நாட்டு ஆசிரியர் ஒருவர் கூறியது முற்றும் உண்மை என்றுதான் தோன்றுகிறது.

### எது வேண்டும்?

'நீ மகிழ்ச்சி பெறலாம்; நீ அதிகாரம் பெறலாம்' என்கிறார் கடவுள்; 'ஆனால், இரண்டையும் பெறுவதென்றால் முடியாது' என்கிறார். —எமெர்ஸன்

### பண்டங்களே முக்கியம்

பணத்தைவிட மிக முக்கியமான பண்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றை வாங்கத்தான் பணம் வேண்டியிருக்கிறது. —ஜோஸஃப் ஜெங்கின்ஸ்

உணவிலும் மருந்திலும் கலந்து சுவையும் நலமும் கொடுக்கும் சரக்கு:

# குணம் தரும் கிராம்பு

## பி. எஸ். நரஹரி ராவ்

லவங்கத்தைத் தமிழ் நாட்டில் கிராம்பு என்கிறோம். மானிட வாழ்க்கையை இன்பமாக்க இயற்கை பல வசதிகளைக் கொடுத்திருக்கிறது. இனிமையான பழங்கள், மனங் கவரும் பூக்கள், நல்ல வாசனையோடு உணவுகளைத் தமக்கே உரிய சிறந்த முறையில் ருசிக்கச் செய்யும் வாசனைப் பொருள்கள் எல்லாம் இவற்றுள் முக்கியமானவை.

இவை ராஜ்யங்களைச் செல்வம் கொழிக்கும்படி செய்திருக்கின்றன. பல சாம்ராஜ்யங்களின் ஆக்க, அழிவுகளுக்குக் காரணமாய் இருந்திருக்கின்றன. வியாபார நோக்கில் பார்த்தால், பொன்னுக்குச் சமமான ஸ்தானம் இந்தப் பொருள்களுக்கு உண்டு. இந்தச் சம்பாரப் பொருள்களுள் கிராம்பு உயர்ந்த ஸ்தானம் பெற்றுவிட்டது. சீன தேசத்தில் இது சம்பந்தமாக ரஸமான பழக்கம் ஒன்று இருந்ததாக ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். மிகப் புராதன காலத்தில் அந்த நாட்டினர் அரசனிடம் பேசப் போகு முன்பு, தம் வாயில் கிராம்பை மென்று அந்த வாசனை மணக்கும்படி பேசுவார்களாம். மயிர்க்கூச்செறியச் செய்யும் பல சம்பவங்களுக்கு ஆட்பட்ட யாத்திரிகன் சிந்துபாதும் பாஸ்ராவுக்குப் பயணம் செய்யும்போது, தன் கப்பலில் கிராம்பை வைத்திருந்தான் என்னும் ஆச்சரியமான செய்தி நூல்களில் காண்கிறது.

வாசனைப் பொருள்களுக்குப் பிறப்பிடமான சில தீவுகளில் கிராம்பு ஏராளமாக விளைய இயற்கை வசதி அமைந்திருக்கிறது. உலகத்தின் தேவைக்கு வேண்டிய கிராம்பில் அறுபது சதவிகிதம் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஸான்ஸிபார் பிரதேசத்திலும் அதைச் சார்ந்த 'பெம்போ' தீவிலும் பயிராகிறது. மலேயா, சுமாத்ரா, மலாக்கா, கொழும்பைச் சேர்ந்த கண்டி முதலிய இடங்களில் அதிகமாகவும் தென்னிந்தியாவில் சிறிதளவும் இது பயிராகிறது. மலைப் பிரதேசங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் கிராம்பு சுலபமாகப் பயிராகிறது. உயர்ந்து வளர்ந்த தென்னை, வாழை போன்ற மரங்களை யொட்டிக் கிராம்பு நாற்றை நடுவார்கள். தண்ணீர் வசதி குறையாமலும் பூச்சிகள் முதலியவற்றால் பயிரின் வளர்ச்சிக்குக் குந்தகம் இல்லாமலும் பாதுகாப்பார்கள்.

நாற்பது அடி உயரம் இருக்கும் கிராம்பு மரத்திலிருந்து கிராம்பைப் பறிக்கத் தேர்ந்த ஆட்கள் வேண்டும். பசுமையான இதழ்கள் உள்ள கிராம்பு மொட்டுக்களைக் கூடைகளில் சேகரிக்கவேண்டும். புளித்துவிடாமல் உடனே உலர்த்த வேண்டும். புளித்தால் 'கோகர்' என்ற மட்டரகக் கிராம்பாகிறது. சிமெண்டுத் தரையில் ஈரம் இல்லாமல் பார்த்து, பாய்களின் மேல் பச்சைக் கிராம்புகளைப் பரப்பி உலர்த்துவார்கள். காய்ந்த கிராம்பு 30 சதவிகிதம் தேறுகிறது.

கிராம்பில் பதினாறு அல்லது பத்தொன்பது சதவிகிதம் எண்ணெய் இருக்கிறது. இதில் 'தைமால்' என்ற ரசாயனப் பொருள் இருக்கிறது. மஞ்சள் வர்ணமான இந்த எண்ணெய், காற்றின் சேர்க்கையால் சற்றுச் சிவப்பாக மாறி விடுகிறது.

நம் நாட்டு வைத்திய முறையில்-ஆயுர்வேத, யூனானி நூல்களில் - மிளகுக்கு அடுத்தபடியாகக் கிராம்பே சிறந்த மருந்துச் சரக்கு.

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்: 28-7-'57), பங்களூர்.

பசியின்மை, ஒக்காளம், கர்ப்பிணிகளின் வாந்தி முதலிய நோய்களுக்குக் கிராம்பு நல்ல மருந்து. கபத்தைப் போக்கவும் பித்தத்தை நீக்கித் தாகத்தை நிறுத்தவும் பேதியைத் தடுக்கவும் மேக நோயைத் தீர்க்கவும், இடுப்புநோய், வாதநோய்களைக் குணப்படுத்தவும் கிராம்புத் தைலம் சிறந்த மருந்தாக உதவுகிறது. யூனுனி வைத்தியத்தில் தேகபுஷ்டிக்கும், ஆஸ்த்மாவைப் போக்கவும், விக்கலையும் அஜீர்ணத்தையும் போக்கவும் கிராம்பை உபயோகிக்கிறார்கள்.

மற்றச் சரக்குகளைப்போல் கிராம்பும் உணவை நல்ல வாசனையால் நிறைத்து ஜீர்ணரச உற்பத்தியை அதிகப்படுத்தி, ஜீர்ணக்கருவிகளில் இருக்கும் சிறிய கிருமிகளை நாசமாக்கும். கிராம்பைப் பேஸ்ட், எண்ணெய், பொடி, கஷாயம் முதலிய பல வகைகளில் மருந்தாக்கி உபயோகிக்கிறார்கள்.

இன்னும் நமக்குத் தெரியாத பல முறைகளிலும் கிராம்பு உபயோகப்படுகிறது. நமக்குத் தெரிந்தமட்டில் மசாலைப் பொடி, பாக்குப் பொடிகளிலும், தித்திப்பும்காரமும் கூடிய தின்பண்டங்களிலும், தக்காளி ஜாமிலும், மாமிசமோ அரிசி மாவோ கொண்டு செய்யும் தின்பண்டங்களிலும் அதிக அளவில் கிராம்பைச் சேர்க்கிறார்கள். மாத்திரைகளிலும் பல் தேய்க்கும் பேஸ்ட்களிலும் கிராம்பு மறைந்திருக்கிறது. ஜாவா மக்கள் கிராம்பை உபயோகித்துச் சிறந்த சிகரெட் தயாரிக்கிறார்கள். கொய்தெஸ் நகரம் இதற்கு நடுநாயகப் பிரதேசம். கிராம்பை ஆறு முதல் பத்து மணிநேரம் வரைக்கும் தண்ணீரில் ஊறவைத்துப் பின்பு யந்திரங்களின் உதவியினால் சிறுசிறு துண்டுகளாக்கிப் புகையிலையோடு கலக்கிறார்கள். ரைஸ் பேப்பர் அல்லது வாழையிலைச் சருகுகளில் இந்தக் கலவையைச் சுற்றி, சிகரெட் செய்கிறார்கள். சமீப காலத்தில் மின்சார அடுப்பில் இந்தக் கலவையைப் பதப்படுத்துகிறார்கள். நூலினால் சிகரெட்டை வரிந்து கட்டி வாயில் வைக்கும் சிறுத்த நுனியைச் சர்க்கரை மாத்திரையால் தயாரித்த திரவத்தில் நனைத்து உபயோகித்தால், 'சடபுடா' என்ற சப்தத்துடன் சிகரெட் எரியும். செயற்கை வாசலைன், ஸோப்பு, பல்பொடி முதலியவற்றிலும் கிராம்பைக் கலக்கிறார்கள்.

ஐரோப்பாவில் கிராம்பின் பழக்கம் ஜனங்களைக் கவர்ந்த முறை வேடிக்கையானது: பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் பிளேக் நோய் பெருவாரியாகப் பரவியிருந்தது. இதுதான் தருணம் என்று திருடவும் கொள்ளையடிக்கவும் புகுந்த நாலு திருடர்கள் தமக்குப் பிளேக் பரவாமல் தடுத்துக்கொள்ள ஒரு மருந்து தயாரித்துக்கொண்டார்கள். கிராம்பு, கர்ப்பூரம், வெள்ளுள்ளி இவற்றோடு வேறு சில மருந்துச் சரக்குகளைக் கலந்ததுதான் அந்த ரகசியமான மருந்து. இவர்களை அதிகாரிகள் பிடித்தார்கள். இவர்கள் தயாரித்த மருந்தின் ரகசியத்தை வெளியிட்டால், விடுதலை செய்துவிடுவதாக நியாயாதிபதி தீர்ப்புச் செய்தார். இவர்கள் அப்படியே மருந்தின் ரகசியத்தைச் சொல்லி விடுதலை அடைந்தார்கள். இதனால் அந்தச் சரக்குகளின் அருமை பெருமைகள் நமக்கு விளங்குகின்றன அல்லவா?

ஆப்பரேஷனுக்குப் பிறகு 'ஸிங்க் ஆக்ஸைடு' என்ற பொருளை ரோசனத்தோடும் கிராம்போடும் கலந்து பற்றுப் போடும் முறையை இப்பொழுது கையாளுகிறார்கள். கிராம்பால் தோலைப் பதனிடும் ஒரு முறையை அமெரிக்கர் கண்டு பிடித்திருக்கிறார்கள். உருளைக்கிழங்குத் துண்டுகளைச் சேமிப்பதிலும் ரொட்டியிலும் நாற்றம் வராமல் இருக்கக் கிராம்பைச் சேர்க்கிறார்கள். வாசனைப்பொருள்கள் தயாரிக்கும்போதும் இது அவசியமாகிறது.

# சுதந்தரச் சட்ட அரசு

## வின்ஸ்டன்லி சித்திரம்

ஒழுக்கமும் இன்பமும் உலகெலாம் வழங்கக் கற்பனை வகுத்தவர் பல பெரியோர். அவைகளில் ஒன்று இது. இந்தக் கட்டுரை வரிசையை எழுதிவருபவர் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஹாரிங்டன் வரைந்த கடற்கன்னி என்னும் கற்பனை உலகத்தில் திரிந்த நாம் கெர்ராட் வின்ஸ்டன்லி (Gerrard Winstanley) வகுத்த சுதந்தரச் சட்டம் என்ற நூலின் சிறப்பைத் துருவி ஆராய்வது சாலப் பொருத்தமாகும்.

17-ஆம் நூற்றுண்டில் வியாபாரம் மிக விரைவாய்ப் பெருகினுலும், பெரும்பாலான மக்கள் வறுமைச் சேற்றில் உழன்றுர்கள். வேலையில்லாமையும் வீடு வாசல் இல்லாமையும் கோர தாண்டவமாடின. வறுமையால் வாடித் தெருவில் பிச்சையெடுப்பவர்களுக்கு முதலில் 'R' (ஆர்) என்ற எழுத்தில் சூடு போடுவார்கள். இந்தச் சூட்டையும் மீறிப் பிச்சையெடுக்க முயன்ருல், அவர்களுக்கு மரண தண்டனையும் விதிப்பார்கள். இப்படி விதித்து என்ன பயன்? கலகங்கள் அதிகரித்தன. உள்ளத்தே புகைந்துகொண்டிருந்த அருவருப்பாம் அனல் கொழுந்து விடத் தொடங்கியது. அதை அடக்க அடக்க, அது பதின்மடங்கு சுவாலையைக் கக்கியது. 1648-இல் 'சமமட்டம் செய்வோர்' (Levellers) இயக்கம் ஒன்று வின்ஸ்டன்லியின் தலைமையில் தொடங்கியது. 1649-ஆம் ஆண்டில் முதல் சார்லஸ் வேந்தன் கொலையுண்டான். அதே சமயத்தில் இந்த இயக்கத்தார் தம் அலுவல்களைச் செய்யத் தொடங்கினுர்கள். அவர்கள் கூறியது இது:

''ஜார்ஜெஸ் ஹில் (Georges Hill) என்ற இடத்தையும் அதன் மருங்கிலுள்ள தரிசு நிலங்களையும் உழுது விதை தூவப் போகிறேம். நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தச் சிந்த உழைத்தே உண்போம். பூமியை ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் பொதுவாக அமைக்கக் கச்சை கட்டிவிட்டோம்.''

இந்த இயக்கத்தைப் படைத்த கெர்ராட் வின்ஸ்டன்லியைப் பற்றி 1648-ஆம் ஆண்டு வரையில் யாதொரு சரித்திரக் குறிப்பும் நமக்குக் கிடைக்கவில்லை. புதிய நேர்மைச் சட்டம் (The New Law of Righteousness) என்ற நூலை அவர் வெளியிட்டார். 'நிலம் எனது, உனது என்று சொல்லுகிற வரையில் பொது மக்களுக்கு யாதொரு சுதந்தரமும் தோன்றுது. செல்வம் படைத்தோர்களுக்கு அவர்கள் அடிமைகளாய்த்தான் இருக்கும்படி நேரிடும். ஏசுநாதர் தூய அறிவொளியையும் நியாயமாம் விளக்கையும் வையகத்தின் நடுவே ஏற்றிச் சென்றுர். அவ்வொளி காட்டும் நெறியிலே மாந்தர்கள் செல்லவில்லை. அடிமைகளும் பிச்சைக்காரர்களும் உலகத்தில் தோன்றக் கூடாதென்பதே அந்தச் சான்றேனின் திருவுள்ளமாகும். ஆதலால், மனிதன் மனிதனை வஞ்சித்து அடிமையாக்கும் புலைத் தொழிலுக்குச் சவக் குழி தோண்ட வேண்டும்' என்று வின்ஸ்டன்லி முயன்றுர். தம்முடைய கருத்தை அச்சமின்றி உலகங் கேட்க முரசடித்தார்.

''ஒரு மனிதனுல் எத்தனை காணி நிலம் உழ முடியுமோ அத்தனை காணி நிலந்தான் அவனுக்கு உரிய

தாகும். பிறர் வருந்தத் தாம் பயன் அடையும் நிலை முற்றும் மாறவேண்டும். 'உழைப்பவர் ஒருவர், உண்பவர் மற்றொருவர்' என்ற அறஞ் சிதைந்த நெறியை அப்பொழுதே அகற்றுவது சான்றோர்களின் கடமையாகும் என்ற எண்ணத்தை வேரோடு அறுத்து, நிலம் அனைத்தும் நம்முடையது என்று கருதி எல்லாரும் சேர்ந்து கழனிகளில் விளைவதைப் பகிர்ந்து கொள்ளுவார்களாக.''

இந்தக் கருத்துக்களெல்லாம் அடங்கிய சுதந்தரச் சட்டம் என்ற நூல் 1652 - ஆம் ஆண்டு வெளியாயிற்று. இவர் கிராம்வெல்லுக்கு ஓர் அறிக்கையை அனுப்பினார். ''நம்மை வருத்திய வேந்தனோடு அவன் அதிகாரமும் மாய்ந்து போய் விடட்டும். தங்களுக்காகப் பாடுபட்ட மக்களுக்கு நிலங்கள் போய்ச் சேர்வதும் சாலவும் நலமாகும்'' என்று அதில் கூறினார்.

மாந்தர்களின் உள்ளங்களில் இத்தகைய அறிவுச் சுடர் அவிந்து போகாமல் எரியுமானால், ஏசுநாதர் கண்ட கனவு உருவெடுக்கும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

அறிவுச் சுடரில்தான் இவருடைய நம்பிக்கைத் திரி இடையறாது எரிந்து ஒளிவிட்டுத் திகழ்ந்தது. மந்திர மாயங்களில் இவருக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. சுவர்க்கம், நரகம் என்பவையெல்லாம் வெறுங் கட்டுக் கதைகள் என்று உள்ளந் தேர்ந்தவர். மரணத்துக்கு அப்பால் உள்ள ஒரு பெரிய அமர வாழ்விலும் இவர் ஐயங்கொண்டார். ஆதிப் பாவம் என்ற கொள்கையை எதிர்த்தார். ''மனிதன் பிறப்பிலேயே நல்லவனாயும் சுதந்தரமுள்ளவனாயும் இருக்கிறான்; ஆனால் பொல்லா ஒழுக்கச் சூழ்நிலைதான் இவனுடைய நற்குண நற்செயல்களை மாசுறச் செய்கிறது'' என்பது இவர் கருத்து. கார்ல் மார்க்ஸும் இத்தகைய கொள்கையில் நம்பிக்கை உடையவர் என்பதை நாம் அறிவோம்.

கற்பனை உலகங்களைப் படைத்த தாமஸ் மோர் போன்றவர்கள் தங்கள் படைப்புக்களில் தனி மனிதனின் சொத்துரிமைக்கு இடம் தந்தார்களில்லை. வின்ஸ்டன்லியும் இத்தகைய கொள்கையைப் பின்பற்றியதில் வியப்பில்லை. பொருளாதார வட்டத்தில் சுதந்தரம் இறந்து போனால், உண்மையான சுதந்தர ஊற்றுக்கள் எங்கும் வறண்டுதான் போகும். மாசற்ற பொது உடைமை அரசியலின் சுதந்தரம், எல்லாரும் சேர்ந்து நிலத்தை நுகர்வதில்தான் கிட்டும்.

வையகம் அளிக்கும் செல்வங்களைச் சேர்ந்து நுகர்வதற்குப் பேராசை, செருக்கு, நயவஞ்சகம், அழுக்காறு, அச்சம், துன்பம் இத்தகைய தளைகள் மனத்தை விட்டு அகலவேண்டும். சுதந்தரம் தாண்டவமாடுகிற மனத்தில்தான் இவைகள் தோன்றமாட்டா. ஆனால் புறத் தளைகள்தான் அகத் தளைகளுக்குக் காரணங்களாய்த் திகழ்கின்றன. தக்க சூழ்நிலை அமையுமானால், தீய குணங்கள் பிறப்பதற்கே இடம் இல்லாமற் போய் விடும். அதிகாரம் அதிகாரிகளை மாசுறச் செய்யும். நீடித்த அதிகாரத்தில் ஒருவனை அமர்த்தி வைப்போமானால், அவனுடைய ஆத்ம குணங்கள், பண்பாடுகள், உயர்ந்த லட்சியங்கள், தூய்மையான உணர்ச்சிகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து அவிந்துவிடும். அந்தக் காரணத்தால் ஒவ்வோர் ஆண்டும் புதிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேக்கமுள்ள நீர் நாறுவதை நாம் உணர்கிறோம்; இடையறாது ஓடிக் கொண்டிருக்கிற நீரில் ஒரு தூய்மை திகழாமற் போகாது. இயற்கையில் இலங்குகிற நெறியைக் கொண்டே ஆண்டுதோறும் புதிய புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்ற உண்மை பிறக்கிறதன்றோ? மேலும், அதிகார வேட்கையில் நீடித்துத் திளைக்கிறவர்கள் பொது மக்களின் நன்மையைக் கருத மாட்டார்கள் என்பது திண்ணம். ஆண்டுதோறும் அதிகாரிகளை ஏற்படுத்தினால், அவர்களுக்கு ஓர் அச்சம் ஏற்படும். இனி வருபவர்கள் தாம் நடத்தின அலுவல்களைத் துருவி ஆராய்வார்

கள் என்ற எண்ணத்திலே அவர்கள் ஒழுங்காய் நடப்பார்கள் என்பது உண்மை யன்றோ?

அநுபவம் முதிர்ந்தவர்கள்-நல்ல நெறியில் நடப்பவர்கள் - சுயநலமற்றவர்கள்தான் அரசியல் கப்பலைக் காற்றிலும், மழையிலும், இருட்டிலும் நடத்திச் செல்ல முடியும். குடிகாரர்கள், சண்டை சச்சரவு செய்வோர்கள், அச்சம் மிகுதியுள்ளோர்கள், அறிவிலிகள், இன்பங்களுக்கு அடிமையானவர்கள், மிகுதியாகப் பேசுவோர்கள் இவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகங்களை நல்க மாட்டார்கள். ஆனால் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் இவர்களுக்கும் உரிமை உண்டு. முடியாட்சியை விழைவோர்களுக்கு இடந் தருவது மிகத் தவறாகும். முடியாட்சியினால் இடுக்கண் உற்றவர்களுக்குக் குடியாட்சியில் பதவி அளித்தல் நலமாகும். சுதந்தரத்துக்காக முயன்றோர்களுக்கு உத்தியோகங்கள் அளிப்பது உத்தமமான செயல் என்பதில் சந்தேக முண்டோ?

மோர் கண்ட கற்பனை உலகத்தின் தன்மையை அறிந்தவர் வின்ஸ்டன்லி என்பது உண்மையே. குடும்பமே சமுதாயத்தின் நாற்றங்கால் என்று மோரைப் போலவே வின்ஸ்டன்லியும் கருதினார். குடும்பத்தின் பண்பாட்டைப்பற்றி மோரும் மொழிந்திருக்கிறார். தந்தை தன் குழந்தைகளின் படிப்பு முறைகளைச் செவ்வனே வகுக்கிறான். அவர்கள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்ப்பது அவனுடைய கடமையாகும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் அமைதி நிலவும்படி செய்ய மூன்று, நாலு, அல்லது ஆறு சான்றோர்களின் குழு ஒன்று இருக்கும். இவர்களுடைய வேலை, கிராமத்திலும் நகரத்திலும் அமைதி குலையா வண்ணம் காப்பதுதான். மனிதர்களுக்கிடையே கலகங்களும் சச்சரவுகளும் நிகழுமாயின், இந்தச் சான்றோர்களின் முன் கலகக்காரர்களை ராணுவ சேவகர்கள் அழைத்து வருவார்கள். இவர்கள் அந்தச் சச்சரவுகளைத் தீர்த்துவைப்பார்கள். நம் நாட்டில் பண்டைக்காலந் தொட்டு இருந்துவரும் பஞ்சாயத்தார் குழுவை இத்தகைய முறை நினைவூட்டும் என்பது திண்ணம். அமைதிக் குழுவில் சச்சரவுகள் ஒரு முடிவுக்கு வராத நிலையில், நீதி மன்றத்துக்கு இவைகள் வந்து குவியும். எவ்விதத்திலும் சட்டங்களுக்கு மாந்தர்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். சட்டங்களை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் உயிர் நாடி ஆகும்.

கிராமத்திலுஞ் சரி, நகரத்திலுஞ் சரி, நான்கு விதமான மேற்பார்வையாளர்கள் இருப்பார்கள். அவர்களுள் அமைதி குலையாமல் பார்க்கும் வட்டம், வியாபாரங்களைக் கவனிக்கும் இலாகா இவைகள் திகழ்கின்றன. சுமார் அறுபது வயசை எட்டியவர்களுக்கு, எல்லோருடைய அலுவல்களையும் கவனிக்கவேண்டிய கடமை உண்டு. ஏதாவது தீங்கு நிகழுமாயின் அவர்கள் அரசாங்கத்துக்குத் தெரிவிப்பார்கள்.

ராணுவ வீரன் அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பான். பார்க்கப் போனால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ராணுவ வீரர்களே. இவர்கள் ஆண்டு தோறும் நியமிக்கப் பெறுவார்கள். இவர்களுடைய வேலை குற்றவாளிகளை நீதி மன்றங்களுக்குக் கொண்டு வருவதே. குற்றவாளிகளை அடைத்து வைத்துக் காப்பாற்றுவதற்கு வேண்டிய சிறைச்சாலை அதிகாரிகள் இருக்கிறார்கள். கைதிகள் வேலை செய்யுமாறு அவர்கள் கட்டளையிட வெண்டும். சரியானபடி உழைத்தால் அவர்களுக்குப் போதுமான உடையும் உண்டியும் அளிக்கப் பெறும்; வேலையில் அயர்வு காட்டுவார்களானால் குறைந்த ஆகாரந்தான் அவர்களுக்கு வழங்கப் பெறும். சிறையை விட்டுக் கள்ளத்தனமாய் அவர்கள் வெளியேற முயன்றால் ஒரு பெருங் கூக்குரல் எழும். பிடிபட்டால், அவர்களுக்கு மரண தண்டனைதான் கிடைக்கும். சட்டந்தான் எல்லோருக்கும்

நியாயம் நல்குகிறது. நியாயாதிபதி சட்டத்தின் வாயெனக் கருதப் பெறுவான்.

நாட்டு அமைச்சர்களின் அலுவல்களைப்பற்றியும் வின்ஸ்டன்லி மொழிகிறார்: ஞாயிற்றுக்கிழமை தோறும் கிராமங்களில் சபைகள் கூடும். அந்தச் சபைகளில் அமைச்சர்கள் நாட்டின் சட்டங்களை உரத்துப் படிப்பார்கள். சரித்திர சம்பந்தமான விஷயங்களும் விஞ்ஞானத்தைச் சார்ந்த பொருள்களும் ஆராயப்பெறும். இவருடைய காமன்வெல்த்தில் மதத்துக்கு இடமில்லை. மதப்பற்று நீங்கிய அரசியலைப்பற்றி நாமும் பேசுகிறோம் அன்றோ?

சட்டங்கள் இருந்து பயனில்லை; அவைகளை மக்கள் நன்கு உணராமற் போனால், சட்டமே இல்லாத நாட்டை அது ஒக்கும். மேலும் முடியாட்சியில் சில பேர்களுக்கே உரிமைகள் இருக்கமுடியும். ஆதலால், ஒரு காமன்வெல்த் வேண்டும். அதில் எல்லோரையும் சமமாய் நோக்கி அருள் புரியும் சுதந்தரத் தேவி மிகப் பொலிவுடன் வீற்றிருப்பாள். ஒரு லட்சிய அரசியலில் படிப்பும் தொழிலும், பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் அளிக்கப் பெறும்.

பொருள்களைப் படைக்கிற முறையில் பொது உடைமைத் தத்துவம் நடனமாடினால், அந்தப் பொருள்களை நுகர்கிற அளவில் தனித்த மனிதனுக்கு உரிமை உண்டு என்று வின்ஸ்டன்லி கூறுகிறார். உலகமே ஒன்றாய்த் திகழ வேண்டுமென்பதே இவருடைய உயர்ந்த லட்சியமும் கனவும் ஆகும். இந்த லட்சிய நாட்டில் குடும்பத்துக்கு இடம் உண்டு.

ஆடவர்களும் பெண்களும் தாங்கள் விரும்பிய பேர்களை மணந்துகொள்ளலாம். பதவியும் பிறப்பும் இந்த மணங்களுக்குக் குறுக்கே நில்லா. எல்லோரும் ஒரு குலமே. ஓர் ஆடவன் ஒரு பெண்ணின் மூலம் ஒரு மகவைப் பெற்றானே யானால், அவளை அவன் மணக்கத்தான் வேண்டும். வலிய ஒரு பெண்ணை இழுத்து அவளோடு ஆடவன் சேர முடியாது.

ஒரு மனிதன் அயலான் மனைவியைச் சேர முயன்றால், முதலில் அவனுடைய தீச் செயலைக் கண்டிப்பார்கள். இதே தீச்செயலை மீண்டும் செய்ய முயன்றால் அதிகாரிகளின் கீழே பன்னிரண்டு மாதம் ஒரு வேலைக்காரனாக அவன் இருக்கும்படி நேரிடும். வலிய அவளை இழுத்து மூன்றாந் தரம் நிர்ப்பந்தப் படுத்தினால், மரண தண்டனை தான் அவனுக்குக் கிடைக்கும். எல்லாம் சுதந்தரச் சூழ்நிலையில் தான் வளர வேண்டும் என்பதே வின்ஸ்டன்லியின் திருவுள்ளமாகும்.

இவருடைய லட்சிய நாட்டை எல்லாரும் காணக் குவிந்து வருவார்களாம். இந்தக் கற்பனை உலகத்திலிருந்து சட்டங்கள் எங்கும் பரவும். அந்நிய நாட்டினர்களும் இந்தச் சட்டங்களைப் பின்பற்றி உய்வார்கள். பொங்கு செல்வமும், இன்பம் நல்கும் அமைதியும் எங்கும் தழைத்தோங்கும். கொடுங்கோல் மன்னர்கள் இல்லை; பிரபுக்கள் இல்லை; மடத்துக்கு வரி வாங்கும் பாதிரிகள் இல்லை; மக்களை அட்டை போல உறிஞ்சும் வழக்கறிஞர்கள் இல்லை; குடியானவர்களைக் கசக்கிப் பிழியும் மிராசுதார்கள் இல்லை. அறத்தில் பிறந்த சட்டந்தான் எங்கும் ஆணை செலுத்துகிறது. மோர் வகுத்த கற்பனை உலகத்தைப்பற்றிப் பேசுகிறார்களே தவிர, இவரைப் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள் இல்லை. இவருடைய புகழ் உலகத்தில் பரவவில்லை. இது ஒரு பெரும் வியப்பே.

**தலையணையும் மனச்சாட்சியும்**

நல்ல தூக்கம் தூங்குவதற்குச் சுத்தமான மனச்சாட்சிபோல் உதவும் சுகமான தலையணை எதுவுமில்லை.

—'கஹானியா'

கம்பளி ஸ்வெட்டர் போட அநுபவ ரீதியில்
சுலபமான ஒரு வழி இது.

# கொசுவலையில் ஸ்வெட்டர்

## ஸ்ரீமதி என். ராமகிருஷ்ண

அழகும், பார்க்கக் கவர்ச்சியும் உள்ள 'ஸ்வெட்டர்' என்ற கம்பளி மேல் அங்கிகளைப் பலவித வர்ணங்களில் கொசுவலைத் துணியில் ஒழிந்த நேரத்தில் பின்னி விடலாம். அதற்கு வேண்டிய பொருள்கள் நான்கு அங்குல நீளமுள்ள தையல் ஊசி, கொசுவலைத் துணி, கம்பளி நூல் இவை தான்.

பெரிய கண்கள் உள்ள கொசுவலைத் துணியை எடுத்துக்கொள்ள வேண்டும். சுமாரான குழந்தைக்கு முக்கால் கஜம் துணி போதும். குழந்தையின் அங்கங்களை அளவெடுத்து அதற்குத் தக்கபடி பல பாகங்களையும் கத்தரிக்க வேண்டும். மார்பு, முதுகு, கை இவற்றின் அளவு முக்கியம். கழுத்துப் பகுதியை உருண்டையாகவோ, கோழி முட்டை உருவத்திலோ வெட்ட வேண்டும். முன் பக்கம் பித்தான்கள் வைத்துத் தைக்கத் துவாரம் வெட்டி விட வேண்டும்.

இந்தப் படங்களில் உள்ளது போன்ற டைமண்டு மோஸ்தர் ஸ்வெட்டர் எப்படிச் செய்வது என்று கவனிப்போம். நீளமான ஊசியில் முதலில் கம்பளி நூலை எடுத்துக்கொண்டு, அந்த நூலைக் கொசுவலைத் துணியில் உள்ள



கொசுவலைத் துணி



தைத்த டைமண்டு மோஸ்தர்

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் (ஆங்கிலம்: 14-9-'57), சென்னை-2.

ஒவ்வொரு துவாரத்திலும் கொடுத்து வாங்க வேண்டும். முதலிலிருந்து கடைசி வரையில் உள்ள ஒவ்வொரு துவாரத்திலும் நூல் செல்ல வேண்டும். முதலில் ஒரு டைமண்டு மோஸ்தரைப் பூர்த்தி செய்த பிறகு, திரும்பத் திரும்ப அப்படியே மற்றவற்றைத் தைக்க வேண்டும். ஒரு டைமண்டு போடுவதற்குக் கீழே கொடுத்திருக்கும் அட்டவணை உபயோகப்படும்:

**1-ஆவது வரிசை:** ஊசியை ஒவ்வொரு துவாரத்திலும் செலுத்தி இழுக்க வேண்டும்.

**2-ஆவது வரிசை:** ஊசியை ஒரு துவாரம் விட்டு ஒரு துவாரம் செலுத்த வேண்டும்.

**3-ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் செலுத்தி, மறுபடியும் ஒரு துவாரம் விட்டு மறுபடியும் இரண்டு துவாரங்களில் செலுத்த வேண்டும்.

**4-ஆவது வரிசை:** ஊசியை நான்கு துவாரங்களில் செலுத்த வேண்டும்.

**5-ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் செலுத்தி ஒரு துவாரம் விட்டு மறுபடியும் இரண்டு துவாரங்களில் செலுத்த வேண்டும்.

**6-ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் செலுத்தி, பிறகு இரண்டு துவாரங்கள் விட்டு, மறுபடியும் இரண்டு துவாரங்களில் செலுத்தி இழுக்கவேண்டும்.

**7-ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் செலுத்தி, பிறகு ஒரு துவாரம் விட்டு, மறுபடியும் இரண்டு துவாரங்களில் செலுத்த வேண்டும்.

**8-ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் செலுத்தி மறுபடியும் இரண்டு துவாரங்களில் செலுத்த வேண்டும்.

**9 ஆவது வரிசை:** ஊசியை இரண்டு துவாரங்களில் அடுத்துச் செலுத்த வேண்டும்.

**10-ஆவது வரிசை:** ஒவ்வொரு துவாரத்திலும் செலுத்தவேண்டும்.



பாதி உருவான ஸ்வெட்டர்



உள்பக்கம் லைனிங்

**11-ஆவது வரிசை:** முதல் வரிசை போல் மீண்டும் தொடங்கிச் செய்யவேண்டும்.

இதுபோலவே உடல்பாகம், கை முதலிய பாகங்களைக் கம்பளிநூல் கொண்டு நிரப்பிக்கொள்ளவேண்டும். டைமண்டு மோஸ்தரில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம், மத்தியிலுள்ள ஒவ்வொரு கோடும் சரியாக வருவதுதான். கொசுவலைத் துணியில் உள்ள வெள்ளை நூல் இதற்கு உதவியாயிருக்கும்.

ஐந்து வயதுக் குழந்தைக்கு ஸ்வெட்டர் தைக்கச் சுமார் 3 அவுன்ஸ் நூல் தேவை. துணி முக்கால் கஜம் வேண்டும்.

கம்பளி நூல் வேலை முடிந்தவுடன், தையல்காரரிடம் செல்ல வேண்டும். வீட்டில் தையல் யந்திரம் இருந்தால், நீங்களே தைத்து விடலாம். கைகளை உடம்புடன் பொருத்திவைத்து ஓரங்களை மடித்து உள்புறம் தைக்க வேண்டும். உள்புறம் சில்க் துணியை லைனிங் கொடுத்துத் தைக்க வேண்டும். அப்போதுதான் கம்பளிநூல் குத்தாது. முன்பக்கத்தை மூடுவதற்குப் பிரஸ் பித்தான்கள் வைத்து உள்புறமாகத் தைக்க வேண்டும். மேல்புறம் பார்வைக்கு அழகாயிருப்பதற்காக வர்ணப் பித்தான்கள் தைக்கலாம்.

உடலின் மேல்பாகத்தில் பல விதமான மாதிரிகள் தைக்கலாம். டைமண்டு மட்டும் அல்ல; வங்கிகள், சதுரங்கள், வட்டங்கள் முதலிய கோலங்களும் போடலாம். முடிந்த பிறகு ஸ்வெட்டரைப் பார்த்தால் முழுவதும் கம்பளியினுல் செய்தது போலவே அது தோன்றும். கொசுவலைத் துணி எந்த இடத்திலும் கண்ணில் படாது.

சுமாராக ஒரு ஸ்வெட்டர் போட ரூபாய் ஐந்து பிடிக்கும். ஒழிந்த வேளையில் இதில் ஈடுபட்டால், ஒரு வாரத்தில் ஒரு ஸ்வெட்டரை உருவாக்கலாம்.



பல மோஸ்தர்கள்



அணிந்து மகிழும் குழந்தை

பெண்ணுக்கு மாங்கலியமே பெரும் பாக்கியம்;
அதைக் காக்கவே தேவி பூஜை.

# சர்வ மங்களை

**பி. எஸ். லட்சுமி**

தன்னை இழந்தே தருமம் செய்யும் சுபாவம் உடைய பரமேசுவரர்தான் விஷத்தைக் குடிக்க ஒப்புக்கொண்டார்; அது அவருடைய வள்ளன்மையைக் காட்டுகிறது. தகித்துக்கொண்டு வரும் விஷத்தின் அனல் தாங்காமல் வாடிய தேவர்கள், 'ஐயோ' என்ன கதி!' என்ற பயத்தால் அவரை அதை உண்ணச் சொல்லியிருக்கலாம். தாம் கஷ்டப்பட்டுப் படைத்த உலகம் முழுவதும் நீறாகி விடப்போகிறதே என்ற கவலையால் பிரம்மதேவரும், தான் தோன்றியான பெருமானை வேண்டியிருக்கலாம். ஆனால் தன் உயிருக்குயிரான கணவர், ''விஷத்தை உண்ணப்போகிறேன்'' என்றபோது ஒரு முறை கடைக் கண்ணால் பார்த்துச் சம்மதம் கொடுத்தாளே, அந்தச் சர்வ மங்களை; எப்படிச் சம்மதித்தாள்?

தன் மாங்கலியத்தை ஈடாக வைத்து, பல உலகங்களிலும் இருக்கும் தேவ, மானிட, அரக்கப் பெண்களின் மாங்கலியத்தைக் காக்க முற்பட்டாள் ஆதியம்மை. அதனால்தான் இன்று மாங்கலிய பலத்தைக் கோரும் பெண்கள் எல்லாரும் அவளை வழிபடுகிறார்கள். அதோடு, பெண்களை விளையாட்டுப் பொம்மைகளாக மதித்த அந்தக் காலத்திலேயே பெண்மையின் பெருமையை நிரூபித்து அமரர்களைக் காத்தாள் பார்வதி.

கொடிய தவம் செய்தான் மகிஷாசுரன். தேவர், மானிடர், அரக்கருள் எவராலும் சாகா வரம் பெற்றான். அப்படிப்பட்ட அசுரன் குலப் பெண்களை மட்டும் மறந்தா போயிருப்பான்? கேவலம் பெண்களால் என்ன செய்ய முடியும் என்ற அலட்சியத்தாலேயே விட்டுவிட்டான். அவனுடைய அட்டகாசத்தையும் இம்சையையும் பொறுக்க முடியாத தேவர்கள், அவனுக்கு ஆண்களால் சாவு இல்லை என்பதை அறிந்து ஈசுவரியைச் சரண் புகுந்தார்கள். தேவர்களுக்கு இரங்கிய அம்மை, ஆயிரம் கைகளில் ஆயிரம் ஆயுதங்களைத் தாங்கிச் சிங்க வாகனத்தில் ஏறித் தோழிகள் புடை சூழ, மகிஷாசுரனுடைய நகரத்துக் கருகே ஒரு தோட்டத்தில் தங்கினாள். மூவுலகங்களையும் கவர்ந்த திரிபுரசுந்தரியின் அழகைக் கண்ட அரக்கர்கள் மகிஷனிடம் அவளைப் பற்றி வர்ணித்தார்கள். அவன் தேவியைத் தன் ராணியாக்க விரும்பித் தூது விடுத்தான். தூதரைக் கண்ட தேவி, கலகல என்று சிரித்தாள். ''உங்கள் மகாராஜாவைவிடத் தகுதியுள்ளவர் வேறு யாரும் இல்லை. ஆனால் நான் ஒரு சபதம் செய்திருக்கிறேன். என்னுடன் போரிட்டு என்னை வென்றவர்களையே மணப்பேன். உலகங்கள் எல்லாவற்றையும் வென்ற உங்கள் அரசனுக்கு ஒரு பெண்ணை வெல்லுவது கஷ்டமா? அவரிடம் சொல்லுங்கள்'' என்று சொல்லியனுப்பினாள்.

அவளுடைய விபரீதமான விருப்பத்தை அறிந்த மகிஷன், யுத்தத்துக்குத் தயார் செய்தான். இந்தச் செய்தியை அறிந்த மகிஷனுடைய மனைவி பயத்தால் நடுங்கினாள். திரிபுரசுந்தரி இறங்கியிருந்த வனத்துக்குப் போய் வணங்கித் தனக்கு மாங்கலியப் பிச்சை தரும்படி வேண்டினாள். தேவி, ''உன் உயிருள்ள மட்டும் உன் மாங்கலியத்துக்குக் குறைவு

மூலம்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு: 2-10-'57), சென்னை-1.

வராது'' என்று அபயம் கொடுத்தாள்.

அரண்மனைக்குத் திரும்பிய ராணி மகிஷனைக் கண்டு, தேவி சாமான்யப் பெண் அல்ல என்றும், தான் அவளை தரிசித்து வந்ததையும் சொன்னாள். அவனுக்குப் பெண்ணாலே சாவு என்ற வரத்தை நினைவூட்டினாள். வந்திருப்பவள் லோகமாதாவே என்றும், அவளை விரும்புவதோ அவளுடன் போரிடுவதோ தீமையே தரும் என்றும் சொன்னாள். அவளுடைய உபதேசம் மகிஷனைக் கொதித்தெழச் செய்தது. ஒரே வீச்சில் மனைவியை வெட்டி வீழ்த்திவிட்டுச் சண்டைக்குப் புறப்பட்டான்.

உத்தமியும் பதிவிரதையுமான தன் மனைவியை அவன் கொன்றதுமே, தேவி அவளுக்குக் கொடுத்த வரத்தின் பயனும் அழிந்தது; அவன் ஆயுளும் தேய்ந்தது. யுத்த பூமியில் புரட்டாசி மாதம் சுக்கிலபட்ச அஷ்டமியில் தேவி மகிஷாசுரனைக் கொன்றாள். அன்றுதான் துர்க்காஷ்டமி. வாழ்ந்த காலமெல்லாம் பெண்களைப் போகப் பொருளாகவே அவன் கருதி வந்தான். உலகத்தின் பயங்கர எதிரியை ஒழித்த தேவியை எல்லாரும் துதித்தார்கள். ஒவ்வொரு வருஷமும் தேவி சண்டை தொடங்கிய சுக்கிலப் பிரதமை முதல் தசமி வரையிலும் தேவிக்குப் பிரீதியாகப் பூஜை செய்வது நம் நாட்டில் தொன்று தொட்டு நடந்து வருகிறது.

அந்தப் பத்து நாட்களும் கோவில்களில் தேவிக்குத் தசாவதார அலங்காரம் செய்வார்கள். வீடுகளில் கலசம் வைத்துத் தேவியை ஆவாகனம் செய்து, 'தேவி நவராத்திரி' கொண்டாடுகிறார்கள். அப்படி ஒன்பது நாளும் செய்யச் சௌகரியப்படாதவர்கள் மூல நட்சத்திரத்தன்று புஸ்தக வடிவமான சரசுவதியையும், துர்க்காஷ்டமி யன்று துர்க்கையையும், மகா நவமி யன்று மகாலட்சுமியையும் பூஜித்துக் கடைசியில் விஜய தசமி யன்று தேவியை உத்தேசித்துக் கன்னிகைகளைப் பூஜித்துச் சாப்பிடச் செய்து தட்சிணை, தாம்பூலங்கள் கொடுத்து மகிழ்விப்பார்கள். இதைத் 'திரிராத்திர விரதம்' என்பார்கள்.

ஆதிகாலத்தில் சாவித்திரி நாரத முனிவரிடம் 'தேவி மந்திர' உபதேசம் பெற்று மேலே சொன்ன மூன்று நாட்கள் பட்டினியாகத் தேவியைப் பூஜித்து அவளுடைய அருளாலேயே யமதர்ம ராஜனைக் கண்டு கணவனைப் பிழைப்பித்தாள்.

இப்படித் தேவியின் சிறந்த வல்லமையை அறிந்துதான், மகாதேவர் அவளுடைய கடைக் கண் நோக்கின் பலத்தால் விஷத்தை உண்டார். அவள் தடுத்திருந்தால் உண்டிருக்கவே மாட்டார். இந்தச் சூட்சுமத்தை அறிந்துதான் கண்ணனும் நரகாசுர வதத்தின்போது சத்தியபாமையின் கையில் வில்லைக் கொடுத்தான். அரசர்கள் சண்டைக்குப் போகு முன்பு மனைவி மூலம் வெற்றித் திலகம் இட்டுக் கொண்டு, வெற்றி வாளை அவள் கையால் பெற்றுக்கொண்டுதான் போவது வழக்கம். இதனாலேயே முக்கியமான விஷயங்களுக்குப் புறப்படும் கணவனை மனைவி தடை செய்தால் காரியம் கை கூடாது என்று சொல்லுகிறார்கள்.

இது மனைவிக்குக் கணவன் கொடுக்க வேண்டிய கௌரவத்தையும், மனைவி கணவனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையையும் அறுதியிட்டுச் சொல்லுகிறது. இருவரும் கருத்து ஒருமித்திருந்தால்தான், எல்லாப் புருஷார்த்தங்களும் சித்திக்கும். இந்த உண்மையை அறிந்த சிவபெருமான், கௌரிக்குப் பாதி உடலையே கொடுத்தார்; லட்சிய தம்பதிகளாகவும் இவர்கள் இருவரும் திகழ்ந்தார்கள்.

**மகாத்மா**

ஏழைகளுக்காக எவன் இதயம் ரத்தம் வடிக்கிறதோ அவனே மகாத்மா.

—ஸ்வாமி விவேகானந்தர்

4,500 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய நோன்பு இன்றும் நடக்கிறது!

# வாருணி நீராடல்

சுகமய சர்க்கார்

வங்காளத்தில் பாங்குரா என்ற ஊரிலிருந்து பார்த்தால் சுமார் 12 மைலில் கருநீலமாக ஒரு மலை தெரியும். அதன் உச்சியில் ஒரு பிளவிலிருந்து குளுமையான இனிய அருவி ஒன்று பாய்கிறது. இதைச் 'சுசுனியா அருவி' என் பார்கள். கடுங்கோடையில்கூட வற்றுமல் இதிலிருந்து நீர் விழுந்து கொண்டே யிருக்கிறது. கீழ் மட்டத்துக்கு எட்டடி மேலே நரசிங்கம் போல் அமைந்த ஒரு பாறையிலிருந்து இது பாய்கிறது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் இதிலிருந்துதான் நீர் எடுத்துப் போகிறுர்கள். வாருணி தினத்தில் இங்கே நீராடினுல் கங்கையில் குளித்த பலன் உண்டு என்கிறுர்கள். அன்று அயலூர்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் இங்கே வருகிறுர்கள். சிறு வயசில் இங்கே குளித்திருக்கிறேன்; சில ஆண்டுகளுக்கு முன்னும் போய் வந்தேன். முன்னெல்லாம் மக்கள் புண்ணியத்தையே நாடி வந்தார்கள். இப்போது மோட்டார் செல்வதற்கு வசதியாகப் பாட்டை இருப்பதால், இயற்கைக் காட்சியைக் கண்டு களிக்க வருபவர்கள்தான் அதிகம். 'நாகரிக வேட்டுவர்' சிலர் இங்கே இப்போது பறவைகளைச் சுட்டுக் கொன்று இயற்கையின் அமைதியைக் குலைப்பதையும் காணலாம்!

ஆறு ஏழு ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் சுசுனியா அருவிபற்றி ஆசாரிய யோகேசசந்திர ராய் (பிரபல வங்காளி ஆராய்ச்சியாளர்) அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அவர், ''எங்கள் முன்னேர்களில் ராஜா ரணஜித் ராய் மிகவும் பிரசித்தமானவர்; அவர் ஆராமபாக் என்ற ஊருக்குத் தெற்கே ஒரு குளம் வெட்டினுர்; இப்போதும் அங்கே வாருணி தினத்தன்று அநேகம் பேர் குளிக்க வருகிறுர்கள், தெரியுமா?'' என்றுர்.

எனக்கு இது தெரியாது. அது முதல் ஆராமபாக் போக வேண்டும் என்று ஆவல். அந்த ஆண்டு சித்திரை மாதம் 15-ஆம் தேதி வாருணி தினம். அதற்கு முன் இரவு ஆராமபாக் அருகில் இருந்த கிராமத்திலிருந்து மாட்டுவண்டியில் புறப்பட்டோம், நானும் இன்னும் இரண்டு நண்பர்களும்.

ஆராமபாக்கிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவில் இருந்தது ரணஜித் ராய் குளம். இந்தக் கிராமத்திலிருந்து எட்டு மைலுக்குக் குறைவிராது. ஒரு பொட்டல் வழியாக மாட்டு வண்டி போய் வரும் பாட்டை உண்டு; அவ்வளவுதான். இருந்தாலும், இரவுக்காலம் தென்றல் மென்மையாக வீசியதால் மெதுவாக மாட்டு வண்டியில் பயணம் செய்வது மனசுக்குப் பிடித்துத்தான் இருந்தது. இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. மூன்று மைல் தள்ளி நல்ல கப்பி ரஸ்தா தெரிந்தது. அங்கே இன்னும் ஏராளமான பேர் வாருணி நீராட மாட்டு வண்டிகளில் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த வண்டிகளின் பின்னுலேயே நாங்களும் போக வேண்டியிருந்ததால், இன்னும் மெதுவாகப் பயணம் செய்ய நேர்ந்தது. வழியில் எதிரே ஒரு மோட்டாரின் ஹார்ன் சத்தம் கேட்டு எங்களுக்கு முன் செல்லும் வண்டியில் பூட்டிய மாடுகள் மருண்டு போய்ப் பள்ளத்தில் இறங்கிவிட்டன. உடனே அந்த வண்டி குடை சாய்ந்துவிட்டது. நாங்கள் பரபரவென்று எங்கள் வண்டியை விட்டு இறங்கினேம்; குடை சாய்ந்த வண்டியில் இருந்த

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: ஏப்ரல் '57), கல்கத்தா.

வர்களை மீட்கப் போனேம். நல்ல வேளை, யாருக்கும் அடிபடவில்லை. அவர்கள் முஸ்லிம்கள்: அவர்களும் வாருணி நீராடப் போவதாகச் சொல்லவே எங்களுக்கு வியப்பாக இருந்தது. ''அம்பாள் கிருபையாலே ஒன்றும் நேராமல் தப்பினேமே'' என்ருர்கள் அவர்கள்.

''அம்பாள் கிருபையா? எந்த அம்பாள்?'' என்று கேட்டேன் நான்.

என் நண்பர், ''அந்தக் குளத்தங்கரையில் அம்பாள் சங்கு வளையல் வாங்கிப் போட்டுக்கொண்டதாக ஐதிகமாயிற்றே! உனக்குத் தெரியாதா?'' என்ருர்.

''தெரியாதே; சொல்லுங்களேன்'' என்றேன்.

''ராஜா ரணஜித் என்று ஓர் அரசன் இங்கே ஆண்டு வந்தான். அவனுக்கு அம்பிகை குழந்தையாகப் பிறந்தாள். ஏழெட்டு வயசு இருக்கும்போது அரசனைச் சோதிக்க, 'அப்பா, நான் போகட்டுமா? போகட்டுமா?' என்று கேட்க ஆரம்பித்தாளாம். ஒரு நாள் அரசன் ஏதோ அவசர அலுவலில் ஈடுபட்டிருக்கும்போது, திரும்பத் திரும்ப இப்படியே தொணதொணப்புச் செய்தாளாம். அரசனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. அவன், 'சரி; போயேன்' என்ருனும். உடனே மாளிகையை விட்டு வெளியேறி அம்பிகை அந்தக் குளத்தங்கரையில் ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்து கொண்டாளாம். அப்போது வளையல்காரன் ஒருவன் அந்தப் பக்கமாக வந்தான். அவனைப் பார்த்து, 'வளையல்காரா! வளையல்காரா! என் கையில் பத்து ஜதை வளையல் போடு' என்ருள். அவள் அம்பிகை என்று தெரியாவிட்டாலும் அவள் பேசும் விதம் அவனுக்குப் பிடித்திருந்தது. ஆகவே, அவளருகில் வந்து, 'ஏனம்மா, பத்து ஜதை வளையல் என்று கணக்காகச் சொல்கிருய்? நீ யார்?' என்ருன். அதற்கு அவள், 'நான் ராஜாவின் மகள். எனக்குச் சங்கு வளையல் போட்டுவிட்டு அவரிடம் போய்க் காசு கேள். கொடுப்பார்' என்ருள். அவனும் அப்படியே அம்பிகையின் கைகளில் வளையல்களைப் போட்டு விட்டு அரசனிடம் போய் இதைச் சொன்ஞன். அரசனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. 'எங்கே அவள்?' என்று கேட்டான். 'குளத்தங்கரை ஆலமரத்தடியில்' என்று வளையல்காரன் சொல்லவே, அங்கே போய்ப் பார்த்தான் அரசன். அங்கே மகளைக் காணவில்லை. மகளின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். சங்குவளையல் அணிந்த பத்துக் கைகள் அப்போது குளத்தின் நடுவிலிருந்து தோன்றின. இந்தச் சமயம் அம்பிகை தன்னைச் சோதிக்க வந்தாள் என்று அரசனுக்குப் புரிந்தது. வளையல்காரனும் தான் அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமானதை எண்ணிப் பக்தி வசமாஞன். அது முதல் அந்தக் குளம் புண்ணிய தீர்த்தமாகிவிட்டது. அங்கே சந்தை கூடும்; விசாரித்தால் ஸ்தல புராணம் கிடைக்கும்'' என்ருர் நண்பர்.

அருகில் துவாரகேசுவரம் ஆறு இருந்தும் இந்தக் குளம் அதைவிட மகிமை பெற்றிருப்பதற்குக் காரணம் அப்போதுதான் தெரிந்தது. இப்படிப் பேசிக்கொண்டே சுமார் நாலரை மணிக்குக் குளத்தருகில் வந்து சேர்ந்தோம். காஸ் விளக்கு வெளிச்சம் ஜகஜ்ஜோதியாக இருந்தது. ஜன சந்தடி சொல்லி முடியாது. பல மாட்டு வண்டிகளை அங்கே அவிழ்த்து ஒரு பக்கமாக விட்டிருந்தார்கள். கடைகளுக்கும் குறைவில்லை. பெரிய குளம். குளத்தை வலம் வரவேண்டும். அதைச் சுற்றி வருவதற்குள் பொழுது விடிந்துவிட்டது.

வடக்குக் கரையில் அரச மரங்கள் வரிசையாகத் தெரிந்தன. கிருஷ்ணபட்சத்துத் திரயோதசிச் சந்திரன் மேற்கே மங்கித் தெரிந்தது. அதன் அருகில் சதய நட்சத்திரம் ஒளி வீசியது. நோயுற்றுத் தேய்ந்த சந்திரனை நூறு வைத்தியர்கள் (சத பிஷக்) கவனித்துச் சிகிச்சை செய்ய முன் வருவது போல் இருந்தது அந்தக் காட்சி. உதய நேரத்தில் குளத்தில் நீராடினேம். அருகில் மாங்காய் விற்ருர்

கள். குளித்துவிட்டு மாங்காயைக் குளத்து நீரில் அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்படியே நாங்களும் செய்தோம். பிறகு தானம் கொடுப்பவர்கள் கொடுக்கலாம். பிச்சைக்காரர்களுக்குப் பஞ்சம் இல்லை; கையை நீட்டிக்கொண்டும் துணியை விரித்துப் போட்டுக் கொண்டும் பல ஆண்டிகள் உட்கார்ந்திருந்தார்கள். எங்களால் முடிந்தமட்டும் ஏதோ கொடுத்தோம். இதற்குள் ஏராளமான பேர் குளிப்பதால் குளத்து நீர் குழம்பத் தொடங்கியது. சுமங்கலிகள் குளித்துவிட்டுக் குங்குமம் அணிந்து இரும்புவளையல் வாங்கி, அங்கிருக்கும் சாவித்திரி அம்மனுக்கு இடுகிறார்கள். அதற்கு முன் சில தினங்களிலிருந்தே ஒரு விரதம் தொடங்கி அன்று அதை அங்கே முடிப்பார்கள். தேவதைகளுக்கும் பிதுருக்களுக்கும் பிரீதியாகப் பூஜை நடத்திய பிறகு அன்றுதான் மறுபடியும் மாங்காயைத் தின்பார்கள்; அதுவரை மாங்காயைத் தொடக்கூட மாட்டார்கள்.

வாழைப்பழம் மிகவும் மலிவாக விற்றது. அதை வாங்காதவர்களே இல்லை. தண்ணீர்ப்பந்தல் வைத்து, வந்தவர்களுக்கு நீர் மோர் முதலியன கொடுத்தார்கள், அக்கம் பக்கம் ஊர்களிலிருந்து வந்த சாரணத் தொண்டர்கள். ஒரு மூலையில் 'மைக்' வைத்துக் கொண்டு சில சாதுக்கள் ஹரி நாம சங்கீர்த்தனை செய்தார்கள். இன்னொரு பக்கம் சில வாலிபர்கள் இதேமாதிரி ஒலி பெருக்கி வைத்துக்கொண்டு ஹிந்தி சினிமாப் பாட்டுக்களைப் பாடினார்கள். மருந்துச் சரக்கு விற்பனை செய்யும் ஒருவன் ஹார்மோனியத்தை வைத்துக் கொண்டு மூக்கு ஸ்வரம் போட்டுத் தன் மருந்தின் மகிமையைக் குறித்துப் பாடிக்கொண்டே, கும்பல் சேர்ந்ததும் அதை விற்பனை செய்தான். ஒரு யானை போவோர் வருவோர் கொடுக்கும் வாழைப் பழத்தை வாங்கி விழுங்கிவிட்டு, காசுகளைமட்டும் துதிக்கையில் வாங்கிப் பாகனிடம் தந்தது. சிறுவர் கூட்டம் அதைச் சுற்றிக் கூடியிருந்தது.

வாருணி தினத்தன்று கங்கைக் கரையில் இருப்பவர்கள் விடியற்காலையிலேயே கங்கையில் குளிக்க வந்துவிடுவார்கள். இப்படி ஆறு, குளம், அருவி மூன்றிலும் அந்தத் தினத்தில் நீராடியிருக்கிறேன். வாருணி நீராடல் என்றால் ஏன் அவ்வளவு விசேஷம்? சித்திரை மாசம் கிருஷ்ண பட்சத்துத் திரயோதசியன்று சந்திரனும் சதய நட்சத்திரமும் சேர்ந்திருக்கும் புண்ணிய தினம் அது. நம் நாட்டு வான சாஸ்திரப்படி ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் ஒவ்வொரு தெய்வம் அதிபதி. அசுவினிக்கு அசுவினி தேவதைகள், பரணிக்கு யமன், கிருத்திகைக்கு அக்கினி, ரோகிணிக்குப் பிரம்மா என்பதுபோல் சதயத்துக்கு அதிபதி வருணன். இதனால் சதய நட்சத்திரத்துக்கு வாருணி என்று பெயர் ஏற்பட்டது. சந்திரன் ஒவ்வொரு மாசமும் சதய நட்சத்திரத்தோடு சேர்ந்திருந்தாலும் சித்திரையில் இப்படி இருப்பதுதான் விசேஷம்.

ஒரு காலத்தில் அந்த நாளில் புது வருஷம் தொடங்கியிருக்க வேண்டும். நாளடைவில் பல காரணங்களால் நம் நாட்டில் அங்கங்கே புது வருஷ தினம் மாறிவிட்டது. ஆனாலும் பழைய வழக்கப்படி நம் முன்னோர் 'வாருணி தின'த்தைக் கொண்டாடியே வந்திருக்கிறார்கள்.

ஸ்மிருதிகளில் வாருணி தினத்தன்று மது - கிருஷ்ண - திரயோதசி விரதம் கொண்டாட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. சித்திரை மாசத்துக்கு 'மது' என்று ஒரு பெயர் உண்டு. யஜுர் வேத காலத்தில் மது - மாதவ, சுக்கிர - சுசி இப்படியெல்லாம் பருவங்கள் சம்பந்தமான மாசங்கள் வழக்கில் இருந்தன. மது - மாதவ மாசங்களில் வசந்த ருது இருந்தபோது இந்த விரதம் நடத்தியிருக்கிறார்கள் நம் முன்னோர். யஜுர் வேத காலம் சுமார் கி. மு. 2000 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இந்த நோன்பை நம் நாட்டில் கொண்டாடி வருகிறார்கள் என்று சொல்லலாம்.

# சீசாப் பிசாசு

அசல்: ஆர். எல். ஸ்டீவன்ஸன் தமிழ்: கே. எஸ். பி.

நாவல், சிறுகதை, கட்டுரை எல்லாம் எழுதிப் புகழ் பெற்ற ஆசிரியர் இவர். அருமையான நடையும் வர்ணனையும் கருத்துச் செறிவும் கொண்டிருக்கும் இவருடைய எழுத்து.

ஹவாய்த் தீவில் கீவ் என்ற மனிதன் வாழ்ந்து வந்தான். கப்பலோட்டும் தொழிலில் திறமை வாய்ந்தவன். பல நாடுகளையும் மக்களையும் பார்க்க வேண்டுமென்ற அவா எழவே, சான் பிரான்ஸிஸ்கோ நகருக்குக் கப்பலில் புறப்பட்டான்.

அருமையான துறைமுகமும் செல்வம் நிறைந்த மக்களும் கொண்ட ஊர் இது. இங்கே வந்ததும், கீவ் ஒரு மலைக் குன்றைப் பார்த்தான். விசாலமான அழகிய வீடுகள் அவன் கண்களில் பட்டன. வீடுகளையே ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண் டிருந்த கீவ், அவற்றில் மிகவும் சிறிய வீடு ஒன்றைக் கண்டான். வீட்டு வாசற்படி தகதகவென்று மின்னியது. ஜன்னல்கள் பளிச்சென்று ஒளி வீசின. திகைத்துப் பிரமித்தவனாக அந்த வீட்டையே உற்று நோக்கினான். ஜன்னல் வழியே பார்த்தபோது, தாடியும் வழுக்கை விழுந்த தலையுமாய் ஒரு கிழவன் தென்பட்டான். அவன் முகம் துயரத்தில் ஆழ்ந்திருந்தது. இடையிடையே பெருமூச்சு வெளிவந்தது. அவனைக் கீவ் நிமிர்ந்து பார்த்தபோது, அவனும் இவனைப் பார்த்தான்.

கீவைப் பார்த்ததும், அவன் முகம் மலர்ந்தது.

''இது என் அருமையான வீடு. உள்ளே வந்து அறைகளைப் பார்க்கிறாயா?''

கீவை அந்த மனிதன் உள்ளே அழைத்துச் சென்றான்.

''எவ்வளவு அருமையான வீடு! இதில் வாழக் கொடுத்துவைக்க வேண்டும். அப்படியிருந்தும் நீங்கள் ஏன் இப்படிப் பெருமூச்சு விட்டபடி துயரத்தோடு இருக்கிறீர்கள்?'' என்று ஏதோ கேட்டான் கீவ்.

''இதைப் போன்ற வீட்டை நீயும் பெறலாமே. உன்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறதா?''

''ஐம்பது டாலர் பணம் இருக்கிறது! ஆனால் இதன் விலை அதிகமாக இருக்குமே!'' என்று ஏங்கினான் கீவ்.

''பரவாயில்லை, ஐம்பது டாலருக்கே கிடைக்கும்!''

''எது, இந்த வீடா?''

''சேச்சே, வீடு இல்லை! அந்தச் சீசா! உண்மையை உன்னிடம் சொல்கிறேனே: நான் இவ்வளவு பணக்காரன் ஆனதற்கு மூல காரணம் ஒரு சீசாதான்!''

கிழவன் இப்படிச் சொல்லிக் கொண்டே பையைத் திறந்து ஒரு சின்னச் சீசாவை வெளியே எடுத்தான். கண்ணாடிச் சீசா. அதன் உள்ளே ஏதோ ஒரு பொருள் நகர்வது போல் தெரிந்தது. அது நிழலோ நெருப்போ என்னும்படி இருந்தது.

''இந்தச் சீசாதான்; சொன்னால் நம்பமாட்டாய். இது ஓர் அபூர்வ வஸ்து. இதன் உள்ளே ஒரு பிசாசு வசிக்கிறது. இதோ தெரிகிறதே நிழல்; இது பிசாசின் நிழலேதான். இந்தச் சீசாவை எவன் வாங்கினாலும், பிசாசு அவன் வசமாகிவிடும். வேண்டிய பொருள்கள் அனைத்தும் - புகழ்,

பணம், வீடு, சொத்து எல்லாம் - நினைத்த மாத்திரமே இந்தப் பிசாசின் சக்தியால் அவனுக்கு வந்து விடும். நெப்போலியனிடம் இந்தச் சீசா இருந்ததனால் அவனுக்கு யுத்தத்தில் வெற்றி கிடைத்தது. தலைவன் குக் எத்தனையோ தீவுகளைக் கண்டு பிடித்தது இதன் மூலந்தான்..!''

''அப்படி இருக்க, இதை நீங்கள் ஏன் விற்கிறீர்கள்?''

''எனக்கோ வயசாகிவிட்டது; வேண்டிய பொருள்கள் அனைத்தையும் சம்பாதித்து விட்டேன். இந்தப் பிசாசு செய்யமுடியாத காரியம் ஒன்றே ஒன்றுதான்: மனிதனின் ஆயுசை இது விருத்தி செய்யாது! இன்னொன்று: இதை வைத்திருப்பவன் இதை வேறொருவனுக்கு விற்பதற்கு முன்னால் இறந்துவிட்டால், அவன் பாழ் நரகத்துக்குப் போகவேண்டியது தான்!''

''அப்படியானால் இதில் நிறைய ஆபத்து இருக்கிறது'' என்றான் கீவ்.

''அதற்காகப் பயப்படாதே! இதை நியாயமாக உபயோகிக்க வேண்டும்; அவ்வளவுதான்! பிறகு சாவதற்கு முன்பு யாருக்காவது விற்றுவிட வேண்டும்.''

''சரி, நல்லது! இவ்வளவு நேரமும் நீங்கள் பெருமூச்சு விடுவானேன்? பின்பு இதை இவ்வளவு குறைந்த விலைக்கு விற்பானேன்?''

''அதற்குத்தான் காரணம் சொன்னேனே..! எனக்கு வயசாகிவிட்டது; சாவதற்கு முன்பு இதை விற்றுவிட வேண்டும் என்ற கவலை. மற்றொரு விஷயம்: இந்தச் சீசாவை விற்கும் எவனும் தான் வாங்கின விலைக்குச் சற்றுக் குறைவான தொகைக்கே விற்க வேண்டும். இல்லையென்றால் விற்ற சீசா, சுவரில் அடித்த பந்துபோல், விற்றவன் கைக்கே திரும்பி வந்துவிடும்.''

''அப்படியா..!'' என்று சற்று ஆச்சரியத்தோடு பார்த்தான் கீவ்.

''வேண்டுமானால் நீயே இதை வாங்கிப் பரிசோதனை செய்து பார்க்கலாம்.''

கீவ் சற்றுத் தயங்கினான்; பின்பு கையிலிருந்த பணத்தைக் கொடுத்துச் சீசாவை வாங்கினான்; உடனே பிசாசைக் கூப்பிட்டான்.

''சீசாப் பிசாசே! என் ஐம்பது டாலரை மீண்டும் கொண்டு வந்து கொடு..!'' என்றான். சொல்லி முடிக்கவில்லை; அவன் பை நிறைய டாலர் குலுங்கியது.

''ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று சொல்லிக் கிழவனிடம் விடைபெற்று, கீவ் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான். சீசாவை மறைத்து வைத்துக்கொண்டு, தெருக்களைக் கடந்தான். துறைமுகத்துக்கு அருகில் வந்ததும், ஒரு கடைக்காரனைப் பார்த்தான். சோழி, கிளிஞ்சில்களையும் மற்றச் சாமான்களையும் விற்றுக் கொண்டிருந்தான் கடைக்காரன். கீவ் இன்னொரு பரீட்சையையும் செய்து பார்க்க எண்ணினான். நூறு டாலருக்குச் சீசாவைத் தருவதாகக் கடைக்காரனிடம் சொன்னான். மனித சிருஷ்டியில் இவ்வளவு அற்புதமான சீசாவை இது வரைக்கும் யாரும் செய்யவில்லை என்று சொல்லிப் பார்த்தான். கடைக்காரன் எதற்கும் மசியவில்லை. ''அறுபது டாலர்தான் கொடுப்பேன்'' என்றான். கீவ் அப்படியே சம்மதித்துச் சீசாவைக் கொடுத்துப் பணத்தை வாங்கிக் கொண்டான். கப்பலை நோக்கி நடந்தான். கப்பலில் ஏறியபின் கோட்டைத் திறந்ததும், அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது! கடையில் விற்ற சீசா அவன் ஜேபிக்கே திரும்ப வந்திருந்தது. அவனுக்குக் கவலையாய்ப் போய் விட்டது.

கப்பலில் கீவின் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் லொபகா.

கீவ் நடந்ததையெல்லாம் சொன்னான்.

''கவலைப்படாதே, சீசாவை நான் வாங்கிக்கொள்கிறேன்..! எனக்குக் கூட வியாபாரத்துக்கு ஒரு பெரிய கப்பல் வேண்டியிருக்கிறது.. உனக்கு ஏதாவது ஆசை இருக்குமே. அது நிறை

வேறியதும் என்னிடம் இதை விற்றுவிடு'' என்ருன் லொபகா.

''எனக்குக் கப்பல் வேண்டாம்! நல்ல வீடும் பூத்துக் குலுங்கும் தோட்டமும் கோஞ கடற்கரை அருகே - நான் பிறந்த இடத்தில் - வேண்டும்..! இது தான் என் ஆசை!''

''சரி; இதை ஹாவாய்த் தீவுக்கு நம்முடன் எடுத்துப் போவோம்; பின்பு பார்க்கலாம், இதன் உப யோகத்தை!''

கப்பல் சேரவேண்டிய இடத்தை அடைந்ததும் கீவின் நண்பன் ஒரு வன், அவன் வருகைக்காகக் காத் திருப்பதுபோல எதிரே வந்து நின்ருன்.

''உனக்குத் தெரியுமா, கீவ்? உன் சிற்றப்பா - அந்த வயசான மனி தர் - இறந்துவிட்டார்! அவருடைய பையன் சமுத்திரத்தில் மூழ்கிப் போஞன்!''

''என்னது..?'' என்ருன் கீவ். அவனுக்குச் சொல்ல முடியாத வருத்தம். கீவின் துக்கம் தணிந் ததும் லொபகா கேட்டான்: ''உன் சிற்றப்பாவ்க்கு ஹாவாயில் நில புலங்கள் உண்டா?''

''இங்கே இல்லை; அங்கே மலைப் பக்கத்தில் ஹுகஞவில் உண்டு.''

''அந்த நிலபுலங்களெல்லாம் இப்போது உன்னைச் சேரும்.''

இதைக் கேட்டதும் லொபகா, ''வருத்தப்படாதே, கீவ்! அந்த நிலம் ஒன்றில் உன் வீட்டைக் கட் டலாம்..! எல்லாம் சீசாப் பிசாசு செய்த காரியமாக இருக்கலாம்!'' என்ருன்.

''அப்படிச் செய்யலாமா! ஒரு வரைக் கொன்று மற்றவர் வாழ் வதா?''

''சரி, உன் சிற்றப்பாவுக்கு வேறு என்ன என்ன உண்டு?''

''காபித் தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள் எல்லாம் உண்டு. ரொக்கப் பணம் மட்டும் அவ்வளவாக இல்லை.''

''எதற்கும் வக்கீலைப் போய்ப் பார்க்கலாம்!''

இருவரும் வக்கீலிடம் போஞர் கள். விசாரித்ததில் கீவின் சிற்றப்பா தம் கடைசி நாட்களில் பெரிய பணக்காரரும் ஆகிவிட்டதாகத் தெரியவந்தது.

''உனக்கு வேறு என்ன குறைச் சல்! வீடு கட்டப் பணமும் கிடைத்துவிட்டது!'' என்ருன் லொபகா.

''வீடு கட்டவேண்டுமாஞல் ஒரு கட்டிட நிபுணர் இருக்கிருர். இந் தாருங்கள் அவர் விலாசம்!'' என்று ஒரு கார்டை நீட்டிஞர் வக்கீல்.

பிறகு இருவரும் கட்டிட நிபு ணரின் வீட்டை அடைந்தார்கள். வீட்டைப்பற்றிய பல படங்கள் அவரிடம் இருந்தன.

அதில் ஒரு படத்தைப் பார்த் ததும் கீவ் வாயடைத்துப் போஞன். அவன் கற்பனையில் மிதந்த பிரம்மாண்டமான வீட்டின் படமேதான் அது!

அதே மாதிரி வீடுதான் வேண் டும் என்ருன் கீவ். எவ்வளவு பணம் ஆகும் என்று கேட்ட போது, கட்டிட நிபுணர் சொன்ன தொகையும், கீவுக்குச் சிற்றப்பா விடமிருந்து கிடைத்த தொகையும் ஒன்ருக இருந்தன.

கீவ் தலையை ஆட்டிஞன். பத்தி ரத்தில் கையெழுத்துப் போட் டான். வீட்டைப் 'பிளான்'படி கட்டச் சொல்லிவிட்டு, லொபகா வோடு ஆஸ்திரேலியாவுக்குக் கிளம்பிஞன். இனிச் சீசாப் பிசா சிடம் ஒரு வரமும் கேட்பதில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

பிரயாணம் முடிந்து அவர்கள் திரும்பி வந்ததும், வீடு கட்டிப் பூர்த்தியாகிவிட்டது என்ருர் கட் டிட நிபுணர்.

மலைக்கு அருகில் கடலைப் பார்த் தாற்போல இருந்தது வீடு. பசுமை யாக இருந்தது, வீட்டைச் சுற் றித் தோட்டம். அறைகளிலெல் லாம் விதம் விதமான மரச்சாமான் கள் பளபளத்தன. சுவர்களில் கலர்ப் படங்கள் மின்னின. பால்கனி விசாலமாக இருந்தது.

''நீ சொன்னபடிதானே அமைந் திருக்கிறது கட்டிடம்?'' என்று கேட்டான் லொபகா.

''ஆகா! என்ன அருமையான வீடு, தோட்டம்!'' என்று மகிழ்ந்து போனான் கீவ்.

''இன்னும் ஒரே ஒரு பரீட்சை செய்து காண்பித்து விடு; பின்பு சீசாவை வாங்கிக்கொள்கிறேன்!'' என்றான் லொபகா.

''இன்னுமொரு பரீட்சையா? பிசாசை இனிமேல் ஒன்றுமே கேட்பதில்லை என்று தீர்மானித்து விட்டேனே!''

''ஒன்றும் கேட்கவேண்டியதில்லை; பிசாசையே சீசாவுக்குள் நான் பார்க்கவேண்டும்; அவ்வளவு தான்!''

''பார்த்தால் உனக்குப் பிடிக்காது. பிசாசு பார்வைக்குச் சற்று அவலட்சணமாக இருக்கும்!''

''பரவாயில்லை! ஒரு தரம் பார்த்துவிட்டால் போதும். இந்தா சீசாவுக்கு உரிய கிரயம்!''

சீசாவைப் பார்த்துக் கீவ் சொன்னான்: ''பிசாசே, உன்னை இவன் பார்க்கவேண்டும்!''

சொன்னவுடனே பிசாசு சீசாவுக்குள் தெரிந்தது. ஆனால் உடனே விருட்டென்று மறைந்து விட்டது. லொபகா பணத்தைக் கொடுத்துச் சீசாவை வாங்கிக் கொண்டான்.

''எனக்கு வேண்டியது நல்ல கப்பல் ஒன்றும் கொஞ்சம் டாலரும்! பின்பு இந்தப் பிசாசு வேண்டாம். இதைப் பார்த்தாலே குலை நடுங்குகிறது!'' என்றான் லொபகா.

அப்போது நன்றாக இருட்டி விட்டது. ஆயினும், லொபகா கிளம்பிவிட்டான்.

**கீ**வ் புது வீட்டில் சுகமாக நாட்களைக் கழித்து வந்தான். அவன் வீட்டைப் பல பேர் வந்து பார்த்து விட்டுப் போனார்கள். ரம்மியமான காட்சிகளும், பூத்துக் குலுங்கும் செடிகளும் கீவின் இதயத்தை நிரப்பின.

சில நாட்களுக்குப் பிறகு நண்பர்களைப் பார்ப்பதற்காகக் கீவ் கைலுவாவுக்குப் பயணமானான். நண்பர்கள் அவனுக்கு விருந்து வைத்துக் களித்தார்கள். சீக்கிரமே தன் குதிரையில் ஊருக்குக் கிளம்பி விட்டான் கீவ். வேகமாக வரும் போது, ஹொனேனு அருகில் கடலோரத்தில் ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள். நல்ல பருவப் பெண்.

அருகில் இவன் வருவதற்குள் அவள் ஸ்நானத்தை முடித்து, மேலாடையை அணிந்துகொண்டு விட்டாள்.

ஸ்நானம் செய்ததால் அவள் முகம் பளிங்குபோல் பிரகாசித்தது. அவள் கண்களில் அபார ஒளி வீசியது.

''நீ யார்?'' என்று கீவ் அவளைக் கேட்டான்.

''நான்தான் கோகுவா; கியானேவின் மகள்!''

''நீ மணமானவளா?''

''இல்லை.''

''நானும் மணமாகாதவன்தான். இந்த நிமிஷம் வரையில் திருமணத்தைப்பற்றி நான் நினைக்கவேயில்லை. உன்னை இங்கே பார்த்ததும் என் மனம் மாறிவிட்டது. உனக்கு என்னைப் பிடித்திருந்தால் சொல்; உடனே, உன் தந்தையைச் சந்தித்துப் பேசிக்கொள்கிறேன்.''

கோகுவா வாயைத் திறக்கவில்லை. ஆழ்ந்த கடலைப் புன்சிரிப்புடன் பார்த்தாள்.

''நீ ஒன்றும் பேசவில்லையானால் சம்மதம் என்று பொருள்.''

அவள் ஒன்றுமே பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள். சிறிது தூரம் சென்றதும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். கீவும் அவளைப் பின்பற்றி அவள் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும், பெண்ணின் தந்தை இவனை வரவேற்றார். புகழ்பெற்ற வீட்டுக்காரனை கீவை உபசரித்தார். நிச்சயதார்த்தமும் ஆகிவிட்டது.

வீட்டுக்குத் திரும்பிய கீவ் ஆனந்த மிகுதியால் பால்கனியிலிருந்து பாட ஆரம்பித்தான். என்றும் இல்லாமல் அன்று வெந்நீரில் குளித்துவிட்டு, பட்டு மெத்தையில் படுக்க அவன் விரும்பினான். வேலை செய்யும் சீனக்காரனைக் கூப்பிட்டான். வெந்நீரை நிரப்பச் சொன்னான்.

உடையைக் களைந்துவிட்டு, கீவ் குளிக்க ஆயத்தமானான். பாடிக்

கொண்டிருந்த அவன் திடீரென்று பாட்டை நிறுத்தினன். அவனை ஒரு கவலை கவ்வியது. இரவு முழுவதும் தூங்காமல் துயரத்தோடு பால் கனியைச் சுற்றி வந்தான். அவன் துயரத்துக்குக் காரணம் இது தான்: குளிக்கும்போது அவன் உட லில் ஓரிடத்தில் வெள்ளைத் திட் டாகத் தெரிந்தது. அது குஷ்ட மாகத்தான் இருக்கவேண்டும்!

இந்த வியாதி வந்துவிட்டால் எந்த மனிதனுக்கும் வேதனை தான். அதுவும் நேற்றுக் கோகுவா வின் அன்பைப் பெற்றுவிட்ட கீவ் இன்று இந்த நிலையில் என்ன நினைத்திருப்பான்?

ஊரை விட்டே போய்விடலாம்; ஆனல் கோகுவா! இந்த வியாதி யோடு அவன் அவளிடம் அன்பு செலுத்த முடியுமா?

திடீரென்று நள்ளிரவில் சீசா வின் ஞாபகம் வந்தது. ஆனல் மீண்டும் அதனிடம் வரம் கேட்க அவனுக்குத் துணிச்சல் இல்லை. பிசாசின் செந்நிறம் அவனைப் பய முறுத்தியது. ஆனல் கோகுவாவை அடைய, வியாதியைக் குணப்படுத் தித்தானே ஆகவேண்டும்? மறு நாளே நண்பன் லொபகாவிடம் போய்ச் சீசாவைப் பெற அவன் தீர்மானித்தான்.

குதிரைமீது ஏறிக்கொண்டு கப் பலை நோக்கி நல்ல பாதையில் கிளம்பிவிட்டான் கீவ்.

கப்பல் நேரங் கழித்து மெது வாகத்தான் வந்தது. கப்பல் கூட்டத்தினர் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இவன் முகத்தில் மாத்திரம் களையே இல்லை. மறு நாள் சாயங்காலந்தான் கப்பல் ஹானலூலூவை அடைந்தது.

விசாரித்ததில் லொபகா பெரிய கப்பலுக்கு முதலாளி ஆகிவிட்டான் என்று தெரிந்தது. கப்பலை எடுத் துக்கொண்டு அவன் வெகுதூரம் பிரயாணம் போயிருப்பதாகவும் கேள்விப்பட்டான். வக்கீல் தொழில் நடத்தும் தன் நண்பர் ஒருவரின் பெயரை விசாரித்துக் கொண்டு அவர் வீட்டை அடைந் தான். வக்கீல் அப்போதுதான் தம் புதிய வீட்டைக் கட்டியிருந்தார். தான் வந்த விஷயத்தை உடனடி யாகக் கீவ் அவரிடம் சொல்லி விட்டு, சீசாவைப்பற்றிய தகவல் ஏதாவது அவருக்குத் தெரியுமா என்று கேட்டான்.

வக்கீல் ஒரு மனிதரின் பெய ரைக் கூறி, அவரிடம் போய் முயன்று பார்க்கச் சொன்னர்.

வக்கீல் குறிப்பிட்ட மனிதரின் வீட்டை விசாரித்துக்கொண்டு போனன் கீவ். அந்தி மயங்கும் வேளை. அந்த வீடும் தோட்டமும் விளக்குத் தோரணங்கள் கட்டி அலங்காரமாயிருந்தன.

வீட்டுக்காரரிடம் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினன். அந்த மனிதர் மிகவும் வாலிபர். ஆனல் அவருடைய முகம் மாத்திரம் ஒரேயடியாக வெளுத்திருந்தது. புது மனிதர் கீவுக்கு ஒயின் கொடுத்து உபசரித்தார்.

''சீசாவின் விலை என்ன? எனக்கு அது வேண்டும். உங்களிடம் இருக் கிறதாமே!'' என்று கேட்டான் கீவ்.

அந்த இளைஞரின் முகம் இதைக் கேட்டதும் பயங்கரமாக மாறியது.

''ஏன், அதன் விலையில் ஏதா வது மாறுதல் உண்டா?'' என்று மேலும் கேட்டான் கீவ்.

''அதன் விலை மிகவும் குறைந்து போய் மலிவாகிவிட்டதே!''

''அப்படியா? நான் இப்பொழுது எவ்வளவு தரவேண்டும், உங்க ளுக்கு?''

''நான் இரண்டு செண்டுக்கு வாங்கினேன்!'' என்று உதட்டை நீட்டி, சுவாரஸ்யம் இல்லாமல் சொன்னர் இளைஞர்.

''என்ன, இரண்டு செண்டா! அப்படியானல் குறைந்த விலைக்கு அதாவது ஒரு செண்டுக்குத்தான் நீங்கள் அதை எனக்கு விற்க வேண்டும்..! நான் அதைத் திரும்ப விற்க முடியாதே..! ஒரு செண்டுக்கும் குறைவு ஏது..? அப் படியானல் இனி அதை வாங்கு கிறவன் பாழ் நரகத்தில் அமிழ வேண்டியதுதான்..'' என்ருன் கீவ். அவன் தலை சுற்றியது.

''தயை செய்து இதை வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்று காலில் விழுந்து கெஞ்சினர் அந்த இளை

பணம், வீடு, சொத்து எல்லாம் - நினைத்த மாத்திரமே இந்தப் பிசாசின் சக்தியால் அவனுக்கு வந்துவிடும். நெப்போலியனிடம் இந்தச் சீசா இருந்ததனல் அவனுக்கு யுத்தத்தில் வெற்றி கிடைத்தது. தலைவன் குக் எத்தனையோ தீவுகளைக் கண்டு பிடித்தது இதன் மூலந்தான்..!''

''அப்படி இருக்க, இதை நீங்கள் ஏன் விற்கிறீர்கள்?''

''எனக்கோ வயசாகிவிட்டது; வேண்டிய பொருள்கள் அனைத்தையும் சம்பாதித்து விட்டேன். இந்தப் பிசாசு செய்யமுடியாத காரியம் ஒன்றே ஒன்றுதான்: மனிதனின் ஆயுசை இது விருத்தி செய்யாது! இன்னென்று: இதை வைத்திருப்பவன் இதை வேறொருவனுக்கு விற்பதற்கு முன்னல் இறந்துவிட்டால், அவன் பாழ் நரகத்துக்குப் போகவேண்டியது தான்!''

''அப்படியானல் இதில் நிறைய ஆபத்து இருக்கிறது'' என்ருன் கீவ்.

''அதற்காகப் பயப்படாதே! இதை நியாயமாக உபயோகிக்க வேண்டும்; அவ்வளவுதான்! பிறகு சாவதற்கு முன்பு யாருக்காவது விற்றுவிட வேண்டும்.''

''சரி, நல்லது! இவ்வளவு நேரமும் நீங்கள் பெருமூச்சு விடுவானேன்? பின்பு இதை இவ்வளவு குறைந்த விலைக்கு விற்பானேன்?''

''அதற்குத்தான் காரணம் சொன்னேனே..! எனக்கு வயசாகிவிட்டது; சாவதற்கு முன்பு இதை விற்றுவிட வேண்டும் என்ற கவலை. மற்றொரு விஷயம்: இந்தச் சீசாவை விற்கும் எவனும் தான் வாங்கின விலைக்குச் சற்றுக் குறைவான தொகைக்கே விற்ருக வேண்டும். இல்லை யென்ருல் விற்ற சீசா, சுவரில் அடித்த பந்துபோல், விற்றவன் கைக்கே திரும்பி வந்துவிடும்.''

''அப்படியா..!'' என்று சற்று ஆச்சரியத்தோடு பார்த்தான் கீவ்.

''வேண்டுமானல் நீயே இதை வாங்கிப் பரிசோதனை செய்து பார்க்கலாம்.''

கீவ் சற்றுத் தயங்கினன்; பின்பு கையிலிருந்த பணத்தைக் கொடுத்துச் சீசாவை வாங்கினன்; உடனே பிசாசைக் கூப்பிட்டான்.

''சீசாப் பிசாசே! என் ஐம்பது டாலரை மீண்டும் கொண்டு வந்து கொடு..!'' என்ருன். சொல்லி முடிக்கவில்லை; அவன் பை நிறைய டாலர் குலுங்கியது.

''ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று சொல்லிக் கிழவனிடம் விடைபெற்று, கீவ் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினன். சீசாவை மறைத்து வைத்துக்கொண்டு, தெருக்களைக் கடந்தான். துறைமுகத்துக்கு அருகில் வந்ததும், ஒரு கடைக்காரனைப் பார்த்தான். சோழி, கிளிஞ்சில்களையும் மற்றச் சாமான்களையும் விற்றுக் கொண்டிருந்தான் கடைக்காரன். கீவ் இன்னொரு பரீட்சையையும் செய்து பார்க்க எண்ணினன். நூறு டாலருக்குச் சீசாவைத் தருவதாகக் கடைக்காரனிடம் சொன்னன். மனித சிருஷ்டியில் இவ்வளவு அற்புதமான சீசாவை இது வரைக்கும் யாரும் செய்யவில்லை என்று சொல்லிப் பார்த்தான். கடைக்காரன் எதற்கும் மசியவில்லை. ''அறுபது டாலர்தான் கொடுப்பேன்'' என்ருன். கீவ் அப்படியே சம்மதித்துச் சீசாவைக் கொடுத்துப் பணத்தை வாங்கிக் கொண்டான். கப்பலை நோக்கி நடந்தான். கப்பலில் ஏறியபின் கோட்டைத் திறந்ததும், அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது! கடையில் விற்ற சீசா அவன் ஜேபிக்கே திரும்ப வந்திருந்தது. அவனுக்குக் கவலையாய்ப் போய் விட்டது.

கப்பலில் கீவின் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் லொபகா.

கீவ் நடந்ததையெல்லாம் சொன்னன்.

''கவலைப்படாதே, சீசாவை நான் வாங்கிக்கொள்கிறேன்..! எனக்குக் கூட வியாபாரத்துக்கு ஒரு பெரிய கப்பல் வேண்டியிருக்கிறது..உனக்கு ஏதாவது ஆசை இருக்குமே. அது நிறை

வேறியதும் என்னிடம் இதை விற்றுவிடு'' என்றான் லொபகா.

''எனக்குக் கப்பல் வேண்டாம்! நல்ல வீடும் பூத்துக் குலுங்கும் தோட்டமும் கோனு கடற்கரை அருகே - நான் பிறந்த இடத்தில் - வேண்டும்..! இது தான் என் ஆசை!''

''சரி; இதை ஹாவாய்த் தீவுக்கு நம்முடன் எடுத்துப் போவோம்; பின்பு பார்க்கலாம், இதன் உபயோகத்தை!''

கப்பல் சேரவேண்டிய இடத்தை அடைந்ததும் கீவின் நண்பன் ஒருவன், அவன் வருகைக்காகக் காத்திருப்பதுபோல எதிரே வந்து நின்றான்.

''உனக்குத் தெரியுமா, கீவ்? உன் சிற்றப்பா - அந்த வயசான மனிதர் - இறந்துவிட்டார்! அவருடைய பையன் சமுத்திரத்தில் மூழ்கிப் போனான்!''

''என்னது..?'' என்றான் கீவ். அவனுக்குச் சொல்ல முடியாத வருத்தம். கீவின் துக்கம் தணிந்ததும் லொபகா கேட்டான்: ''உன் சிற்றப்பாவுக்கு ஹாவாயில் நிலபுலங்கள் உண்டா?''

''இங்கே இல்லை; அங்கே மலைப் பக்கத்தில் ஹுகனுவில் உண்டு.''

''அந்த நிலபுலங்களெல்லாம் இப்போது உன்னைச் சேரும்.''

இதைக் கேட்டதும் லொபகா, ''வருத்தப்படாதே, கீவ்! அந்த நிலம் ஒன்றில் உன் வீட்டைக் கட்டலாம்..! எல்லாம் சீசாப் பிசாசு செய்த காரியமாக இருக்கலாம்!'' என்றான்.

''அப்படிச் செய்யலாமா! ஒருவரைக் கொன்று மற்றவர் வாழ்வதா?''

''சரி, உன் சிற்றப்பாவுக்கு வேறு என்ன என்ன உண்டு?''

''காபித் தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள் எல்லாம் உண்டு. ரொக்கப் பணம் மட்டும் அவ்வளவாக இல்லை.''

''எதற்கும் வக்கீலைப் போய்ப் பார்க்கலாம்!''

இருவரும் வக்கீலிடம் போனார்கள். விசாரித்ததில் கீவின் சிற்றப்பா தம் கடைசி நாட்களில் பெரிய பணக்காரரும் ஆகிவிட்டதாகத் தெரியவந்தது.

''உனக்கு வேறு என்ன குறைச்சல்! வீடு கட்டப் பணமும் கிடைத்துவிட்டது!'' என்றான் லொபகா.

''வீடு கட்டவேண்டுமானால் ஒரு கட்டிட நிபுணர் இருக்கிறார். இந்தாருங்கள் அவர் விலாசம்!'' என்று ஒரு கார்டை நீட்டினார் வக்கீல்.

பிறகு இருவரும் கட்டிட நிபுணரின் வீட்டை அடைந்தார்கள். வீட்டைப்பற்றிய பல படங்கள் அவரிடம் இருந்தன.

அதில் ஒரு படத்தைப் பார்த்ததும் கீவ் வாயடைத்துப் போனான். அவன் கற்பனையில் மிதந்த பிரம்மாண்டமான வீட்டின் படமேதான் அது!

அதே மாதிரி வீடுதான் வேண்டும் என்றான் கீவ். எவ்வளவு பணம் ஆகும் என்று கேட்டபோது, கட்டிட நிபுணர் சொன்ன தொகையும், கீவுக்குச் சிற்றப்பாவிடமிருந்து கிடைத்த தொகையும் ஒன்றாக இருந்தன.

கீவ் தலையை ஆட்டினான். பத்திரத்தில் கையெழுத்துப் போட்டான். வீட்டைப் 'பிளான்'படி கட்டச் சொல்லிவிட்டு, லொபகாவோடு ஆஸ்திரேலியாவுக்குக் கிளம்பினான். இனிச் சீசாப் பிசாசிடம் ஒரு வரமும் கேட்பதில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

பிரயாணம் முடிந்து அவர்கள் திரும்பி வந்ததும், வீடு கட்டிப் பூர்த்தியாகிவிட்டது என்றார் கட்டிட நிபுணர்.

மலைக்கு அருகில் கடலைப் பார்த்தாற்போல இருந்தது வீடு. பசுமையாக இருந்தது, வீட்டைச் சுற்றித் தோட்டம். அறைகளிலெல்லாம் விதம் விதமான மரச்சாமான்கள் பளபளத்தன. சுவர்களில் கலர்ப் படங்கள் மின்னின. பால்கனி விசாலமாக இருந்தது.

''நீ சொன்னபடிதானே அமைந்திருக்கிறது கட்டிடம்?'' என்று கேட்டான் லொபகா.

''ஆகா! என்ன அருமையான வீடு, தோட்டம்!'' என்று மகிழ்ந்து போனான் கீவ்.

''இன்னும் ஒரே ஒரு பரீட்சை செய்து காண்பித்து விடு; பின்பு சீசாவை வாங்கிக்கொள்கிறேன்!'' என்றான் லொபகா.

''இன்னுமொரு பரீட்சையா? பிசாசை இனிமேல் ஒன்றுமே கேட்பதில்லை என்று தீர்மானித்து விட்டேனே!''

''ஒன்றும் கேட்கவேண்டியதில்லை; பிசாசையே சீசாவுக்குள் நான் பார்க்கவேண்டும்; அவ்வளவுதான்!''

''பார்த்தால் உனக்குப் பிடிக்காது. பிசாசு பார்வைக்குச் சற்று அவலட்சணமாக இருக்கும்!''

''பரவாயில்லை! ஒரு தரம் பார்த்துவிட்டால் போதும். இந்தா சீசாவுக்கு உரிய கிரயம்!''

சீசாவைப் பார்த்துக் கீவ் சொன்னான்: ''பிசாசே, உன்னை இவன் பார்க்கவேண்டும்!''

சொன்னவுடனே பிசாசு சீசாவுக்குள் தெரிந்தது. ஆனால் உடனே விருட்டென்று மறைந்து விட்டது. லொபகா பணத்தைக் கொடுத்துச் சீசாவை வாங்கிக் கொண்டான்.

''எனக்கு வேண்டியது நல்ல கப்பல் ஒன்றும் கொஞ்சம் டாலரும்! பின்பு இந்தப் பிசாசு வேண்டாம். இதைப் பார்த்தாலே குலை நடுங்குகிறது!'' என்றான் லொபகா.

அப்போது நன்றாக இருட்டிவிட்டது. ஆயினும், லொபகா கிளம்பிவிட்டான்.

கீவ் புது வீட்டில் சுகமாக நாட்களைக் கழித்து வந்தான். அவன் வீட்டைப் பல பேர் வந்து பார்த்து விட்டுப் போனார்கள். ரம்மியமான காட்சிகளும், பூத்துக் குலுங்கும் செடிகளும் கீவின் இதயத்தை நிரப்பின.

சில நாட்களுக்குப் பிறகு நண்பர்களைப் பார்ப்பதற்காகக் கீவ் கைலுவாவுக்குப் பயணமானான். நண்பர்கள் அவனுக்கு விருந்து வைத்துக் களித்தார்கள். சீக்கிரமே தன் குதிரையில் ஊருக்குக் கிளம்பி விட்டான் கீவ். வேகமாக வரும் போது, ஹொனேனு அருகில் கடலோரத்தில் ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள். நல்ல பருவப் பெண்.

அருகில் இவன் வருவதற்குள் அவள் ஸ்நானத்தை முடித்து, மேலாடையை அணிந்துகொண்டு விட்டாள்.

ஸ்நானம் செய்ததால் அவள் முகம் பளிங்குபோல் பிரகாசித்தது. அவள் கண்களில் அபார ஒளி வீசியது.

''நீ யார்?'' என்று கீவ் அவளைக் கேட்டான்.

''நான்தான் கோகுவா; கியானோவின் மகள்!''

''நீ மணமானவளா?''

''இல்லை.''

''நானும் மணமாகாதவன்தான். இந்த நிமிஷம் வரையில் திருமணத்தைப்பற்றி நான் நினைக்கவேயில்லை. உன்னை இங்கே பார்த்ததும் என் மனம் மாறிவிட்டது. உனக்கு என்னைப் பிடித்திருந்தால் சொல்; உடனே, உன் தந்தையைச் சந்தித்துப் பேசிக்கொள்கிறேன்.''

கோகுவா வாயைத் திறக்கவில்லை. ஆழ்ந்த கடலைப் புன்சிரிப்புடன் பார்த்தாள்.

''நீ ஒன்றும் பேசவில்லையானால் சம்மதம் என்று பொருள்.''

அவள் ஒன்றுமே பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள். சிறிது தூரம் சென்றதும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். கீவும் அவளைப் பின்பற்றி அவள் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும், பெண்ணின் தந்தை இவனை வரவேற்றார். புகழ்பெற்ற வீட்டுக்காரனான கீவை உபசரித்தார். நிச்சயதார்த்தமும் ஆகிவிட்டது.

வீட்டுக்குத் திரும்பிய கீவ் ஆனந்த மிகுதியால் பால்கனியிலிருந்து பாட ஆரம்பித்தான். என்றும் இல்லாமல் அன்று வெந்நீரில் குளித்துவிட்டு, பட்டு மெத்தையில் படுக்க அவன் விரும்பினான். வேலை செய்யும் சீனக்காரனைக் கூப்பிட்டான். வெந்நீரை நிரப்பச் சொன்னான்.

உடையைக் களைந்துவிட்டு, கீவ் குளிக்க ஆயத்தமானான். பாடிக்

கொண்டிருந்த அவன் திடீரென்று பாட்டை நிறுத்தினன். அவனை ஒரு கவலை கவ்வியது. இரவு முழுவதும் தூங்காமல் துயரத்தோடு பால் கனியைச் சுற்றி வந்தான். அவன் துயரத்துக்குக் காரணம் இது தான்: குளிக்கும்போது அவன் உட லில் ஓரிடத்தில் வெள்ளைத் திட் டாகத் தெரிந்தது. அது குஷ்ட மாகத்தான் இருக்கவேண்டும்!

இந்த வியாதி வந்துவிட்டால் எந்த மனிதனுக்கும் வேதனை தான். அதுவும் நேற்றுக் கோகுவா வின் அன்பைப் பெற்றுவிட்ட கீவ் இன்று இந்த நிலையில் என்ன நினைத்திருப்பான்?

ஊரை விட்டே போய்விடலாம்; ஆனல் கோகுவா! இந்த வியாதி யோடு அவன் அவளிடம் அன்பு செலுத்த முடியுமா?

திடீரென்று நள்ளிரவில் சீசா வின் ஞாபகம் வந்தது. ஆனல் மீண்டும் அதனிடம் வரம் கேட்க அவனுக்குத் துணிச்சல் இல்லை. பிசாசின் செந்நிறம் அவனைப் பய முறுத்தியது. ஆனல் கோகுவாவை அடைய, வியாதியைக் குணப்படுத் தித்தானே ஆகவேண்டும்? மறு நாளே நண்பன் லொபகாவிடம் போய்ச் சீசாவைப் பெற அவன் தீர்மானித்தான்.

குதிரைமீது ஏறிக்கொண்டு கப் பலை நோக்கி நல்ல பாதையில் கிளம்பிவிட்டான் கீவ்.

கப்பல் நேரங் கழித்து மெது வாகத்தான் வந்தது. கப்பல் கூட்டத்தினர் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இவன் முகத்தில் மாத்திரம் களையே இல்லை. மறு நாள் சாயங்காலந்தான் கப்பல் ஹானலூலூவை அடைந்தது.

விசாரித்ததில் லொபகா பெரிய கப்பலுக்கு முதலாளி ஆகிவிட்டான் என்று தெரிந்தது. கப்பலை எடுத் துக்கொண்டு அவன் வெகுதூரம் பிரயாணம் போயிருப்பதாகவும் கேள்விப்பட்டான். வக்கீல் தொழில் நடத்தும் தன் நண்பர் ஒருவரின் பெயரை விசாரித்துக் கொண்டு அவர் வீட்டை அடைந் தான். வக்கீல் அப்போதுதான் தம் புதிய வீட்டைக் கட்டியிருந்தார். தான் வந்த விஷயத்தை உடனடி யாகக் கீவ் அவரிடம் சொல்லி விட்டு, சீசாவைப்பற்றிய தகவல் ஏதாவது அவருக்குத் தெரியுமா என்று கேட்டான்.

வக்கீல் ஒரு மனிதரின் பெய ரைக் கூறி, அவரிடம் போய் முயன்று பார்க்கச் சொன்னர்.

வக்கீல் குறிப்பிட்ட மனிதரின் வீட்டை விசாரித்துக்கொண்டு போனன் கீவ். அந்தி மயங்கும் வேளை. அந்த வீடும் தோட்டமும் விளக்குத் தோரணங்கள் கட்டி அலங்காரமாயிருந்தன.

வீட்டுக்காரரிடம் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினன். அந்த மனிதர் மிகவும் வாலிபர். ஆனல் அவருடைய முகம் மாத்திரம் ஒரேயடியாக வெளுத்திருந்தது. புது மனிதர் கீவுக்கு ஒயின் கொடுத்து உபசரித்தார்.

''சீசாவின் விலை என்ன? எனக்கு அது வேண்டும். உங்களிடம் இருக் கிறதாமே!'' என்று கேட்டான் கீவ்.

அந்த இளைஞரின் முகம் இதைக் கேட்டதும் பயங்கரமாக மாறியது.

''ஏன், அதன் விலையில் ஏதா வது மாறுதல் உண்டா?'' என்று மேலும் கேட்டான் கீவ்.

''அதன் விலை மிகவும் குறைந்து போய் மலிவாகிவிட்டதே!''

''அப்படியா? நான் இப்பொழுது எவ்வளவு தரவேண்டும், உங்க ளுக்கு?''

''நான் இரண்டு செண்டுக்கு வாங்கினேன்!'' என்று உதட்டை நீட்டி, சுவாரஸ்யம் இல்லாமல் சொன்னர் இளைஞர்.

''என்ன, இரண்டு செண்டா! அப்படியானல் குறைந்த விலைக்கு அதாவது ஒரு செண்டுக்குத்தான் நீங்கள் அதை எனக்கு விற்க வேண்டும்..! நான் அதைத் திரும்ப விற்க முடியாதே..! ஒரு செண்டுக்கும் குறைவு ஏது..? அப் படியானல் இனி அதை வாங்கு கிறவன் பாழ் நரகத்தில் அமிழ வேண்டியதுதான்..'' என்றுன் கீவ். அவன் தலை சுற்றியது.

''தயை செய்து இதை வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்று காலில் விழுந்து கெஞ்சினர் அந்த இளை

ஞர். விற்ருல் போதும் என்று இருந்தது அவருக்கு.

கீவ் நாணயத்தை நீட்டி, சீசாவை வாங்கிக்கொண்டான்.

தன் நோய் தீர வேண்டுமென்று விரும்பினுன். அவனுடையில் இருந்த திட்டு மறைந்துவிட்டது. ஆனுல் மனத்திலே களிப்பில்லை. ஏனென்ருல், அவன் இனிச் சீசாவோடு சாகவேண்டியதுதான்! சிவப்பு ஜ்வாலைகளின் நடுவில் ஆழ்ந்து, நரகத்தில் அவதிப்படவேண்டியதுதான்! எப்படியோ மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு திரும்பினுன்.

ஊருக்கு வந்தவன் உடனே கோகுவாவை மணம் செய்துகொண்டு, தன் பெரிய வீட்டுக்கு அவளை அழைத்துவந்தான். கோகுவா மிகவும் சந்தோஷமாகவே இருந்தாள்; எப்போதும் துருதுருவென்று இருந்தாள்; பாட்டு அவள் உதட்டில் தவழ்ந்தபடி இருந்தது.

திடீரென்று காலம் மாறியது; கோகுவாவின் பாட்டு நின்றது. மகிழ்ச்சி பறிபோயிற்று. காரணம் இதுதான்: கீவ் எப்போதும் தனிமையையே நாடினுன்; பால் கனியில் தனியாக உட்கார்ந்து துக்கத்தில் ஆழ்ந்தான்.

''உங்கள் துயரத்துக்குக் காரணம் என்ன?'' என்று ஒரு நாள் அவனை நேரேயே கோகுவா விசாரித்தாள்.

கீவுக்கு அழுகை வந்துவிட்டது. சீசாவைப்பற்றிச் சொன்னுன்; தான் நரகத்துக்குப் போகவேண்டுமே என்பதைத் துயரத்தோடு விளக்கினுன்.

''உங்களோடு நானும் வருவேன்; ஏன் கவலைப்படுகிறீர்கள்?''

''என் பாவம் என்னைத்தானே வதைக்கும்?''

''நான் ரொம்பப் படித்தவள்; சாதாரணப் பெண் அல்ல. உங்களைத் தப்புவிக்க என்னுல் முடியும். பிரான்ஸ் நாட்டில் மிகச் சிறிய நாணயத்துக்குச் சென்டைம் என்று பெயர். ஒரு சென்டுக்கு ஐந்து சென்டைம்கள் தர வேண்டும். நாம் அங்கே போய்ச் சீசாவை விற்றுவிடலாம். தாஹிதிக்குப் போவோம்; அங்கே நாலு சென்டைம், மூன்று சென்டைம், இரண்டு சென்டைம், ஒரு சென்டைம் நாணயங்கள் இருக்கின்றன. ஆகவே, இன்னும் நாலு தரம் சீசா விற்பனையாகும்..!''

''அப்படியா; எனக்குத் தெரியாமல் போய்விட்டதே..!''

மறு நாளே பிரயாணத்துக்குத் தயார் செய்துவிட்டாள் கோகுவா. கீவ் நிம்மதியோடு ஒரு பெருமூச்சு விட்டான்.

தாஹிதி போய்ச் சேர்ந்ததும், தம்பதிகள் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டார்கள். கோகுவா சந்தோஷமாகவும் தைரியமாகவும் இருந்தாள். பணம் தேவைப்பட்ட போதெல்லாம், பிசாசைக் கூப்பிட்டு இருபது முதல் நூறு டாலர் வரையில் இஷ்டப்படி பெற்றுக்கொண்டாள். ஊரார் இவர்களை மிகுந்த மதிப்போடு நடத்தினுர்கள்.

தாஹிதி மொழி சிறிது பழகியதும், சீசாவை விலை பேச இவர்கள் ஆரம்பித்தார்கள். சுலபத்தில் அதை விற்க முடியவில்லை. சீசாவின் அருமை பெருமைகளைப்பற்றிக் கூறுவதோடு, அதன் குறைகளையும் சொல்ல வேண்டியிருந்தது. இதையெல்லாம் கேட்ட மக்கள், கீவையும் கோகுவாவையும் பயத்தோடு பார்த்தார்கள். குழந்தைகளுங் கூட அவர்களைப் பார்த்துப் பீதியோடு ஒதுங்கினுர்கள்.

வாடகை வீட்டில் கவலையோடு தம்பதிகள் பொழுதைக் கழித்தார்கள். ஒருவரோடு மற்றவர் முகங் கொடுத்துப் பேசவில்லை.

ஒரு நாள் இரவு.

கோகுவா திடீரென்று தூக்கத்தில் விழித்துக்கொண்டாள். கீவைப் படுக்கையில் காணவில்லை. எழுந்துபோய்ப் பார்த்தபோது, நிலவொளியில் புழக்கடையில் ஒரு மரத்தின்கீழே கீவ் தூங்கிக் கொண்டிருந்தான். அவனிடம் போய்ச் சமாதானம் செய்ய நினைத்தாள் கோகுவா. குரல் எழவில்லை. அவள் தொண்டையில் கல் சிக்கினுற்போல இருந்தது. அவனுடைய வருத்தத்தை எப்படிப் போக்கு

வது? சீசாவை விற்கவே முடியாது போய்விடுமோ?

தெருவிலே தனியே நடந்தாள். கருமேகங்களையே பார்த்துக் கவலையோடு சென்ற அவள், ஏதோ ஓர் இருமல் சப்தம் கேட்டுக் குனிந்தாள். தள்ளாத வயசுக் கிழவன் ஒருவன் ஒரு மரத்தடியில் அமர்ந்து இருமிக்கொண் டிருந்தான்.

அவனிடம் சென்று, ''எனக்காக ஒரு சிறு காரியம் செய்வாயா?'' என்று கேட்டாள்.

''என்ன?''

தங்கள் துயரக் கதையையெல்லாம் கிழவனிடம் சொன்னாள் கோகுவா.

''நான் அவருடைய மனைவி; நான் போய்ச் சீசாவை விலைக்குக் கேட்டால் தரமாட்டார்; நீ போய் நாலு செண்டைமுக்கு அதை வாங்கி ரகசியமாக என்னிடம் கொண்டுவந்து மூன்று செண்டைமுக்குத் தந்துவிடு..! அவருடைய பாவம் என்னைத் தொடரட்டும்..!'' என்று முடித்தாள்.

''உண்மையில் நீ அதைத் திரும்ப வாங்கிக்கொள்வாயா!''

''கட்டாயம் வாங்கிக்கொள்கிறேன்; உன்னை ஏமாற்றுவேனா? இந்தா நாலு செண்டைம் காசு..!'' என்று கிழவனிடம் கோகுவா காசைக் கொடுத்தாள்.

கோகுவா கிழவனின் வரவை எதிர்பார்த்து நின்றாள். வெகு நேரங் கழித்துத் திரும்பி வந்தான் கிழவன். அவன் கையில் சீசா இருந்தது.

''உன் கணவன் இனி நிம்மதியாகத் தூங்குவானடி, பெண்ணே.! இந்தா நீ விரும்பிய சீசா..!''

''சீசாவை வாங்கிக்கொள்ளுவதற்கு முன்னால் ஒன்று: உன் இருமல் போக வேண்டும் என்று பிசாசைக் கேட்டுக்கொள்..!''

''எனக்கு வயசாகி விட்டது; சாவு இன்றோ நாளையோ..? இந்தத் தொந்தரவெல்லாம் வேண்டாம்; சீசாவை முதலில் பிடி!''

கோகுவா அதை வாங்கிக் கொண்டாள்.

தன் மேலாடையில் சீசாவை மிகவும் ஜாக்கிரதையாக மறைத்துக் கொண்டாள். மறுநாள் காலை வெகு நேரமாகியும் கீவ் தூங்கிக் கொண்டிருந்தான். கோகுவாவை அசதி படுக்கையில் தள்ளியது; இரவெல்லாம் கண் விழித்த அலுப்பில் அவள் தன்னை மறந்து தூங்கினாள்.

படுக்கையை விட்டு எழுந்தான் கீவ். மனைவியை எழுப்பினான். சீசா விற்றுப் போய்விட்ட செய்தியைச் சந்தோஷத்தோடு சொன்னான். அவளை அன்பு கனிய நோக்கினான்.

கோகுவா அதிகம் பேசவில்லை. அந்தச் சீசாவை அவள் எப்படி இரண்டு செண்டைமுக்கு விற்பது? யாரிடம் விற்பது? கீவ் வேறு பக்கம் இருந்தபோது, சீசாவை எடுத்து அதன் விளிம்பையும் உட்புறத்தையும் அவள் ஆழ்ந்து பார்த்தாள். பிறகு உள்ளே மறைத்து வைத்துக் கொண்டாள். மாலையில் கணவன் வெளியே ஆனந்தமாகச் சுற்றக் கூப்பிட்டான். 'கோகுவா போகவில்லை. உடம்பு சரியில்லை என்று சொல்லிவிட்டாள். கீவுக்குக் கோபம் வந்துவிட்டது.

''இதுதானா உன் அன்பு? இப்போதுதான் நான் ஆபத்திலிருந்து மீண்டிருக்கிறேன்..நீ என்னை லட்சியம் செய்ய மாட்டேன் என்கிறாயே..!''

கீவ் மறுபடியும் வெளியே கிளம்பிவிட்டான்; நண்பர்களோடு அரட்டை யடித்தான்; குடித்தான். ஆனால் மனைவியின் துயரம் மாத்திரம் அவன் முகத்திலேயே இருந்தது.

நண்பர் கூட்டத்தில் ஓடக்காரன் ஒருவனைச் சந்தித்தான் கீவ்.

''உனக்கு என்னப்பா, கீவ்; நிறையப் பணம் வைத்திருக்கிறாய்..'' என்றான் ஓடக்காரன்.

''ஆமாம்; இன்னும் கொஞ்சம் பணம் வாங்கி வருகிறேன், மனைவியிடம்!''

''மனைவிமார்களை நம்பிப் பணம் தராதே..! அவர்களிடம் ஒன்றும் மிஞ்சாது!''

ஓடக்காரனையும் அழைத்துக் கொண்டு, கீவ் தன் வீட்டை அடைந்தான். அவனை ஒரு மூலையில் நிற்க வைத்துவிட்டுத் தான்

மட்டும் தனியாக உள்ளே நுழைந்தான். அப்போது இரவு நெருங்கி விட்டது. அவன் சந்தடி செய்யாமல் வந்தான்.

கோகுவா தரையில் உட்கார்ந்திருந்தாள்; அவள் எதிரே சீசா கிடந்தது!

கீவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சீசா எங்கிருந்து திரும்பவும் வந்தது?

சற்று நேரங் கழித்துச் சீசாவை மறைத்துவிட்டுக் கோகுவா தலை நிமிர்ந்தாள்.

''எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும், நண்பர்களோடு பொழுதுபோக்க..!''

பதிலுக்காகக் காத்திராமல் கையில் கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டான். சீசாவைப் பற்றிய நினைப்பு அவன் திகிலை வளர்த்தது.

'நான் நினைத்தது நடந்துவிட்டது; அந்தக் கிழவனிடம் அவள் இதை விலைக்கு வாங்கி விட்டாளே! என் ஆத்மாவைப் படுநரகிலிருந்து காப்பாற்றுவதற்காகவே, இப்படி அவள் செய்திருக்கிருள்' என்று எண்ணினன்.

வெளியே சென்டைம் நாணயங்களோடு வந்த கீவ், காத்திருந்த ஓடக்கார நண்பனைச் சந்தித்தான்.

''எனக்கு ஓர் உதவி செய்; இல்லையென்ருல் செலவழிக்கப் பணம் கிடையாது!''

''என்ன....?'' சீசாவைப் பற்றி அவனிடம் கீவ் சொன்னன். மேலும், ''இந்தா இரண்டு சென்டைம்! என் மனைவியிடம் இதைக் கொடுத்து அந்தச் சீசாப் பிசாசை வாங்கி விடு....! ஒரு சென்டை முக்கு மீண்டும் அதை வாங்கிக் கொள்கிறேன்....! ஏனென்ருல் ஒருவன் மற்றவனுக்கு விற்கும் போது வாங்கின விலைக்குக் குறைத்துத்தான் அதை விற்க வேண்டும்..!'' என்ருன்.

''விளையாடவில்லையே நீ..!''

''இது உண்மையப்பா உண்மை! நீ பிசாசை நினைத்தால் போதும். ஜேபியெல்லாம் பணமாகிவிடும். சக்தி வாய்ந்த பிசாசு அது.....!''

''நல்லது!'' என்று சொல்லி ஓடக்காரன் கோகுவாவைப் பார்க்கக் கிளம்பினன்.

கீவ் பார்த்த இடத்திலேயே அசையாமல் உட்கார்ந்து மன வேதனைப்பட்டுக்கொண்டிருந்த கோகுவாவை ஓடக்காரன் சந்தித்தான்.

சீசாவை விலை பேசி வாங்கிக் கொண்டு வரும் வரைக்கும் ஆவலோடு கீவ் காத்திருந்தான். வரும்போதே ஓடக்காரன் ஒரு புட்டி ஒயினைக் குடித்துக்கொண்டே வந்தான்.

''சபாஷ்! சீசாவை அவளிடம் விலைக்கு வாங்கிவிட்டாயே!''

''நகர்ந்து போ..!'' என்று ஓடக்காரன் சீறினன்.

''ஏன், என்ன?''

''இந்த அருமையான சீசாவை உனக்குத் திருப்ப விற்பேனு நான்? மாட்டேன்; மாட்டேன்.''

''விற்க மாட்டாயா..! இதைக் கையில் வைத்திருப்பவன் பாழ் நரகத்தில்....!''

''நான் செய்த பாவங்களுக்கு எனக்கு நரகந்தான்; அதில் என்ன சந்தேகம்! நான் சீசாவை விற்க மாட்டேன்..!'' என்ருன் ஓடக்காரன். மடமடவென்று குடித்தான்.

''விற்க மாட்டாயா, எனக்கு ஒரு சென்டைமுக்கு....உனக்கு ஆபத்தடா, இல்லையென்ருல்..!''

''அதிகம் பேசாதே! இந்தச் சீசா இனி என் உரிமை..நகர்ந்து போய்விடு..இல்லை யென்ருல் வீணுக அடிபடுவாய்..! ரைட்டோ, குட்நைட்..!''

கீவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'சனியன் விட்டது!' என்று மகிழ்ச்சியோடு வீட்டுக்கு ஓடினன். கோகுவா அவன் மகிழ்ச்சியில் கலந்துகொண்டாள். தம்பதிகளின் வாழ்க்கை இனிது தொடங்கியது.

புஸ்தகச் சுருக்கம்:



# அழகு கொஞ்சும் காஷ்மீர்

பகீரதன்

எப்படிப்பட்ட காஷ்மீர் ராஜ்யத்தைப் பாகிஸ்தான் அலங்கோலம் செய்துவிட்டது! 'கல்கி' ஆசிரியர் குழுவில் முக்கியஸ்தரான பகீரதன், தாம் 'வட இந்திய யாத்திரை' செய்த நாளில் காஷ்மீரைக் கண்டு வர்ணித்துள்ள இந்த விவரத்தைப் படிக்கும்போது, நம் மெய் சிலிர்க்கிறது. இந்த யாத்திரை நூல் முழுவதுமே ஏராளமாய்ச் சுவையான விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. காஷ்மீரின் எழிலைப்போலவே, எழிலான சரளமான தமிழ் நடையில் இதைப் பகீரதன் எழுதியிருக்கிறார். சிறந்த புது நூல்களை வெளியிட்டுவரும் கலைஞன் பதிப்பகத்தார் இதை மிக நேர்த்தியாய் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

காப்பிரைட்: வட இந்திய யாத்திரை (தமிழ்ப் புஸ்தகம்).
வெளியிட்டோர்: கலைஞன் பதிப்பகம், தியாகராயநகர்,
சென்னை-17. விலை ரூபாய் ஐந்து.

# அழகு கொஞ்சும் காஷ்மீர்

★

முன்பெல்லாம் இந்தியாவிலிருந்து காஷ்மீருக்கு ராவல்பிண்டி வழியாகச் செல்ல வேண்டும். ராவல்பிண்டியிலிருந்து உடி, பராமுலா வழியாக ஸ்ரீநகர் வரைக்கும் போவதற்கு நல்ல வழி இருக்கிறது. 1947-ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சர்க்கார், 'இந்த வழியில் யாரும் செல்லக்கூடாது' என்று மூடிவிட்டார்கள். மக்களின் போக்குவரத்துத் தடைப்பட்டது. ஆனல், அது கொள்ளைக் கூட்டத்தாருக்குச் சௌகரியமாகப் போய்விட்டது. இந்த வழியை அவர்கள் உபயோகப்படுத்திக்கொண்டு காஷ்மீர்மீது படையெடுக்க ஆரம்பித்தார்கள். 1949-இல் சண்டை நின்ற பிறகுகூட அந்தப் பாதையைப் பொது ஜனங்கள் உபயோகிக்கவில்லை.

இந்த வழியைத் தவிர, போவதற்கு வேறு வழி கிடையாதா? இருக்கிறது. ஜம்முவிலிருந்து பனிகால் சுரங்கப் பாதை வழியாகச் செல்லலாம். இந்தப் பாதையைக் குளிர்காலத்தில் நான்கு மாதங்களுக்கு உபயோகப்படுத்த முடியாது. அங்கே பனி மூடிக் கிடக்கும். இந்த நாலு மாதங்களும் உலகத்திலிருந்து தனியே எந்த விதமான தொடர்பும் இல்லாமல் காஷ்மீர் பிரிந்து கிடக்க வேண்டியதுதான்.

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னல் சியால்கோட் நகரிலிருந்து ஜம்மு வரையில் ரெயில் போக்குவரத்து இருந்தது. சியால்கோட் பாகிஸ்தானைச் சேர்ந்ததும், அந்த ரெயில் பாதையும் மக்களுக்கு உபயோகமில்லாமல் போய்விட்டது.

இந்த மாதிரி சூழ்நிலையில் காஷ்மீருக்குள் போவதற்கு எந்த விதமான சாலை வசதியும் இல்லாத வேளையில் திடீரென்று யுத்தம் ஆரம்பமாயிற்று. நம் சைன்யம் காஷ்மீருக்குள் போவதற்குப் பாதையே இல்லாமல் திண்டாடிப் போயிற்று. முதலில் நம் சைன்யம் எல்லாம் தில்லியிலிருந்து விமான மூலமாகத்தான் ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தது. இப்படி எவ்வளவு சைன்யத்தை விமான மூலம் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியும்? ஆகவே, பத்தான் கோட்டிலிருந்து ஜம்முவுக்குப் புதிதாகவே சாலை அமைத்தார்கள். சுமார் மூன்றுகோடி ரூபாய் செலவில் பத்தான்கோட்டிலிருந்து ஜம்முவரையில் எழுபது மைல் நீளம் காட்டிலும் மலையிலுமாக மிகப் பயங்கரமான இடத்தில் அருமையான சாலை அமைத்தார்கள்.

பத்தான்கோட் இன்றைத் தினம் பஞ்சாபின் எல்லையில் முக்கிய நகரமாகத் திகழ்வதற்குக் காரணம், காஷ்மீருக்குள் செல்லும் சாலை அங்கிருந்து ஆரம்பமாவதுதான்.

புகழ்பெற்ற அந்தப் பத்தான் ரெயிலடி போய்ச் சேர்ந்ததும், ராணுவப் பொதுநலத் தொடர்பு அதிகாரி மேஜர் கபூரும் இன்னும் சில முக்கியமான ராணுவ அதிகாரிகளும் எங்களை வரவேற்றார்கள். தங்கள் கையிலிருந்த சீட்டில் இருக்கும் பெயர் முதலிய குறிப்புகளுடன் எங்களைத் தனித்தனியே விசாரித்து ஊர்ஜிதம் செய்துகொண்டபின், எங்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் இனிமேல் ஜம்முவில் இருக்கும் நாலு தினங்களும் ராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பில்தான் இருக்கவேண்டும்!

காலைச் சிற்றுண்டி முடிந்ததும் ராணுவ அதிகாரி ஒருவர், ஒவ்வொரு பத்திரிகையாளரிடமும் தனித்தனியாக வந்தார்.

"உங்கள் பெயர் என்ன?" என்ருர்.

எங்கள் பெயர்களைச் சொன்னேம். ஓர் எழுத்துத் தவருமல் எழுதிக்கொண்டார்.

பிறகு வயசு, ஊர், விலாசம் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கேட்டு எழுதிக் கொண்டார்.

கடைசியில் அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடச் சொன்ஞர். கையெழுத்துப் போடுவதற்கு முன்பு, வேறு என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்த்துப் போடச் சொன்ஞர். படித்துப் பார்த்தோம்.

"இங்கிருந்து ஜம்முவில் ஜீப்வண்டியில் பிரயாணம் செய்யும்போது ஏதாவது அபாயம் ஏற்பட்டால் அதற்கு, இந்திய சேனை பொறுப்பு ஏற்காது" என்று எழுதியிருந்தது.

'ஜீப்பில் - அதிலும் ராணுவ வீரர்கள் ஓட்டும் ஜீப் வண்டியில் - பிரயாணம் செய்வதற்கு என்ன பயம்?' என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோம். ஆனல் ஜம்முவில் இமய மலைமீது ஜீப் வண்டியில் பிரயாணம் செய்யும்போதுதான், அந்த 'மரணவாக்குமூலம் வெறும் சம்பிரதாயம் அல்ல என்று உணர்ந்து கொள்ள முடிந்தது. சாதாரணமாக மனிதர்களும் கோவேறு கழுதைகளும் பிரயாணம் செய்யும் ஒற்றையடிப் பாதையில் இரண்டு பக்கங்களிலும் இரண்டாயிரம் அடி மூவாயிரம் அடி ஆழமுள்ள பயங்கர இடங்களில் பிரயாணம் செய்ததை இப்பொழுது நினைத்தால்கூடக் குடல் தொண்டையில் வந்து அடைத்துக்கொள்கிறது; மயிர்க் கால்கள் குத்திட்டு நிற்கின்றன.

இது போலவே பூஞ்ச் நகரிலிருந்து ஸ்ரீநகருக்கு விமானத்தில் பிரயாணம் செய்யும்போதும் ஒரு தரம் 'மரண வாக்குமூலம்' எழுதி வாங்கிக்கொண்டார்கள்.



மலைப்பாதையில்
கரணம் தப்பினல் மரணம்

இந்தச் சம்பிரதாயமான சடங்குகள் எல்லாம் முடிந்ததும், ஜம்முவுக்கு ஜீப் வண்டியில் பிரயாணமானேம். ஏழு ராணுவ ஜீப் வண்டிகள் ரெயில் வண்டித் தொடர்போல் எங்களைச் சுமந்து கொண்டு பத்தான்கோட் - ஜம்மு சாலையில் ஓடிக்கொண் டிருந்தன. வழவழப்பான கறுப்புச் சலவைக் கல் பாவியது போல் தார் போட்ட சாலை. ஓர் அப்பழுக்கும் அதில் காண முடியவில்லை. இரு புறமும் ஒரே பசுமைக் காட்சி; அங்கங்கே ராணுவ முகாம் கூடாரங் களும் தெரிந்தன.

சாலையின் ஓரமாக ரவி நதியிலிருந்து பிரிந்துவரும் கால்வாய் கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தது. அதில் கிராமத்து மக்கள் குளித்துக்கொண்டும் துணி துவைத்துக்கொண்டும் இருந்ததைப் பார்த்தபோது, நாமும் அவர்களோடு சேர்ந்து ஆற்றில் குதித்து நீந்தி விளையாடலாமா என்று தோன்றியது. காரணம், காலைவேளையாக இருந்தாலும் அனல் காற்று வீசியது.

சாலைக்கும் கால்வாய்க்கும் இடையில் பத்தான்கோட்டிலிருந்து ஜம்முவுக்குப் புதிதாக ரெயில் பாதை போட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த வேலை மிகுந்த சுறுசுறுப்புடன் நடந்து கொண்டிருந்தது.

அதோ பத்தான்கோட்டில் பஸ் போக்குவரத்து நிலையம் ஒன்று தெரிகிறது. ஜம்மு-காஷ்மீர் டிரான்ஸ்போர்ட் பஸ்கள், காஷ்மீர் போவதற்காகப் பிரயாணிகளை ஏற்றிக் காத்துக்கொண்டிருக்கின்றன. வழியில் அங்கங்கே நம்முடைய ஜீப் கார்களை நிறுத்துகிறார்கள்; பரிசோதனை செய்கிறார்கள். இதற்குச் 'செக் போஸ்ட்' என்று பெயர். இந்தப் பரிசோதனை நடைபெறும்போதுதான், 'இன்னும் காஷ்மீர்ப் பிரச்னை தீரவில்லை' என்பது நினைவுக்கு வருகிறது.

இந்திய சர்க்கார் இங்கேயும் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். மதாபுர் என்ற கிராமத்தில் ரவி நதியைத் தேக்கி ஓர் அணை கட்டி, பல கால்வாய்கள் வெட்டி விட்டிருக்கிறார்கள். அடாடா! அந்த அணையின் அழகை எப்படி வர்ணிப்பது? எங்கோ சொப்பன உலகில் ஒரு பிருந்தாவனத்தின் மத்தியில் உள்ள பிரம்மாண்டமான பொற்றாமரைக் குளம்போல் இருந்தது அது.

இந்த அணையையும் இன்னும் ஒரு பரிசோதனைச் சாவடியையும் தாண்டிய பிறகு, ஜம்மு-காஷ்மீர் எல்லைக்குள் பிரவேசித்துவிட்டோம்.

இதோ ஜகன்புர். இங்கே ஜம்மு-காஷ்மீர்ச் சம்ஸ்தானச் சுங்கச் சாவடி இருக்கிறது. அதன் வாசலில் எங்கள் கார்களை நிறுத்தி விட்டார்கள். பெட்டி படுக்கைகளை எல்லாம் பரிசோதித்தார்கள். இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்பு சுங்கவரியே உண்டு. இப்பொழுது சுங்க வரி கிடையாது. ஆனால் பரிசோதனை மட்டும் நடைபெற்று வருகிறது. சாதாரணமாகக் காஷ்மீர் செல்லுபவர்கள் ஜில்லா கலெக்டரிடமிருந்தும் ராணுவ அதிகாரியிடமிருந்தும் ஓர் உத்தரவுச் சீட்டு வாங்கி வரவேண்டும். அந்தச் சீட்டையும் இங்கே பரிசோதனை செய்கிறார்கள்.

பத்தான்கோட் சாலையில் செல்லும்போது, சில விநோதங்களைக் காணலாம். இமயமலையின் மீதே சாலைகள் போட்டிருப்பதால், வழியில் பல காட்டாறுகள் குறுக்கிடுகின்றன. அந்தக் காட்டாறுகளில் தண்ணீரே இல்லை. அவற்றுக்குப் பாலமும் இல்லை. ஆனாலும் இரு துறைகளிலும் இரும்புக் கம்பிகள் நட்டிருக்கிறார்கள். அவற்றின் மேலே சிவப்பு வர்ணமும் அடியில் வெள்ளை வர்ணமும் பூசியிருக்கிறார்கள். 'வெள்ளை வர்ணம் பூசியிருக்கும் வரையில் தண்ணீர் சென்றால் அபாயமில்லை; கார்கள் போகலாம்' என்று எழுதி வைத்திருக்கிறது.

காட்டாறுகளைப் பற்றி, எங்கள் ஜீப்பை ஓட்டி வந்த ராணுவ அதிகாரி ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்.

ஒரு சமயம் அவரும் இன்னும் சிலரும் இந்தப் பாதையில் வண்டி ஓட்டிக்கொண்டு வந்தார்களாம். திடீரென்று காட்டாற்றில் தண்ணீர் வந்துவிட்டது. முதலில் வெள்ளைக் கோடு தெரியும் வரையில் தண்ணீர் இருந்ததால், ஜீப் வண்டிகளை ஓட்டிக்கொண்டு சென்றார்கள். ஆற்றில் பாதி தூரம் செல்வதற்குள்ளாகவே தண்ணீர் கிடுகிடு என்று வந்து, முன்னே சென்ற இரண்டு ஜீப்பையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. அவற்றில் இருந்த ராணுவ வீரர்கள், ராணுவ அதிகாரி ஆகியவர்களுடைய உடலை ஐந்து மைல்களுக்கு அப்பால் ஒரு வாரத்துக்குப்

பிறகு கண்டு பிடித்தார்கள். ஜீப் வண்டி எங்கே சென்றது என்றே தெரியவில்லை. அப்படியானால் காட்டாற்றில் எந்த உருவத்தில் வெள்ளம் எப்படி வரும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

இதைச் சொல்லும்போது, அந்த ராணுவ அதிகாரி உணர்ச்சி வசப்பட்டு விட்டார். அவருடைய கண்கள் கலங்கிவிட்டன.

இதற்குப் பிறகு ஒவ்வொரு காட்டாறு குறுக்கிடும்போதும், எங்களுக்கெல்லாம் நடுக்கந்தான். என்ன செய்வது? வேறு வழியில்லையே!

சில மைல் தூரம் பிரயாணம் செய்தவுடன், அந்தப் பக்கத்தின் தோற்றமே மாறி விடுகிறது! கண்ணுக்கெட்டிய தூரத்துக்குப் பார்க்கும் இடமெங்கும் ஒரே மலையும் காடுந்தான்! மனித நடமாட்டமே இல்லை. சிலர் தென்பட்டாலும் அவர்களும் குதிரையின்மீது வந்துகொண் டிருந்தார்கள்.

திடீர் என்று சில கிராமங்களும் கண்ணில் படுகின்றன. ஆனால் அந்தக் கிராமங்களைப் பார்த்தால், திகைப்புத்தான் உண்டாகிறது! மக்கள் எப்படி அந்த மலைக் காட்டில் தைரியமாக இருக்கிறார்களோ! வீடுகள் விசித்திரமாக இருக்கின்றன. காட்டுப் புல்லை எடுத்துத் தட்டிபோல் முடைந்து அதையே சுவர்போல நாலு புறமும் வைத்திருக்கிறார்கள். அதைக் கொண்டே கூரையும் வேய்ந்திருக்கிறார்கள்.

கிராமத்து மக்கள் தரித்திரத்தின் சின்னங்களாகத் தோன்றினாலும் திடகாத்திரத்துடனும் செக்கச் செவேல் என்று பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கிறார்கள்.

மூன்று மணி நேரம் ஜீப் ஓடியது. பிரசித்தி பெற்ற தவி நதியின் பாலத்தைத் தாண்டினோம். ''இதோ ஜம்மு வந்து விட்டது'' என்றார் ராணுவ அதிகாரி.

எங்கள் பிரயாண ஆசை பூர்த்தியாகிவிட்டதுபோல மகிழ்ந்தோம். யாத்திரை ஆரம்பமானதிலிருந்து, 'ஜம்மு-காஷ்மீருக்கு எப்பொழுது போகப் போகிறோம்' என்ற ஆவல் துடிதுடித்துக்கொண் டிருந்தது. ''பாரத நாட்டில் பிறந்த ஒருவன் சாவதற்கு முன்னால் ஒரு தரம் காஷ்மீரத்தைப் பார்த்துவிட்டுத்தான் சாக வேண்டும்'' என்று ஒரு பிரயாணப் புத்தகத்தில் எழுதியிருந்ததைப் படித்திருந்தேன். அதனால் என் ஆசை நிறைவேறி விட்டதை நினைத்து மகிழ்ந்தேன்.

வெயில் தாங்க முடியவில்லை. 120 - டிகிரி உஷ்ணம். குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கலாம் என்று ஒருவர் குழாயைத் திருப்பினார். அடுத்த விநாடி, ''ஐயோ! போய் விட்டேன்!'' என்று பயங்கரமாக அலறினார். ''என் வாழ்நாளில் இவ்வளவு சூடான தண்ணீரை நான் தொட்டுப் பார்த்ததில்லை'' என்று குதித்தார். தொட்ட இடம் எல்லாம் சுட்டது. சூடு என்றால் உண்மையில் நெருப்பு மேல் இருப்பது போல்தான் இருந்தது! ஜம்முவில் நாங்கள் அநுபவித்த வெயிலின் கொடுமையை விட இந்தியாவில் வேறு எங்குமே அநுபவிக்கவில்லை.

அறையில் உட்கார முடியாமல் சற்று வெளியில் வந்து நின்றோம். தூரத்தில் ஜம்முவின் தங்கக் கோயில்கள் வெயிலில் பளபள என்று மின்னிக்கொண் டிருந்தன. திரும்பிய இடம் எல்லாம் தங்கக் கோயில்கள்! அந்தக் கோயில் கோபுரங்களைப் பார்த்தவுடன் ஏதோ கங்கைக் கரையோரமாக உள்ள ஒரு புண்ணிய ஸ்தலத்துக்கு வந்துவிட்டது போன்ற மனப் பிரமைதான் ஏற்பட்டது!

பிறகு ராணுவ முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். மேஜர் ஜெனரல் எம். வி. பால் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

''ஜம்மு-காஷ்மீர்ப் பகுதிகளில், நம் சேனைகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?'' என்று விநயமாகக் கேட்டார்.

''தெரிந்து கொள்ளத்தானே வந்திருக்கிறோம்!'' என்றோம்.

''வாருங்கள்; காண்பிக்கிறேன்'' என்று கூறிவிட்டு, அருகிலிருந்த

ஓர் அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றார்!

இமய மலைமீது பல இடங்களில் இருக்கும் நம் சேனைகளைப் பார்ப்பதற்குச் சின்னஞ்சிறு அறைக்குள் அழைத்துச் செல்கிறாரே என்று வியந்துகொண் டிருக்கும்போதே, ''இதுதான் ஜம்மு - காஷ்மீர்ப் பகுதி'' என்றார்.

அங்கே ஜம்மு-காஷ்மீர்ச் சமஸ்தானத்தை மட்டும் அப்படியே களிமண் பொம்மை செய்து வைத்திருக்கிறார்கள். ஆகாயத்திலிருந்து பார்த்தால் ஜம்மு - காஷ்மீரின் பூகோள அமைப்பு எப்படி இருக்குமோ அதே போல் இருந்தது; மலை, ஆறு, கிராமம், நகரம் எல்லாம் களிமண் பொம்மையிலே தெளிவாக அமைந்திருந்தன.

இந்தப் பொம்மையை எதிரிலேயே வைத்துக்கொண்டு, நம் ராணுவம் எங்கெல்லாம் இருக்கிறது என்பதை அதிகாரி விளக்கினார்.

காஷ்மீர் இரண்டு எல்லைகளை உடையது. ஒன்று பழைய எல்லை; மற்றது புதிய எல்லை. 1949 - இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது அல்லவா? அப்பொழுது நிர்ணயித்த சமாதான எல்லைக் கோடுதான் புதிய எல்லை. இதற்கு 'ஸீஸ் ஃபயர் லைன்' என்று ஆங்கிலத்தில் பெயர்.

பத்தான்கோட்டிலிருந்து உதம்புர் வரையில் எல்லைக் கோட்டில் வித்தியாசம் கிடையாது. இரண்டு எல்லைக் கோடுகளும் ஒன்றுதான். உதம்புருக்கு இப்பால், பாகிஸ்தான் படைகள் ஜம்மு-காஷ்மீர்ப் பகுதிக்குள் நுழைய முடியவில்லை. உதம்புருக்கு அந்தப் பக்கத்தில் பாகிஸ்தான் சோல்ஜர்கள் சில பிரதேசங்களை ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

ஜம்மு - காஷ்மீர் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கும் ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கும் இன்று பாகிஸ்தான் வசம் இருக்கின்றன. ஜம்முவிலிருந்து திபேத் வரைக்கும் சுமார் எண்ணூறு மைல் நீளம் சமாதான ஒப்பந்த எல்லைக் கோடு நீண்டு கிடக்கிறது. இந்த எண்ணூறு மைல் நீளத்திலும் இன்றைத் தினம் நம் இந்திய ராணுவம் இரவு பகல் இருபத்து நாலு மணி நேரமும் நின்று காவல் காத்து வருகிறது.

இந்த எண்ணூறு மைல்களும் மலைப் பிரதேசந்தான்-இமய மலைப் பிரதேசம். கற்பனை செய்து காண முடியாத மலையின் உயரங்களிலும் படுபாதாளத்திலும், நம் சைன்யங்கள் வெயிலிலும் பனியிலும் நின்று காவல் காத்து வருகின்றன.

சமாதான ஒப்பந்தக் கோட்டிலிருந்து ஐந்நூறு அடி உள் பக்கம் தள்ளி, நம் சைன்யம் இருக்கிறது. அதே போல அந்தப் பகுதியில் பாகிஸ்தான் சைன்யம் இருக்கிறது. அப்படி நின்று காவல் காக்கும் சேனைக்குப் 'பிக்கட்' என்று பெயர். ஒரு பிக்கட்டுக்கும் இன்னொரு பிக்கட்டுக்கும் உள்ள தூரம் சூழ்நிலைக்கு ஏற்றபடி ஐந்து மைல், பத்து மைல் என்று தள்ளித் தள்ளி இருக்கிறது. எதிரிகள் சமாதான ஒப்பந்த எல்லைக் கோட்டைத் தாண்டி இந்திய எல்லைக்குள் நுழையாமலும் கலகங்களைக் கிளப்பாமலும் இந்தப் பிக்கட்டுகள் பார்த்துக்கொண் டிருக்கின்றன.

பிக்கட்டுகளுக்குப் பின்னால் ராணுவ முகாம்கள் இருக்கின்றன. உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு வேண்டிய போக்குவரத்துச் சாதனங்களும் இருக்கின்றன; பலவிதமான யுத்த தளவாடச் சாமான்கள் இருக்கின்றன. கம்பியில்லாத் தந்தி மூலம் செய்திகளை அனுப்பும் நிலையங்கள் இருக்கின்றன. வீரர்களின் உணவுவிடுதி, விளையாடும் இடம், பொழுதுபோக்கும் இடம் என்று பல பகுதிகள் அங்கங்கே பரவலாக இருக்கின்றன.

''இந்த இடங்களில் எங்கே வேணுமானாலும் போகலாம். யாரை வேணுமானாலும் எதை வேணுமானாலும் கேட்கலாம்'' என்று எங்களிடம் கூறினார் மேஜர் ஜெனரல்.

ராணுவ முகாமிலேயே ரஸமான பகுதி, விமானம் சுடும் பீரங்கிகள் இருக்கும் பகுதிதான். இந்தப் பகுதியில் வேலை செய்வதற்கு

அபாரமான மூளையும் சமயோசித மான புத்தியும் வேண்டும். பூமியில் நாலு அடி, ஐந்து அடி பள்ளம் தோண்டி அந்தப் பள்ளத்துக்கு மேலே இவர்கள் கூடாரமே போட்டிருக்கிறார்கள்.

''ஏன் இப்படிக் குழி தோண்டிக் கொண்டு அதன்மேல் கூடாரம் அடித்திருக்கிறீர்கள்?''

''இது கோடைக் காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் கதகதப்பாகவும் இருக்கும். அதற்காகவே இப்படிப் பள்ளம் தோண்டி அதன்மீது கூடாரம் அமைத்திருக்கிறோம்.''

''கூடாரத்தைச் சுற்றிலும் ஓர் அடி அகலமும் மூன்றடி ஆழமும் அகழ் போல் வெட்டியிருக்கிறீர்களே, அது எதற்காக?''

''அதுவா? பாம்புப் பள்ளம்.''

''அப்படி யென்றால்!''

''இந்தப் பக்கத்தில் கொடிய விஷப்பாம்பு இருக்கிறது. அது கடிக்கவே வேண்டாம்; மூச்சு விட்டாலே போதும்! ஆள் அரோகராதான்! பாம்புகள் இந்தப் பக்கங்களில் உலாவிக்கொண்டே இருக்கின்றன. அவை தரையோடு தரையாக ஊர்ந்துதான் செல்லும். அப்படி ஊர்ந்து வரும் போது இந்தப் பள்ளத்திலும் ஊர்ந்தவண்ணந்தான் இறங்கி ஏறும். பள்ளத்தின் அடிப்பாகத்தில் அதன் உடல் நன்றாக வளைவதால், முதுகெலும்பு முறிந்துவிடுகிறது. மேலே நகர முடியாமல் பள்ளத்திலே கிடந்து பாம்பு சாகவேண்டியதுதான்.''

''ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது, நீங்கள் பாம்பைக் கொல்லும் விதம்!''

''பாம்புகள்தானே எங்கள் முதல் எதிரிகள்!''

அடுத்த கூடாரங்கள் எல்லாம் மிகவும் சுத்தமாக இருக்கின்றன. இந்தக் கூடாரங்களையும் இங்குள்ளவர்களையும் பார்க்கும்போது, 'இமய மலையில் இருக்கிறோம்' என்பதே மறந்து விடுகிறது! காரணம், இங்கிருப்பவர்களில் பெரும்பாலோர் தென் இந்தியர்கள்; அதிலும் தமிழர்களும் மலையாளிகளுந்தான் அதிகம்!

வட இந்திய யாத்திரையில் முதல் சில வாரங்களுக்கு மேலாக இந்தியும் ஆங்கிலமுந்தான் காதில் விழுந்துகொண்டிருந்தன. இந்த ராணுவ முகாம்களில் கலகல என்ற தமிழ் ஓசையைக் கேட்ட போது, காதில் தேன் வந்து பாய்ந்ததுபோல் இருந்தது.

அடுத்தாற்போல் உதம்புருக்குச் சென்றோம். ஜீப் கார்கள் தவி நதியின் கரையோரமாக அமைந்துள்ள சாலையின் வழியாக உதம் புரை நோக்கி ஓட ஆரம்பித்தன. ஜம்முவின் சர்க்கார் காரியாலயமும் ராணுவ கூடாரங்களும் தென்பட்டன. அப்பால் செக்கச் செவேல் என்று ஓர் அரண்மனை தெரிந்தது. அந்தக் கட்டிடங்களைப் பற்றியெல்லாம் ராணுவ அதிகாரியிடம் விசாரிக்க ஆரம்பித்தோம்.

''இது என்ன அரண்மனை?''

''இதுதான் பழைய காஷ்மீர் மன்னர் ஹரி சிங்கின் குளிர் கால அரண்மனை.''

''வெள்ளையாக இருப்பது?''

''இப்பொழுது ராஜப்பிரமுகராக இருக்கும் சதர் - இ - ரியாசத் கரன் சிங்கின் அரண்மனை.''

இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, ஜீப் வண்டி பயங்கரமான தவி நதியிலேயே இறங்கிவிட்டது. ஒரு கணம் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. இவ்வளவு ஆபத்தான சாலையை இந்தியாவில் வேறு எங்குமே காண முடியாது. பாம்புபோல வளைந்து வளைந்து, திரும்பித் திரும்பி, ஏறி இறங்கி, எந்த மாதிரி எல்லாம் சாலைகள் இருக்கக் கூடாதோ அப்படி எல்லாம் இந்தச் சாலை இருக்கிறது. இதில் போகும்போது யாருக்கும் இரைந்து பேசக்கூடத் துணிவில்லை.

சாலை மலைமேலே ஏறிக் கொண்டே போகிறது; மலை உச்சிக்கே சென்றுவிடுகிறது. அங்கிருந்து பார்த்தால், இரண்டு பக்கங்களிலும் கண்ணுக் கெட்டிய தூரம் காடுகள். சட்டென்று சாலை பாதாளத்தை நோக்கி

இறங்குகிறது. அப்படி இறங்கும் போது பயம் பற்றிக்கொள்கிறது. கண்களை இறுக மூடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. கண்ணை மூடிக் கொண்டாலும் அடிவயிற்றி லிருக்கும் குடல்கள் தொண்டையில் வந்து அடைத்துக்கொள்வதை எப்படித் தடுத்து நிறுத்துவது?

இந்தப் பயங்கரமான சாலையைக் கடந்து சற்று நல்ல வழியில் ஜீப் வண்டி ஓடியது. மீண்டும் முன் போலவே சாலை வளைந்து வளைந்து செல்கிறது. வளைவான ஓர் இடத்தில் ஜீப் வண்டி திரும்பியது. அதை ஓட்டிக்கொண்டு வந்த ராணுவ அதிகாரி, சட்டென்று ஒரு 'ஸல்யூட்' அடித்துவிட்டு மேலே வண்டியை ஓட்டினர்.

''ஏன் இப்படி 'ஸல்யூட்' அடித்தீர்கள்?''

''பிரசித்தி பெற்ற நம் மேஜர் ஜெனரல் ஆத்ம சிங் இங்கேதான் காலமானர்.''

''எப்படி?''

''அது ஒரு சோகக் கதை, ஸார்!''

மேஜர் ஜெனரல் ஆத்ம சிங் காஷ்மீர்ப் போரில் அபாரமான சேவை செய்தவர். பூஞ்ச் நகரை மீட்பதற்கு நடந்த நீண்ட சமாதான சம்பாஷணையில் அதி அற்புதமான சாதனைகளைச் செய்தவர். அவருடைய சாமர்த்தியத்தினுல்தான் பூஞ்ச் நகர் பாகிஸ்தானிகளிடமிருந்து மீண்டது. ஏராளமான மக்களைக் காப்பாற்ற முடிந்தது. எத்தனையோ கொலைகளும் பயங்கரக் கொள்ளைகளும் விலகின.

பூஞ்ச் நகரில் சின்னஞ்சிறு குழந்தைகளிடம் சென்று 'ஆத்ம சிங்' என்று சொன்னுல் போதும். அவர்கள் மிகுந்த நன்றியுடன், 'எங்களைக் காப்பாற்றியவர்' என்று சொல்லி மகிழ்கிருர்கள்.

ஆத்ம சிங் ஒரு நாள் உதம்புரிலிருந்து ஜம்முவுக்கு ஜீப் வண்டியில் வந்துகொண்டிருந்தார். பல இடத்தில் சாலை மகாவிஷ்ணுவின் வெள்ளை நாமம்போல வளைந்து வளைந்து செல்கிறது. எதிர்ப் பக்கத்தில் யார் வந்தாலும் தெரிந்துகொள்ள முடியாது. அப்படிப்பட்ட பயங்கரமான வளைவு. அந்த வளைவில் திரும்பும்போது, தமக்கு எதிரே ஒரு ராணுவ வண்டி வருவதை ஆத்ம சிங் பார்த்தார். அதற்கு வழி விடுவதற்காக ஜீப் வண்டியைத் திருப்பினர். அடுத்த கணம் அவர் எதிர்பாராதது - நடக்கக் கூடாதது - நடந்துவிட்டது. அவருடைய ஜீப் வண்டி படுபாதாளமான ஆற்றில் - மலைப் பாறையான காட்டாற்றில் - தலைகுப்புற விழுந்து சுக்கு நூருக நொறுங்கிவிட்டது. மேஜர் ஜெனரல் ஆத்ம சிங் அந்த இடத்திலேயே உயிர் நீத்தார்.

இந்தச் சோகக் கதையைச் சொல்வதற்குள், அதிகாரி பல முறை உணர்ச்சி வசப்பட்டார். சில சமயம் பேச முடியாமல் மௌனமாக இருந்தார். கடைசியில் எப்படியோ ஒருவாறு சொல்லி முடித்தார்.

ஆத்ம சிங் இறந்துபோன மாதம், தேதி, அவருடைய சேவை எல்லாவற்றையும் மலையில் விவரமாக எழுதி வைத்திருக்கிருர்கள்.

இந்த மாதிரியான பயங்கரப் பாதையைக் கடந்து, நாற்பத்து மூன்று மைல் சென்றதும், ''உதம்புர் வந்தாகிவிட்டது'' என்ருர் அதிகாரி.

சமுத்திர மட்டத்திலிருந்து மூவாயிரம் அடி உயரமுள்ள உதம்புரில் அவ்வளவு உஷ்ணம் தெரியவில்லை. குளிர்ந்த காற்று வீசியது. லேசாகக் குளிரக்கூடக் குளிர்ந்தது. அது உடலுக்கும் மனசுக்கும் இதமாக இருந்தது.

காஷ்மீர் மன்னர் வேட்டையாடும்போது தங்கும் அரண்மனை ஒன்று உதம்புரில் இருக்கிறது. ஒரு மலையின் சிகரத்தில் எதிரிகள் யாரும் வரமுடியாத பந்தோபஸ்தான இடத்தில் அது இருக்கிறது! இந்த இடத்தில் இவ்வளவு பிரம்மாண்டமான அரண்மனையை எப்படித்தான் கட்டினுர்களோ!

தவி நதியின் கரையில் ஜம்மு நகரம் அமைந்திருக்கிறது. தவி என்ருல் புனித தீர்த்தம் என்று

பொருள். ஆறுகளுக்கு அந்த ஆறுகள் செல்லும் ஊரின் பெயரைச் சேர்த்துத் தவி என்று சொல்கிறார்கள். அதாவது ஜம்மு தவி, ரஜௌரி தவி, பூஞ்ச் தவி என்று பெயர் சொல்கிறார்கள்.

ஜம்மு நகரில் நாம் பார்க்கும் மக்கள் எல்லாரும் பஞ்சாபிகள் போல் இருக்கிறார்கள். அவர்கள் ஆடைகள் அணிந்திருக்கும் விதம் தான் பஞ்சாபிகள்போல் இருக்கிறதே ஒழிய, அவர்கள் உண்மையில் பஞ்சாபிகள் அல்ல.

ஜம்முவுக்கு டுக்கர் என்பது பழைய பெயர். டுக்கர் நகரில் வசிக்கும் மக்களை டோக்கர் என்று குறித்தார்கள். இப்பொழுதும் டோக்கர்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய உடல் கட்டு மஸ்தாக இல்லை. ஆனாலும் பார்ப்பதற்கு வசீகரமா யிருக்கிறார்கள். டோக்கர்கள் பேசும் மொழி டோக்கரி; பாரசீகமும் பஞ்சாபியும் கலந்தது. ஜம்முவை டோக்கர் மன்னனான குலாப் சிங் அரசாண்டு வந்தான்.

கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு எழுபத்தைந்து லட்சம் ரூபாய் கொடுத்து உலகிலேயே மிக அழகு வாய்ந்த சொர்க்க பூமியான காஷ்மீரை விலைக்கு வாங்கி, அதையும் தன் ஆட்சிக்குக் கீழே கொண்டு வந்தான் மன்னன் குலாப் சிங். வெள்ளைக்காரர்கள் மகா கெட்டிக்காரர்கள். இந்தியாவின் ஒரு பாகத்தை இந்திய மன்னனிடமே விற்றுப் பணம் பெற்றால், அவர்களைக் கெட்டிக்காரர்கள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது? அன்று முதல் சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேல் டோக்கர்களின் ஆட்சியில் தான் ஜம்மு-காஷ்மீர் இருந்து வந்தது. காஷ்மீர் மன்னரின் சேனையில் டோக்கர் வீரர்கள்தான் அதிகம்.

காஷ்மீர் மன்னர் பரம்பரையில் கடைசி மன்னரான ஹரி சிங் தமது பதவியை விட்டு விலகிய பிறகு, ஜம்மு-காஷ்மீரின் நிலைமை மாறியது. ஜம்மு-காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு இணங்க ஜம்மு-காஷ்மீர்ச் சம்ஸ்தானம் இந்தியாவுடன் இணைந்தது.

இன்று ஜம்முவில் இந்துக்கள் தான் அதிகம் இருக்கிறார்கள்.

இந்த விவரங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டே, ஜம்முவின் புகழ் பெற்ற ரகுநாதர் கோயிலுக்குச் சென்றோம்.

மின்னும் அதன் தங்கக் கோபுரங்கள், 'வாருங்கள்! வாருங்கள்!' என்று வாழ்த்துக் கூறி நம்மை அழைக்கின்றன.

கோயிலுக்குள் பிரவேசித்தோம். சாதிபேதம் இல்லாமல் எல்லாரும் கர்ப்பக்கிருகம் வரையில் செல்லலாம். அங்கே கம்பீரமாக நிற்கும் ராமனையும் சீதா பிராட்டியையும் லட்சுமணனையையும் கைகூப்பி வணங்கி மக்கள் வலம் வருகிறார்கள். ஸ்ரீராமன் கரிய திருமேனியனாகவே காட்சி தருகிறான்! விக்கிரகம் எல்லாம் திபேத்தியரின் சாயலாகக் காட்சி தருகின்றன! உள்ளிருந்து சாம்பிராணி வாசனை கம்மென்று வருகிறது. சிலர் கைநிறையப் புஷ்பங்களை எடுத்துப்



ஜஹாங்கீர் கடைசி யாத்திரை

போகிறார்கள். சுவாமியின் பாதங்களில் பூவை வைத்துவிட்டுப் பக்தியுடன் அவர்கள் நிற்பதே அழகிய காட்சியாக இருக்கிறது.

கர்ப்பக்கிருகப் பிராகாரங்களைச் சுற்றி வந்தோம். பிராகாரச் சுவர்களில் எல்லாம் புராண இதிகாசக் காட்சிகளை - இறைவனின் திருவிளையாடல்களை - வெள்ளைச் சலவைக் கல்லில் செதுக்கி வைத்திருக்கிறார்கள்.

கோவிலுக்கு இடது புறத்தில் ஒரு ஜோதி லிங்கம் இருக்கிறது. இந்த லிங்கமும் சலவைக் கல்லில் செய்ததுதான். ஆனாலும் ஏதோ புது மாதிரியான கண்ணாடிக் கல்லில் செய்ததுபோல் காட்சி தருகிறது. ஜோதி லிங்கத்துக்குக் கர்ப்பூர தீபாராதனை செய்கிறார்கள். அப்போது லிங்கத்தில் தீபாராதனையின் ஜோதி பிரதிபலிக்கிறது; ஜோதி லிங்கத்தின் உள்ளே வானவில்லின் வர்ண ஜாலங்கள் அத்தனையும் ஒளி வீசித் திகழ்கின்றன.

ஜோதி லிங்கத்தைத் தாண்டி அப்பால் சென்றோம். அங்கே பிராகாரத்தில் பத்து அவதாரங்களையும் தனித்தனியே வெள்ளைச் சலவைக் கல்லிலேயே செய்து வைத்திருக்கிறார்கள். தவிர, விநாயகர், சரஸ்வதி தேவி முதலிய விக்கிரகங்களும் இருக்கின்றன.

மறு நாள் ஜம்மு நகருக்கு ஒரு வணக்கம் செலுத்திவிட்டுக் கிளம்பினோம். ஜினாப் நதியிலிருந்து பிரிந்துவரும் கிளை நதியான ரன்பீர் ஆற்றங்கரையோரமாக எங்களைச் சுமந்துகொண்டு ராணுவ ஜீப் வண்டிகள் ஓடின. ரன்பீர் நதிக்கரையில் ஆண்களும் பெண்களும் குளித்துக்கொண்டும் துணி துவைத்துக்கொண்டும் இருந்தார்கள். அங்குமிங்கும் சில குதிரைகள் மேய்ந்துகொண்டிருந்தன.

ரன்பீர் ஆற்றங் கரையைத் தாண்டிக் காடும் மலையும் நிறைந்த கரடு முரடான சாலையில் ஜீப் வண்டிகள் ஓடத்தொடங்கின. வானத்துக்கும் பூமிக்குமாகத் தூக்கித் தூக்கிப் போடுவதுபோல் ஜீப் வண்டிகள் அந்தக் கச்சா ரோடில் சீர்திருத்தாத சாலையில் குதி போட்டுக்கொண்டு ஓடின. இப்படி இருபத்தேழு மைல் சென்ற பிறகு, ஜினாப் நதியின் புதிய பாலத்தைக் கடந்தோம். சிறிது தூரத்துக்கு அப்பால் பழைய பாலம் இடிந்து கிடந்தது; யுத்தம் செய்த கொடுமையை இன்னும் நினைவூட்டிக்கொண்டு பரிதாபமாக அது காட்சி யளித்தது.

ஜினாப் நதியைத் தாண்டியதும் மீண்டும் ஒரு காட்டாற்றின் கரையோடு ஜீப் வண்டிகள் ஓடின. காட்டாற்றில் தண்ணீர் இல்லாததால் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. இந்த உலகையே விழுங்கி விடுவதற்கு இமய மலை வாயைப் பிளந்து கொண் டிருப்பதுபோல் இருந்தது. இந்தப் பயங்கரக் காட்டாற்றைத் தாண்டியதும் இடது புறத்தில் அழகு நிறைந்த அக்னூர் கோட்டை கம்பீரமாகக் காட்சி அளித்தது. அந்தக் கோட்டைக்கு அருகில் அமைதி நிறைந்த சின்னஞ் சிறு நகரம் ஒன்று தென்பட்டது. ''இதுதான் அக்னூர் நகரம்'' என்றார் சிப்பாய்.

இப்பொழுது அமைதியாகக் காணும் இந்த நகரம் 1947-ஆம் ஆண்டில் கொடிய யுத்தத்தில், கொள்ளைக் கூட்டத்தாரின் கொடுமையிலும் பாகிஸ்தான் வீரர்களின் படுபாதகத்திலும் அகப்பட்டுத் தவியாய்த் தவித்தது.

அந்தச் சமயத்தில் அக்னூர் கோட்டைக்குள் சில மக்கள் அடைக்கலம் புகுந்தார்கள். இன்னும் சிலர் உயிர் பிழைத்தால் போதும் என்று தங்கள் உடைமைகளை எல்லாம் விட்டுவிட்டு இந்தியாவுக்கு ஓடிவிட்டார்கள்.

நம் சேனைகள் வந்துதான் இந்த மக்களைக் காப்பாற்றினார்கள். இரண்டு இந்தியப் பட்டாளங்கள் இங்கே நிலையாக இருந்துகொண்டு மக்களுக்கு அபயம் அளித்து வந்தன. அப்பொழுது ஏற்பட்ட சண்டையில் இந்தக் காட்டாற்றில் நம்முடைய டாங்கி ஒன்று இறங்கிச் சென்றது. பாதி ஆறு கடந்து செல்லும்போது திடீரென்று

வெள்ளம் வந்து டாங்கியையே அடித்துக்கொண்டு போய்விட்டது. அந்த டாங்கி எங்கே சென்றது என்று இன்னும் தெரியவில்லை. நாற்பது ஐம்பது டன் நிறையுள்ள டாங்கியையே அடித்துப் போகும் இப்படிப்பட்ட வெள்ளத்தில் நம் வீரர்கள் எத்தனையோ பேர் தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்து இங்குள்ள மக்களைக் காப்பாற்றினார்கள். எதிரிகளை அடித்து விரட்டினார்கள்.

அக்னோர் ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் முஸ்லிம்கள்தான். அப்படி இருந்தும், அநாகரிகமான கொள்ளைக் கூட்டத்தினரும் அக்னோரில் இருந்த ரௌடிகளும் பாகிஸ்தான் பட்டாளக்காரர்களும் சேர்ந்து கொண்டு, இந்து முஸ்லிம் என்று பேதம் பாராட்டாமல், மிக இழிவான காரியங்களை எல்லாம் செய்து குழந்தைகளையும் பெண்களையும் கொடுமைப் படுத்தினார்கள். இந்திய ராணுவந்தான் அந்தக் கொடுமைகளை அடக்கி, அராஜகத்தை ஒழித்து, அக்னோரில் அமைதியை நிலை நாட்டியது.

அக்னோரைத் தாண்டி மேலே பிரயாணத்தைத் தொடங்கினோம். இமய மலையின்மீதுதான் பிரயாணம். ஆனாலும் வழியில் எங்கே பார்த்தாலும் பாலைவனத்துக்கு ஈடான சமவெளிகள் தென்படுகின்றன. அவற்றில் பசும் புல் என்பது கிடையவே கிடையாது. குட்டை குட்டையான முட்செடிகள் மண்டிக் கிடக்கின்றன. எங்கே பார்த்தாலும் ஆகாயத்திலிருந்து வாரி இறைத்ததுபோல் கருங்கல் உருளைக் கற்கள் பரவலாகக் கிடக்கின்றன. பூமியில்தான் இருக்கிறோமா என்று சந்தேகம் ஏற்படும் படி அங்கங்கே சின்னதும் பெரியதுமாகப் பல குன்றுகள் தெரிகின்றன. அவைகளுக்கு மத்தியில் தான் நன்றாக வளர்ந்து கூர்மையாக இருக்கும் இலைகளை உடைய, பரவலான கிளைகளே இல்லாத, உயரம் உயரமான சீடு மரக் காடுகள் தெரிகின்றன.

நூறடி இருநூறடி உயரம் வானோங்கி வளர்ந்துள்ள சீடு மரத்தில் ஒரு மாதிரியான எண்ணெய் இருக்கிறது. பச்சை மரத்திலே நெருப்புப் பட்டால் கூடப் பெட்ரோலில் தீப் பிடிப்பதுபோல் காடே தீப்பற்றி எரிகிறது. இந்தக் கோரக் காட்சியை, அன்று மாலையே பார்க்கும் படி யாகிவிட்டது. சீடு மரக்காடு பற்றி எரிகிறது. தீயின் ஜ்வாலைகள் வானை நோக்கித் தாவிக் கிளம்புகின்றன. சடசட என்ற சப்தத்துடன் மரங்கள் எரிந்து கரிந்து சரிந்து விழுகின்றன. எங்கே பார்த்தாலும் கரும்புகை சூழ்ந்து கொண்டது. பச்சை மரம் பற்றி எரியும் அதிசயத்தை நேரிலேயே பார்த்து வியந்து போனோம்.

சீடு மரங்களில் கூடு கட்டி வாழ்ந்த பறவைகள் மாலை வேளையில் தங்கள் கூடுகளைத் தேடித் திரும்பி வந்தன. ஆனால் மரங்களில் தாங்கள் கட்டியிருந்த கூடுகள் காட்டுத் தீயில் விழுந்து எரிவதையும், கூடுகளில் இருந்த குஞ்சுகள் இறக்கை அடித்துப் பறக்க முடியாமல் துடிதுடித்துச் சாவதையும் பார்த்த தாய்ப் பறவைகள் பட்ட வேதனையை இப்பொழுது நினைத்தால்கூடக் கண்ணீர் வருகிறது.

தீயிடம் நெருங்கவும் முடியாமல் குஞ்சுகளைக் காப்பாற்றவும் முடியாமல் அவைகள் படும் வேதனையைப் பார்த்தபோது, ''இப்படித்தான் இங்குள்ள மக்கள் யுத்த சமயத்தில் செய்வது இன்னதென்று புரியாமல் துடிதுடித்து மடிந்தார்கள்'' என்றார் சிப்பாய்.

*1947* - இலிருந்து '49 வரையில் ஜம்மு-காஷ்மீரில் நடந்த பயங்கர நிகழ்ச்சிகளை இங்கே நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த நாட்களில் தினப் பத்திரிகைகளில் அடிபட்ட பல ஊர்களின் பெயர்களை அதற்குள் மறக்க முடியுமா? நௌஷாரா, ஜம்கட், ரஜௌரி, பூஞ்ச் முதலிய நகரங்களின் பெயர்கள் மறந்துவிடக் கூடிய பெயர்களா?

பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்ட பாரத பூமியை மீட்பதற்காக நம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தார்

கள். இந்துக்களும் சீக்கியர்களும் முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் ஒன்றுபட்டு நின்று, பாரதத்தின் சுதந்தரத்தைக் காப்பாற்றினார்கள்.

இந்த யுத்தத்திலே ஈடுபட்ட எண்ணற்ற சிப்பாய்களில் ஒருவர் அமர்நாத். அவர் எங்கள் ஜீப் வண்டியைக் கரடு முரடான பாதையில் ஓட்டிக்கொண்டு வரும் போதே, தம்முடைய வீரம் நிறைந்த சோகக் கதையைச் சொன்னார்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது அமர்நாத் மேற்குப் பாகிஸ்தானில் ஒரு ராணுவ முகாமில் இருந்தார். 1947-ஆம் ஆண்டில் அவர் நியாயமாக இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டியவர். அதற்குள் ஜம்மு-காஷ்மீர்மீது பாகிஸ்தான் போர் தொடுக்கவே, அமர்நாத் தொண்டாற்றி வந்த ராணுவ முகாமில் இருந்த வீரர்கள் கைதானார்கள். அவர்களுடன் அமர்நாத்தும் பிடிபட்டார். பாகிஸ்தான் ராணுவச் சிறையில் பல கஷ்டங்களை அநுபவித்தார். பல நாள் பட்டினியும் கிடந்தார். ஒரு நாள் பாகிஸ்தானுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுச் சிறையிலிருந்து தப்பி வந்துவிட்டார். ஜம்முவில் இருந்த இந்திய ராணுவ முகாமில் வந்து சேர்ந்தார்.

அமர்நாத்துடன் அவர் குடும்பத்தைச் சேர்ந்த பத்துப் பேரையும் பாகிஸ்தான் வீரர்கள் கைது செய்திருந்தார்களாம். அங்கிருந்து தப்பி வரும்போது அந்தப் பத்துப் பேருடனுமே அமர்நாத் வந்தார். ஆனால் வழியிலேயே ஐந்து பேர் செத்துவிட்டார்கள். தப்பியவர்களில் அமர்நாத் மட்டும் மீண்டும் ராணுவத்தில் சேர்ந்து தொண்டாற்ற முற்பட்டார். மற்றவர்கள் பம்பாய்க்குச் சென்றுவிட்டார்கள்.

ஜீப் வண்டியை இந்த அமர்நாத் ஓட்டும்போது, நௌஷாரா என்ன, யமலோகத்துக்குக் கூடப் பயப்படாமல் போய்த் திரும்பி வந்துவிடலாம். கரணம் தப்பினால் மரணம் என்று சொல்லக்கூடிய இந்த அபாயமான சாலைகளினூடே தைரியமாக நௌஷாராவுக்குச் சென்றோம். ஜீப் வண்டி சென்றுகொண்டிருக்கும் போதே, பயங்கரமான சப்தம் கேட்டது. மரங்கள் பேயாட்டம் ஆடின. அடுத்த கணம் புயல் வீசத் தொடங்கியது. காற்றுடன் தூசியும் கலந்து வீசத் தொடங்கிவிட்டது. எதிரில் இருக்கும் பொருள் ஒன்றுமே தெரியவில்லை. நெருப்பு ஜ்வாலை சூழ்ந்துகொண்டது போல் இருந்தது தூசிப் புயல். மூச்சுத் திணற ஆரம்பித்தது. இத்தனை அமளிக்கும் மத்தியில் எப்படித்தான் வழியைத் தெரிந்துகொண்டு ஜீப் வண்டியை ஓட்டினாரோ! யாருடைய புண்ணியமோ, எவருக்கும் எந்த வித ஆபத்தும் இல்லாமல் நௌஷாரா ராணுவ உயர்தர அதிகாரிகள் உணவு விடுதிக்கு வந்து சேர்ந்துவிட்டோம். உணவு விடுதிக்குள் புகுந்து அதன் கதவை அடைத்த பிறகுதான், நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

நௌஷாரா முக்கியமான ராணுவ கேந்திரம். அங்கேதான் மேஜர் ஜெனரல் ஆத்ம சிங் தலைமையில் வீரப் போர் புரிந்த பட்டாளம் முகாம் போட்டிருந்தது. அந்த முகாமில் இருந்த வீரர்கள் பலரும், ஆத்ம சிங்கும் இந்திய நாட்டுக்காகத் தங்கள் உயிரையே அளித்து உத்தமத் தியாகிகளாக உயர்ந்தவர்கள். அந்த வீரர்களின் நினைவை அழியாமல் காப்பாற்றுவதற்காக நௌஷாராவில் ஒரு ஞாபகார்த்த ஸ்தூபி எழுப்பி யிருக்கிறார்கள். அந்த ஸ்தூபிக்கு அருகில் சென்று வணக்கம் செலுத்திவிட்டு, ஜம்கட்டை நோக்கிப் புறப்பட்டோம்.

வழியில் தெரிந்த குன்றுகளையெல்லாம் காட்டி, ''இந்தக் குன்றுகளைப் பாருங்கள். இவற்றைப் பல தடவை எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள். இவைகளை மீட்பதற்கு எத்தனை பேர் தங்கள் உயிரை விட்டிருப்பார்கள் தெரியுமா!'' என்று உணர்ச்சியுடன் கூறினார் அமர்நாத்.

வழியில் பல கிராமங்கள் மனிதர்களே இல்லாமல் காலியாகக் கிடந்த பரிதாபத்தைப் பார்த்தோம். அந்தக் கிராமங்களுக்கு அப்பால் ஏகாந்தமான இடத்தில் துர்க்கை அம்மனின் சிலை ஒன்று தெரிந்தது.

"'அம்மா துர்க்காதேவி, இங்கே நடந்த கோரங்களை யெல்லாம் பார்த்துத்தான் நீ கல்லாகி விட்டாயா? இல்லை; உன் உருவத்தைப் போலவே உன் இருதயமும் கல்லாகி இருந்ததோ?' என்று கேட்க வேண்டும் போல் இருக்கிறது" என்றார் எங்களில் ஒரு பத்திரிகைக்காரர்.

"இல்லை; அந்த அம்மாளின் அருளினால்தான் இந்த மட்டுமாவது யுத்தம் முடிந்தது" என்றார் அமர்நாத்.

**ஜ**ம்மு - காஷ்மீர் யுத்தத்தில் மிகக் கடுமையான போர் நடந்த இடம் ஜம்கட். பாகிஸ்தானைச் சேர்ந்த பீர்புர், கோடலி என்னும் இடங்களிலிருந்து வரும் சாலைகள் ஜம்கட்டில் சேர்கின்றன. ஜம்கட்டுக்கு இந்தியாவிலிருந்து வருவதற்குச் சாலை வசதியே கிடையாது. ஆனால் பாகிஸ்தானிலிருந்து இங்கே தாராளமாக வரலாம்; போர்த் தளவாடங்களையும் போர் முனை வரையில் கொண்டு வந்து கொடுக்கலாம். அதனால் பாகிஸ்தான் கை இங்கே ஓங்கி நின்றது; ஜம்கட் பயங்கரமான யுத்த பூமியாக இருந்தது.

ஜம்கட்டைப் பாகிஸ்தானிகள் கைப்பற்றி விட்டார்கள். அவர்களிடமிருந்து மூன்று முறை மீட்டும், மறுபடி ஜம்கட் பாகிஸ்தான் வசமாகிவிட்டது. ஜம்கட்டை மீட்காவிட்டால் ஜம்மு-காஷ்மீரைக் காப்பாற்ற முடியாது. அவ்வளவு முக்கியமான இடம் ஜம்கட். ஆகவே, ஜம்கட்டை மீட்கும் முயற்சியில் பிரிகேடியர் உஸ்மான் ஈடுபட்டிருந்தார். அவருடைய தலைமையின்கீழ் அதிசயமான சாதனைகளைப் புரிந்து கொண்டிருந்தார்கள் இந்திய வீரர்கள்.





காஷ்மீர் தேசத்துப் பெண்

தம் சைன்யங்களை உற்சாகப்படுத்துவதற்காகத் தாமே போர் முனையில் போய் நின்றார் பிரிகேடியர். அங்கே அழகாக வளர்ந்திருந்த செனார் மரத்துக்கு அடியில் உள்ள வளைவான பாறையில் பதுங்கிக்கொண்டு தம் சேனைகளுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று எதிரியின் பீரங்கிக் குண்டு உஸ்மான்மீது வந்து விழுந்தது. இடுப்பில் வந்து விழுந்த குண்டு அவர் உடலை இரண்டாகப் பிளந்துவிட்டது. சுதந்தர பாரதத்தின் எல்லையை மீட்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த ஒரு வீரர் மறைந்துவிட்டார். அவர் மறைவைக் கேட்டுப் பாகிஸ்தான் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. இந்தியத் தாய் தன் வீரப் புதல்வர்களில் ஒருவரை இழந்து ரத்தக் கண்ணீர் வடித்தாள்.

உஸ்மான் உயிர் விட்ட இடத்தில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைத்திருக்கிறார்கள். இந்தப் புனித இடத்துக்குச் சென்று இந்தியப் பத்திரிகைக்காரர்கள் எல்லாரும் மலர் மாலை வைத்து, அந்த வீரருக்கு நன்றியுடன் வணக்கம் செலுத்தினார்கள்.

ஜம்கட்டில் பாகிஸ்தான் வீரர்களும் இந்திய வீரர்களும் சமாதான எல்லையில் எதிர் எதிரே நின்று

காவல் புரிகிறார்கள். இருவருக்கும் இடையில் ஆயிரம் அடி நிலம் பரந்து கிடக்கிறது. அந்த இடங்களில் ஆடு மாடுகள் இந்திய எல்லையிலிருந்து பாகிஸ்தான் எல்லைக்குச் செல்கின்றன. சாதாரண மக்களும் இந்திய எல்லையிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்று விடுகிறார்கள். அப்படி அவர்கள் எல்லைக் கோட்டைத் தாண்டாமல் பார்த்துக்கொள்வது தான் அங்குள்ள வீரர்களின் வேலையாக இருக்கிறது.

பாகிஸ்தானிலிருந்து பவுண்டன் பேனா, கடிகாரம் முதலியவைகளைக் கள்ளத்தனமாகக் கடத்தி வந்து விடுகிறார்கள். அதேபோல் இந்தியாவிலிருந்து துணிகளைக் கடத்திச் செல்கிறார்கள். பாகிஸ்தானில் துணிகளின் விலை அதிகமாம். மனிதனுக்கு மிக அவசியமான உடையின் விலை, பாகிஸ்தானில் யானை விலை, குதிரை விலை என்று ஏறிக் கிடக்கிறதாம்!

''இங்கே மாடு மேய்க்கும் சிறுவன் பாகிஸ்தான் எல்லையிலிருந்து வரும்போது, அவனைத் தடுத்து நிறுத்திச் சோதனை போடாது இரக்கங் காட்டினால், அவன் கோவணத்துக்குள்ளே ஆறு கடிகாரங்கள் மறைத்து வைத்திருப்பதை எப்படிக் கண்டு பிடிக்க முடியும்?'' என்று கேட்டார் அங்கிருந்த சிப்பாய்.

அன்று இரவு வீரர்களோடு வீரர்களாக அவர்களுடைய கூடாரத்தில் தங்கினோம். காடும் மலையும் சூழ்ந்த இடத்தில் நாலடி உயரம் உள்ள கட்டையான புதர்கள் நிறைந்த சம வெளியில் வீரர்கள் கூடாரம் அடித்துக்கொண்டு காலம் தள்ளுகிறார்கள். யுத்த பூமியானதால் அங்கெல்லாம் இரவு நேரத்தில் யாரும் வெள்ளை ஆடை உடுத்துக்கொண்டு வெளியில் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் இந்திய சிப்பாய்களே அவர்களைச் சுட்டுவிடுவார்கள்.

இப்படிப்பட்ட ஆபத்தான இடத்தில் வெள்ளை உடை தரித்த நாங்கள் ஓர் இரவு தங்க வேண்டியிருந்தது. இரண்டு பத்திரிகைக்காரருக்கு ஒரு சிப்பாய் வீதம் காவல் போட்டிருந்தார்கள். நாங்கள் கூடாரத்தை விட்டு வெளியில் செல்ல வேண்டுமானால், அந்தச் சிப்பாயிடம் சொல்ல வேண்டும். அவர் ஊதுகுழல் மூலம் சமிக்ஞை செய்துவிட்டு எங்களை அழைத்துச் செல்வார். ஆனாலும் எங்களுக்கெல்லாம் பயம் பயம்தான்!

ஒரு கூடாரத்தில் இரண்டு பேர் வீதம் தங்கினோம். இரவில்கூடத் தாங்கமுடியாத உஷ்ணம். சிறு வண்டுகள் போன்ற பெரிய கொசுப் பட்டாளம் வேறே புறப்பட்டு விட்டது. கொசுக்களுடன் சிப்பாய்கள் போர் நடத்திக் கூடாரத்துக்குள் அவை நுழையாமல் தடுப்பதற்கு எத்தனையோ அதிசயமான சாதனைகளை எல்லாம் செய்தார்கள்!

கூடாரங்கள் எல்லாம் வெகு சுத்தமாக இருந்தன. ஒவ்வொரு கூடாரத்துக்கும் குளிக்கும் கூடாரம், 'பிளஷ் அவுட்' என்னும் சுகாதார வசதிகளுடன் கூடிய கூடாரம் முதலியவை தனித் தனியே இருக்கின்றன.

நாலு புறமும் மலை சூழ்ந்த இடத்தில் பல கூடார ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. வீரர்களுக்கு ஏற்படும் வியாதிகளை உடனுக்குடன் அங்கே கவனிக்கிறார்கள்.

**நௌ**ஷாரா தவி நதிக்கரை வழியாக ஜீப் வண்டி புறப்பட்டது. தலையில் தண்ணீர் சலசல வென்று ஓடிக்கொண் டிருந்தது. ஆற்றின் ஓர் ஓரத்தில்மட்டும் தண்ணீர் நாட்டிய மங்கை போலக் குதி போட்டுக்கொண்டும், இனிய கீதம் இசைத்துக்கொண்டும் ஆடி அசைந்துகொண்டும் இருந்தது. அதற்கு அப்பால் தவியில் பூசணிக்காய் அளவு பெரிய பெரிய கூழாங் கற்கள் ஓடிக்கொண் டிருந்தன. அந்தக் கற்கள் உண்மையில் ஓடவில்லை. ஆனால் ஜீப் வண்டியின் ஓட்டத்தினாலோ வேறு என்ன காரணத்தினாலோ தண்ணீரைப் போல் அந்தக் கூழாங் கற்களும் ஓடிக்கொண் டிருப்பது போலவே இருந்தன. ஆகா! அந்தக் கற்களில் தான் எத்தனை எத்தனை விதமான வர்ணங்கள்! பச்சை, மஞ்சள்,

கறுப்பு, வெள்ளை இப்படிப் பல வர்ணங்களில் கற்கள் கிடந்தன. ஓர் இடத்தில் தவி நதி அப்படியே தாமரைத் தடாகமாகக் காட்சி அளித்தது. இந்தக் கண் கொள்ளாக் காட்சியை வியப்புடன் கூர்ந்து பார்த்தபோது, இது வெறும் மாயத்தோற்றம் என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. பச்சை நிறக் கூழாங் கற்கள் பரவலாகக் கிடப்பதே அப்படி ஒரு பிரமையை ஏற்படுத்தியது.

ஏற்றமும் இறக்கமுமான இந்தப் பாதையில் போய்க்கொண்டிருக்கும்போது, தவி நதிக் கரையில் இருந்த ஒரு பழங் காலத்துக் கோட்டையைக் காண்பித்து, ''இதுதான் சிங்கஸ் கோட்டை'' என்று கூறினார் ராணுவ அதிகாரி.

காஷ்மீரிலிருந்து தில்லிக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார் சக்கரவர்த்தி ஜஹாங்கீர். இந்தத் தவி நதிக்கரையோடு மன்னரின் பரிவாரங்கள் ஊர்வலமாக வந்துகொண்டிருக்கின்றன. யானை குதிரைகளுடன் வீரர்கள் வருகிறார்கள். மன்னரும் மகாராணியும் பல்லக்கில் வந்துகொண்டிருக்கிறார்கள். வழியில் மன்னருக்கு நோய் ஏற்பட்டுக் கடைசியில் மரணம் அடைந்து விடுகிறார். 'மன்னரின் மரணம் மொகலாய ராஜ்யத்தின் அமைப்பையே மாற்றி விடக் கூடும்; தில்லியின்மீது எதிரிகள் திடீரென்று படை எடுத்துத் தாக்கக் கூடும்' என்பதை உணர்ந்த ராணி நூர்ஜஹான், மன்னரின் மரணத்தை வெளியில் யாருக்கும் தெரியாமல் மறைத்து விட்டாள்.

ஆனால், ஆவி பிரிந்த மன்னரின் உடல் கெட்டுவிட்டது. அதிலிருந்து துர்க்கந்தம் வீச ஆரம்பித்தது. மன்னராக இருந்தாலும் அவர் உடலும் மனித உடல்தானே!

துர்க்கந்தத்தை மறைக்க முடியாது என்பதை உணர்ந்தாள் நூர்ஜஹான். உள் உறுப்புக்களை அப்புறப்படுத்தி விட்டு உடலுக்கு வாசனைத்திரவியங்கள் போட்டு வைத்தாள்.

சக்கரவர்த்தியின் மரணத்தை டில்லிக்கு அருகில் சென்றபின்தான் அறிவித்தாள். சக்கரவர்த்தியின் உடலிலிருந்து அப்புறப்படுத்திய குடலைத் தவி நதிக்கரையில் புதைத்து அதன்மீது அருமையான கோட்டையையே எழுப்பியிருக்கிறாள் ராணி நூர்ஜஹான். அந்தக் கோட்டைதான் சிங்கஸ் கோட்டை.

ஜஹாங்கீரின் குடலைப் புதைத்த இடத்தில் கட்டிய கோட்டையில் தான், ஜம்மு-காஷ்மீர்ப் போலீஸ் படை இன்று இருக்கிறது. சிங்கஸ் கோட்டைக்குள்ளிருந்துதான் அவர்கள் இந்தப் பிராந்தியத்தைக் காவல் காத்து வருகிறார்கள். ஆனால் இந்த இடத்தில் ஜனசஞ்சாரமே இல்லை.

இதற்கு அருகில் ஒரு 'பிக்கட்' (எல்லைக் காவல் படை) முகாம் இருந்தது. இந்த இடத்துக்கு வந்தவுடன்தான், நாம் கற்பனை செய்து வைத்திருக்கும் இமயமலையைக் கண்ணால் பார்க்க முடிகிறது. இமய மலையின் பனி மூடிய சிகரத்தை இங்கேதான் முதல் முதலாக நாங்கள் பார்த்தோம்.

''இதுதான் பீர்பஞ்சால் சிகரம்'' என்றார் ராணுவ அதிகாரி.

'வெள்ளிப் பனிமலை' என்ற கவியின் வர்ணனையை நேரில் பார்த்து மெய்மறந்து போனேன். சூரிய ஒளியில் பனிமலை பளபள என்று தெரிந்தது! அதிகமான வெயிலில் உஷ்ணம் தாங்காது பனி உருகிய இடங்கள் எல்லாம் அந்த வெள்ளிப் பனி மலையின் சிகரத்தில் ஆறுபோல் கறுப்பாகத் தென்பட்டன. அந்தச் சிகரத்துக்கு என்ன மாய சக்தி இருக்கிறதோ! அதைப் பார்த்த உடனேயே மனத்தில் எல்லை காண முடியாத ஓர் இன்பம் பொங்கியது; மனத்தில் ஒரு குளிர்ச்சி ஏற்பட்டது. 'இது தான் நமது ஒப்புயர்வற்ற இமய மலை-எங்கள் மலை' என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள முடிந்தது.

**நௌ**ஷாராவிலிருந்து ரஜௌரிக்கு இருபத்தொன்பது மைல். ரஜௌரி நகரத்தை நோக்கி

ஜீப் வண்டி ஓடிக்கொண்டிருந்தபோது, பீர்பஞ்சால் சிகரம் எல்லாரையும் காந்தம்போல் கவர்ந்துவிட்டது. அதன் கம்பீரத் தீதப் பார்த்தவண்ணம் இந்த உலகை மறந்திருந்தோம். இப்படி எத்தனை நாழிகை இருந்தோம் என்று தெரியவில்லை. அதிகாரி, "இதுதான் ரஜௌரி நகரம்" என்றதும் வியப்புடன் திரும்பிப் பார்த்தோம்.

தவி நதிக்கரையில் மாட மாளிகை கூட கோபுரங்களுடன் சிறிய பெரிய கட்டிடங்களையுடைய சிறிய நகரம் அது. அந்த நகரத்துக்கு அப்பால் உள்ள ஒரு பெரிய குன்றின் முகட்டில் கண்ணைக் கவரும் முறையில் பழங்காலத்துக் கோட்டை ஒன்று காட்சி அளிக்கிறது. அதன் உச்சியில் நமது பாரத மணிக்கொடி - அசோக சக்கரம் பொறித்த மூவர்ணக் கொடி - பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது.

"இந்தக் கோட்டையின் உச்சியில் ஏழு ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் கொடி பறந்துகொண்டிருந்தது" என்றார் எங்களுடன் வந்த ராணுவ அதிகாரி.

"பாகிஸ்தான் கொடியா? அப்படியானால் இந்த நகரத்தைக்கூடப் பாகிஸ்தானிகள் கைப்பற்றியிருந்தார்களா?"

"பாகிஸ்தான் வீரர்களும், பகல் கொள்ளைக்காரர்களும் இந்த நகரிலே செய்திருக்கும் அட்டூழியத்தைச் சாதாரண வார்த்தைகளால் விளக்கிக் கூற முடியாது" என்று சொல்லித் தூரத்தில் தெரிந்த ஒரு கட்டிடத்தைக் காண்பித்து, "அதோ பார்த்தீர்களா ஒரு கட்டிடத்தை?" என்று கேட்டார்.

"அடாடா! புத்தம் புதுக் கட்டிடம் வெடிகுண்டு பட்டுச் சிதைந்து கிடக்கிறதே!"

"அநேகமாக இந்த மாதிரிதான் இந்த ஊரில் உள்ள எல்லாக் கட்டிடங்களும் வெடி குண்டுகளால் இடிந்தும் சிதைந்தும் பாழடைந்தும் கிடக்கின்றன."

"இந்த ஊரில் யுத்தத்துக்கு முன்பு ஜனத்தொகை எவ்வளவு இருக்கும்?"

"முப்பதினாயிரம்."

"முப்பதினாயிரமா? அப்படியானால் பெரிய நகரந்தான். இப்பொழுது எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

"சுமார் மூவாயிரம் பேர்."

"மூவாயிரம் பேரா? வெறும் மூவாயிரந்தானா?"

"ஆமாம், மூவாயிரம் பேரேதான். அதுவும் வயசு சென்றவர்கள்."

"ஏன்? வாலிபர்கள், குழந்தைகள் எல்லாம் என்ன ஆனார்கள்?"

"அதை எப்படிச் சொல்வேன்! அதோ தவி நதிக்கரையில் ஒரு கோயில் தெரிகிறதல்லவா? அதற்கு எதிரில் பெரிய தீ வளர்த்தார்கள். தீ சொக்கப்பனை போல் வானோங்கி எரிந்தது. அந்தத் தீயில், ஐயோ எப்படிக் கூறுவேன்! பச்சிளங் குழந்தைகளை - பால் மணம் மாறாத பாலகர்களை - உயிரோடு போட்டுக் கொளுத்திக் கொன்றுவிட்டார்கள், பாவிகள்!" என்றார். இதைச் சொல்வதற்குள் அவர் பல முறை கண்ணீர் விட்டுவிட்டார். அவருடைய உதடுகள் துடித்தன. அவரால் சற்று நேரம் பேசவே முடியவில்லை.

"கொடுமை! கொடுமை! காதால் கேட்கவும் முடியாத பயங்கரக் கொடுமை!"

"இதையே கொடுமை என்கிறீர்களே! இந்த ஊரில் இருந்த பெண்மணிகள் பட்ட பாட்டைக் கேட்டால் என்ன சொல்வீர்களோ!"

"பெண்மணிகளை என்ன செய்தார்கள் அந்தப் பாதகர்கள்?"

"என்ன செய்தார்கள்! அதோ மலை மேலே தெரிகிறதே கோட்டை, அந்தக் கோட்டைக்குள்ளே ஒரு கிணறு இருக்கிறது. வற்றாத ஊற்றுப்போல் பொங்கி வரும் தண்ணீரும் பாதாளத்தையே தொட்டுவிடும் ஆழமும் உடையது. அந்தக் கோட்டைக்குப் பருவ மங்கைகளையும் பத்தினித் தெய்வங்களையும் பலாத்காரமாகக் கொண்டுபோய் அந்தப் பாவிகள் படுத்திய பயங்கரக் கொடுமைகளை எந்த மொழியில் உங்களுக்குச் சொல்லுவேன்! செய்யக்கூடாத கொடுமைகளைச்

செய்தபின், பல பெண்மணிகளை அந்த மலைமீதிருந்து அப்படியே உருட்டி விட்டார்கள்; பலரை அந்தப் பயங்கரக் கிணற்றுக்குள்ளே வீசி எறிந்தார்கள்.'' இந்தச் சமயத்தில் நம் வீரர்கள் காட்டிலும் மலையிலும் நடந்து வந்து எதிரிகளைத் தாக்க ஆரம்பித்தார்கள். இவர்களைக் கண்டதும் ரஜௌரி நகரத்து மக்கள் இவர்கள் காலடியில் விழுந்து கதறி அழுதார்கள். எதிரிகளைத் துரத்தி, மக்கள் கண்ணீரை நம் வீரர்கள் துடைத்தார்கள். வீதிகளிலும் வீடுகளிலும் கிணறுகளிலும் நாற்றமெடுத்துக் கிடந்த மனித உடல்களை அப்புறப் படுத்துவதற்குள் நம் வீரர்கள் பட்ட பாடு, அடாடா! பொன் எழுத்தில் பொறிக்க வேண்டிய பணி.''

இந்த ரஜௌரி நகரம் இன்று நம் ராணுவத்தின் பாதுகாப்பில் அமைதியாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம்.

இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் போர்ப் பயிற்சியும் போர் முனையைப்பற்றிய சிந்தனையும் மட்டும் இருந்தால், வீரர்களின் மனநிலை உணர்ச்சியற்றுப் போகு மல்லவா? அதற்காக ரஜௌரி ராணுவ முகாமில் இஸ்பேட் திறந்தவெளி அரங்கம் ஒன்று அமைத்திருக்கிறார்கள். அதில் சிப்பாய்கள் தாங்களே ஆடலும் பாடலும் நிகழ்த்தி மகிழ ராணுவ அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அகில இந்தியப் பத்திரிகைக்காரர்களுக்காகச் சிப்பாய்கள் ஒரு விசேஷக் கலை நிகழ்ச்சி நடத்தினார்கள். அந்த நிகழ்ச்சியில் ஆடலும் பாடலும் அபிநயமும் நாடகமும் கலந்திருந்தன.

மேடைமீது ஆணும் பெண்ணும் சேர்ந்து நடனமாடும் ஒரு காட்சியைப் பார்த்ததும், ஒரு கணம் திகைத்துப் போய்விட்டோம். ''ராணுவ முகாமில் பெண்களா?'' என்று ஆச்சரியப்பட்டுப் போனோம். பிறகு விசாரித்ததில் ஆண்களே பெண் வேஷம் தாங்கி ஆடினார்கள் என்று தெரியவந்தது.

நடனத்துக்குப் பின் ஒரு நாடகம் நடந்தது. அழகான ஒரு பெண் தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் செய்யும் சாகஸங்களைப் பின் அணியாகக் கொண்டு புனைந்த ஹாஸ்யக் கதை அது. பெண் பல துன்மார்க்கர்களின் பார்வையில் படுகிறாள். அதிலிருந்து தப்ப ஒரு யோசனை செய்கிறாள். அவளுடைய சூழ்ச்சி தெரியாமல் பெண்ணின் மோக வலையில் ஈடுபட்ட வளையல் காரர், சேலைக்காரர், மைனர் எல்லாரும் ஒரு நாளில் ஒரே நேரத்தில் அந்த அழகியின் வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். ஒவ்வொருவரும் இன்னொருவருக்குப் பயந்து இந்த வீட்டிலேயே ஒளிந்துகொள்ள முயலுகிறார்கள்.

வளையல்காரர் அம்மிபோல் இருக்கிறார். புடைவைக்காரர் ஆட்டுக் கல்போல் மாறுகிறார். மைனர் மாவரைக்கும் யந்திரமாகச் சுற்றுகிறார்.



படகு வீடு

அதே சமயத்தில் அழகியின் கணவர் வீட்டுக்கு வந்துவிடுகிறுர். அம்மியும் ஆட்டுக் கல்லும் யந்திரமும் அவர் கையில் படும் பாட்டை இப்பொழுது நினைத்தால்கூட வயிறு குலுங்கச் சிரிப்பு வருகிறது.

இந்தக் கதையை இந்திய சிப்பாய்கள் மிகத் திறம்பட நடித்துக் காட்டினுர்கள்.

இந்த நிகழ்ச்சிகளில் முக்கியமான பங்கெடுத்து, அவற்றுக்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டி வரும் சிப்பாய்கள் தமிழர்கள் தான். இமய மலையின் சிகரங்களில் கூட, கலை வளர்க்கும் திருப்பணியிலும் சிரிப்பூட்டும் கலையிலும் சமாதான வளர்ச்சியிலும் உற்சாகத்துடன் ஈடுபடக்கூடிய பண்பு நம் தமிழ் மக்களுக்கு இருக்கிறது.

மறு நாள் ரஜௌரியிலிருந்து ஐம்பத்து நாலு மைல்களுக்கு அப்பால் உள்ள பூஞ்ச் நகருக்குச் சென்ருேம். இதுவரையில் இந்த யாத்திரையில் காணுத பயங்கரப் பாதைகளை இந்த ஐம்பத்து நாலு மைல் பிரயாணத்திலே காண முடிந்தது. வழியில் ஏழாயிரம் அடி உயரத்தில் உள்ள 'பிக்கட்' ஒன்றைப் பார்த்தோம். இந்தப் பிக்கட் இருக்கும் இடம் பனிக் காலத்தில் பத்தடி உயரம் பனி மூடிக்கிடக்கும். சிப்பாய்களின் குடிசைகள் எல்லாம் பனி மலைக்குள் புதைந்துவிடும். ஆனுலும் அந்தப் பனிக்காலத்திலும் தோளில் துப்பாக்கியைச் சுமந்துகொண்டு நம் சிப்பாய்கள் இந்திய எல்லையைப் பாதுகாத்து வருகிறுர்கள்.

இந்தப் பிக்கட் இருக்கும் இடமும் பாகிஸ்தான் கைக்குள்தான் இருந்ததாம். இந்தக் குன்றுகளை மீட்டு இந்திய எல்லையைப் பலப் படுத்தப் பாடுபட்டவர் சுபேதார் பீம்சந்த். இவர் ராணுவத்திலேயே மிக உயர்ந்த கௌரவச் சின்னமான மகவீர சக்கரம் இரண்டு பெற்றவர்.

ஏழாயிரம் அடி உயரத்துக்கு வந்துள்ள எங்களை அகமும் முகமும் மலர வரவேற்ருர் மேஜர் பீம்சந்த்.

மலையின் இரு புறமும் நன் செய் வயல்கள் காட்சியளிக்கின்றன. எல்லாம் மாடிப் படிகள் போல ஓர் அடி அகலம் உள்ள வயல்கள். இமய மலைமீது மரகதப் போர்வையைப் போர்த்துவிட்டது போல் பச்சைப் பசேல் என்று அந்த வயல்கள் படிப்படியாக இறங்கியும் ஏறியும் இருந்தன. அப்பொழுது அடித்த காற்றில் பயிர்கள் லேசாக ஆடி அசைந்தபோது, அந்த இடம் புது எழிலுடன் திகழ்ந்த காட்சியைப் பார்ப்பதற்குப் பதினுயிரம் கண்கள் வேண்டும்.

ஏழாயிரம் அடிக்கு மேல் இருக்கும் இந்த இடத்துக்குச் செல்லும் பாதையைப்பற்றி ஒரு வார்த்தை. மலைமீது செங்குத்தாகப் போகும் சாலையில் ஜீப் வண்டி ஓடியது. அதன் சக்கரங்கள் மட்டுந்தான் சாலையில் இருக்கின்றன. அதற்கு மேல் சாலை அகலமில்லை. சக்கரத்துக்கு வெளியே உள்ள ஜீப் வண்டியின் பாகம் இரண்டாயிரம் அடி ஆழமான பள்ளத்தில் அந்தரமாக நிற்கிறது. இந்த இடங்களில் நாலு சக்கரங்களையும் ஒரே சமயத்தில் இயக்கி ஜீப் வண்டியை ஓட்டிக் கொண்டு வரும்படி டிரைவருக்கு உத்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

நாலு சக்கரங்களையும் இயக்கி ஓட்டுவது என்ருல் என்ன? சாதாரண மோட்டார் வண்டி சேற்றிலோ மழையிலோ சிக்கிக்கொண்டால், அங்கிருந்து கிளம்ப முடியாது. காரணம் அதன் யந்திரங்களால் நாலு சக்கரங்களையும் ஒரே சமயத்தில் இயக்க முடியாது; இரண்டு சக்கரங்களை மட்டுந்தான் இயக்க முடியும். எனவே, கார் கிளம்பாது. ஏற்றமான இடங்களிலும் இறக்கமான இடங்களிலும் சாதாரணக் காரை நம்பிப் போக முடியாது.

ராணுவ ஜீப் வண்டி அப்படிப்பட்டதல்ல. நாலு சக்கரங்களையும் ஒரே சமயத்தில் இயக்கிச் சுழற்றி ஓட்டும் வசதி படைத்த யந்திரங்கள் பொருந்தியது. ஒரு சக்கரம் சரியாக இயங்காவிட்டாலும் மற்ற மூன்று சக்கரங்களும் இயங்கி, அநாயாசமாக ஓடும்.

எப்படியோ தைரியமாக ஜீப் வண்டியில் நாங்கள் உட்கார்ந்திருந்தாலும், வழியில் தென்படும் நாம

வளைவுத் திருப்பங்களில் ஜீப் வண்டி திரும்பும்போது ஜீப் வண்டியில் இருந்தவர்கள் மரணத்தின் வாசல் வரையில் செல்லும்படி யாகிவிட்டது. அந்தச் சமயங்களில் பலர் இறுதிப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ''ராம ஜயம்! ராம ஜயம்!'' என்று உச்சரித்தவர்களும், ''நமசிவாயம்! நமசிவாயம்!'' என்று ஜபித்தவர்களும், ''அல்லா! அல்லா!'' என்று அழைத்தவர்களும், அப்படியே இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு இஷ்ட தெய்வங்களை வாய்விட்டுப் பிரார்த்தித்தவர்களும் மலையின் உச்சியில் ஏறியவுடன் மிகுந்த தைரியசாலிகளைப் போலவே நடித்தார்கள். ''வழியில் ரொம்பவும் பயந்து போனீர்களோ?'' என்று கேட்டபோது, கைகளும் உதடுகளும் தாளம் போட, ''நான் பயப்படவில்லை'' என்று கூறிய பத்திரிகைக்காரர்களைப் பார்த்து, ராணுவ அதிகாரிகள் புன்முறுவல் பூத்தார்கள். அந்தச் சமயத்தில் பத்திரிகைக்காரர்களின் முகங்களில் தோன்றிய அபூர்வ பாவங்கள் இனி எந்த ஜன்மத்திலும் காண முடியாத காட்சிகள்!

பிரம்மாண்டமான இமய மலை எத்தனை எத்தனையோ உருவங்களில் உயர்ந்தும் தாழ்ந்தும் வளைந்தும் நெளிந்தும் காட்சியளிக்கிறது. சில இடங்களில் தனித் தனி மலைகளாகப் பிரிந்து நிற்கிறது. பிரிந்து நிற்கும் ஓர் இடத்தில் உள்ள இடைவெளி வழியாக ஓடிவரும் நதி பூஞ்ச். சமுத்திர மட்டத்திலிருந்து மூவாயிரம் அடி உயரம் உள்ள இந்த நதிக்கரையில் அமைந்திருக்கும் நகரந்தான் பிரசித்தி பெற்ற பூஞ்ச் நகரம். ஜம்முவில் இருந்த உஷ்ணம் இங்கே இல்லை. ஜிலுஜிலு வென்று காற்று வீசிக் கொண்டிருந்தது.

பூஞ்ச் மிகப் பழமையான சிறிய நகரம். இங்கே ஒரு ராணுவ முகாம் இருக்கிறது. இது 1948-ஆம் ஆண்டு ஆரம்பித்த பட்டாளம். இதற்குத் 'தேசீய ராணுவம்' என்று பெயர். மிகவும் முக்கியமான ராணுவ முகாம்களில் ஒன்று இது. இந்த ராணுவத்தில் உள்ள மொத்த வீரர்களில் பாதிப் பேர், ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த முஸ்லிம் அல்லாதவர்கள். இவர்களுக்கு வேண்டிய ராணுவப் பயிற்சிகளை நாலு இந்திய ராணுவ அதிகாரிகள் அளித்து வருகிறார்கள். ஜம்மு-காஷ்மீர் பிரச்னை தீர்ந்து அமைதி ஏற்படும் வரையில் இந்தத் தேசீய ராணுவ சேனையும் இருக்கும்.

பூஞ்ச் நகரிலிருந்து காஷ்மீருக்கு நடந்தே சென்றுவிடலாம். சுமார் முப்பது மைல் தூரந்தான் பூஞ்சிலிருந்து காஷ்மீர். ஆனால் நடந்து செல்லுவது என்பது அவ்வளவு எளிய காரியமல்ல. பூஞ்ச் நகருக்கும் காஷ்மீருக்கும் இடையில் இமய மலையின் ஒரு பகுதியான பன்னிரண்டாயிரம் அடி உயரமுள்ள பீர்பஞ்சால் மலை குறுக்கே நிற்கிறது. அதற்கு மத்தியில் உள்ள சிறு கணவாய் வழியாகப் புகுந்து செல்லவேண்டும். அந்த வழி பூஞ்ச் நகருக்குப் பதினறு மைல்களுக்கு அப்பால் உள்ள மண்டி என்னும் கிராமத்துக்கு அருகில் இருக்கிறது.

மண்டி ஒரு முக்கியமான கிராமம். இங்கெல்லாம் இந்திய ராணுவம், பாகிஸ்தான் ராணுவத்துடன் மிகக் கடுமையான போர் நடத்தி வெற்றிக் கொடி பிடித்திருக்கிறது. பூஞ்ச் நகரம் சுமார் பதினைந்து மாத காலம் எதிரிகளின் கையில் இருந்து படாத பாடு பட்டது. குரங்கின் கையிலே அகப்பட்ட பூமாலைபோல் பூஞ்ச் நகரம் சிதைந்து கிடக்கிறது.

இந்துக்களின் கோயில்களும், சீக்கியர்களின் குருத்துவாரமும், முஸ்லிம்களின் பள்ளிவாசல்களும், நெருக்கமான கடைத் தெருக்களும், பழைய வீடுகளுமாக ஒரே குழப்பமாக இருக்கிறது பூஞ்ச் நகரம். பல தடவை இந்த நகரத்தைக் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள். சாலைகள் எல்லாம் மிகவும் குறுகலானவை. கருங்கல்லைச் செங்கல் போல ஒரே அளவாகச் செய்து அதை நெருக்கமாக உயர வாட்டில் புதைத்துப் பலமான சாலை போட்டிருக்கிறார்கள். வீதிகளில்

குதிரையிலோ, ஜீப் வண்டியிலோ மட்டுமே போகலாம். காரணம் ஏற்றமும் இறக்கமும் உள்ள சாலை கள். நடந்து சென்றால், மூச்சுத் திணறிக் களைப்பு ஏற்பட்டு விடுகிறது.

ஜம்மு-காஷ்மீரில் இந்திய ராணு வத்துக்காகச் செலவு செய்வது அவ் வளவும் இந்திய சுதந்தரத்தைக் காப்பாற்றும் செலவாகும்; இந்தி யாவின் தலைவாசலைப் பலப்படுத் தும் முயற்சியாகும். இந்த இடத்தை நாம் காப்பாற்றவில்லை யானால், நம் தலைநகரான டில்லி யைக் காப்பாற்ற முடியாது; இந்தியாவின் சுதந்தரத்தைப் பாதுகாக்க முடியாது. இந்தியா வுக்குள் எதிரிகள் புகும் வழி இது தான். ஆகவே, இதைக் காப் பாற்றுவது மிகவும் முக்கியம். இந்தியாவின் வடக்கு எல்லையைப் பாதுகாக்கும் மிகப் பெரிய அரணாக இமய மலை நிற்கிறது. ஆனால் அந்த இமய மலை இந்தியாவைக் காப் பாற்றுவதற்கு, நாம் இமய மலையைக் காப்பாற்றவேண்டும்; அதை நம்முடைய ஆளுகைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். இந் தக் காரியத்தைத்தான் நம் ராணு வம் ஜம்மு-காஷ்மீரில் செய்து வருகிறது.

''சிறு பிரதேசங்களான ஜம்மு-காஷ்மீர் நம்மை விட்டுப் போனால் தான் என்ன? அதற்காக இத்தனை கோடி ரூபாய்களைச் செலவு செய்ய வேண்டுமா?'' என்றெல்லாம் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள் இந்தியாவின் பூகோள அமைப்பைத் தெரிந்துகொள்ளாத தாலேயே அப்படிச் சொல்லுகிறார் கள். 'எதிரிகளை இந்தியாவுக்குள் வராமல் தடுத்து நிறுத்தவேண்டு மென்றால், ஜம்மு-காஷ்மீரில் நிறுத்தியாகவேண்டும். அதை விட் டால் நாம் நம் தலைநகரான டில்லி யைக் காப்பாற்ற முடியாது' என்று அநுபவம் நிறைந்த ராணுவ அதிகாரிகள் கூறுகிறார்கள். அவர் கள் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நேரில் பார்த்து நன்றாக உணர்ந்துகொள்ள முடிந் தது.

பூஞ்ச் நகரிலிருந்து காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகருக்கு விமானப் பிரயாணம் நாற்பது நிமிஷ நேரந் தான். மாநிலத்திலேயே சிறந்த மனோகரமான இமய மலையின் சிக ரத்துக்கு மேலே வாழ்நாள் முழுவ தும் கழிக்கலாம்.

விமானத்தில் இருந்த கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தால், விமானம் உயரக் கிளம்பிப் பறப் பது நன்றாகத் தெரியும். பூஞ்ச் ரம்மியமான நகரம். அதன் கம் பீரமான கட்டிடங்கள் எல்லாம் ஆகாயத்திலிருந்து பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன!

ஐயாயிரம் அடிக்கு மேலே செல் லும்போது விமானம் மேக மண்ட லத்துக்குள் அல்லவா புகுந்து செல்கிறது! மேக மண்டலத்தில் விமானம் பறப்பதற்குத் திணறு கிறது!

மேக மண்டலத்தைப் பூமியி லிருந்து அண்ணாந்து பார்த்து அநு பவித்து வந்தவர்களுக்கு, அதன் மீதே பிரயாணம் செய்தால் எப் படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா? 'வெள்ளை மலர்க் கூட்டமோ! அன்னப் பறவை களின் அணிகளோ!' என்று பிரமை யூட்டுபவை போல் இருந்தன மேகக் கூட்டங்கள். அவற்றுக்குள் செல் லும்போது ஏதோ ஒரு புது உலகத் தில் சஞ்சரிப்பதாகவே தோன்றி யது. இப்போது விமானம் மேக மண்டலத்துக்கும் மேலே சென்று விட்டது. விமானத்தின் சிறு ஜன் னல்களைத் திறந்தோம். அதன் வழியாகக் குளுகுளு என்று குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்து விட்டது. அந்தக் காற்றுப் பட்ட இடமெல்லாம் அப்படியே உணர்ச்சி அற்றுப் போய்விட்டது. இமய மலைச் சிகரங்களுக்கு மேலே வீசுகிற காற்றல்லவா? அதனால் தான் அவ்வளவு குளிர். சட் டென்று ஜன்னலை மூடி விட் டோம்.

இப்போது ஏராளமான மேகக் கூட்டங்கள் படிப்படியாக விமா னத்துக்குக் கீழே மிதந்து சென்ற தைப் பார்த்து மெய்மறந்து போனோம். இப்போது விமானம்

பன்னிரண்டாயிரம் அடிக்கும் மேலே வானவீதியில் பவனி செல்ல ஆரம்பித்துவிட்டது. இமய மலையின் தோற்றம் மாறிவிட்டது. இதுவரையில் இமய மலையில் தெரிந்து வந்த மரக்காடுகள், இப்போது அடியோடு மறைந்துவிட்டன. இமய மலையில் எங்கே பார்த்தாலும் பனி மூடியிருக்கிறது. வெள்ளிப் பனி மூடிய பீர்பஞ்சால் சிகரத்துக்கும் மேலே விமானம் சென்றுவிட்டது.

இமய மலைமீது பீர்பஞ்சால் சிகரத்தின் எழிலைக் கண்கொட்டாமல், திறந்த வாய் மூடாமல் பார்க்கத் தொடங்கினோம். எங்களுடன் வந்த ஒருவர், "இதன் வழியாக இலங்காபுரி மன்னன் ராவணன் சென்றபோது சாம வேதத்தைப் பாடினானாம்; நானும் பாடப் போகிறேன்" என்று சாம வேதத்தைக் கணீரென்ற பெரிய குரலில் உற்சாகமாகப் பாட ஆரம்பித்தார்.

விமானத்தின் சப்தம் அவருடைய கம்பீரமான குரலுக்குச் சுருதி கூட்டியதுபோல் இருந்தது. பாடிய பாடலின் பொருள் தெரியவில்லை. ஆனாலும் அந்தச் சாம கானத்தில் இருந்த வர்ணிக்க முடியாத இனிமையும் சுகமும் மனத்தைக் கவர்ந்தன. ராவணனுடைய சாம கானத்தைக் கேட்டுப் பரமேசுவரன் மயங்கிப் பிரத்தியட்சமானதில் வியப்பு ஒன்றுமில்லை!

விமான ஓட்டியின் அறையிலிருந்து இரு புறத்தையும் பார்த்தால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பார்க்கும் இடமெல்லாம் இமயமலையின் எழில் மிக்க சிகரங்கள் காட்சி யளித்தன. வெள்ளிப் பனிமலையின் அழகைப் பரிபூர்ணமாகப் பார்த்து அனுபவிக்க முடிந்தது. பனி மூடிய சிகரங்கள் சில இடங்களில் உருகிச் சிறு சிறு அருவிகளாகப் பெருகி ஓடும் அழகைப் பார்க்க எத்தனை கண் இருந்தாலும் போதாது. அவை அப்படி உருகிப் பெருகி ஓடியதற்கு நண்பரின் சாம கானந்தான் காரணமா யிருக்க வேண்டும்!

என்ன ஆச்சரியம்! இமய மலையின் அழகு திடீர் திடீர் என்று மாறுகிறது. ஆமாம், இருநூறு மைல் வேகத்தில் வானத்தில் பறக்கும் விமானம் கணத்துக்குக் கணம் இமய மலைப் பகுதியில் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் சென்றுகொண்டல்லவா இருக்கிறது! நாம் இதுவரையில் பார்த்த பனி மூடிய சிகரங்கள் எங்கே? விமானம் மீண்டும் இறங்கி மேக மண்டலத்தில் அல்லவா சிக்கிக் கொண்டது.

இமய மலையின் பனி மூடிய இடங்கள் மறைந்துவிட்டன! மலையில் பச்சைப் பசேல் என்று காடுகள் தெரிகின்றன. ஆ! இப்போது விமானம் காஷ்மீரத்தில் பறக்கிறது! பூமி தேவியின் என்றும் இளமையான உருவை இங்கே காண முடிகிறது. பூமித் தாய் இந்த இடத்தில்தான் தன் நிறமும் ஒளியும் குன்றாமல் அழகுடன் திகழ்கிறாள். வயல் வெளிகள் பாத்தி பாத்தியாகத் தெரிகின்றன. அவற்றின் தண்ணீரில் சூரியனின் பொற் கிரணங்கள் பட்டு எத்தனை எத்தனையோ ஜால வித்தைகள் காட்டுகின்றன. வைரங்களும் வைடூரியங்களும் பாளம் பாளங்களாக மின்னுகின்றனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அன்னபூரணி அமரும் பொற் பீடம் போல், வானவிளிம்பு வரையில் பசுங் கதிர்கள் ஆடும் வயல் பரப்பு. பொன்னிக் கதிர்கள் சாய்ந்து கிடக்கும் கோதுமைப் பயிர்கள். இவைகளோடு பல வண்ண மலர்கள். இவைகளுக்கு ஊடே வளைந்து செல்லும் ஆறுகள்.

மலையிலிருந்து பச்சைப் பசேலென்று மரகத ஆறுகள் ஓடுவது போல் இருந்தன, இமயமலையில் வளர்ந்திருந்த மரங்கள். மயில் கண் கரைபோட்ட வேஷ்டிகள் போல, போம்பிளார் மரங்கள் இரு புறமும் வரிசை வரிசையாக வளர்ந்துள்ள அழகழகான சாலைகள். கங்கை நதியோ என்று வியக்கும்வண்ணம் கம்பீரமாக ஓடும் ஜீலம் நதி. சின்னச் சின்னத் தீவுகள் நிறைந்த சமுத்திரத்தைப் போன்ற தால் தடாகம். நெருக்கமான பெரிய கட்டிடங்களையுடைய

ஸ்ரீநகர் - காஷ்மீரத்தின் தலை நகர். இவை எல்லாம் சேர்ந்து ஏதோ மாயாபுரி என நம்மை மயக்குகின்றன.

காஷ்மீர் காஷ்மீர்தான்! அடடா! என்ன குளர்ச்சி! என்ன குளிர்ச்சி!

பூலோக சொர்க்கமான காஷ்மீரில் அடி எடுத்து வைத்தவுடன் அருகிலிருந்த பத்திரிகைக்காரர், ''என்ன ஸார்! இந்த இடத்தில் ஒற்றையாகச் செல்ல வேண்டியிருக்கிறதே! இங்கல்லவா மனைவியை உடன் அழைத்து வர வேண்டும்'' என்று தம் மனைவியைப்பற்றி நினைத்துக் கொண்டார்.

ஜம்மு-காஷ்மீர் சர்க்கார் பஸ் காத்துக்கொண்டிருந்தது. அது எங்களை ஏற்றிக்கொண்டு படகு வீடுகளை நோக்கிச் சென்றது. விமான நிலையத்திலிருந்து ஸ்ரீநகர் ஆறு மைல். ஆறு மைல் தூரமும் கண்ணுக்கு இனிமையான காட்சிகள். சாலையின் இரு புறமும் ஆப்பிள் தோப்புகள். இலைகளே தெரியாமல் ஆப்பிள் காய்கள் குலுங்கிக்கொண்டிருந்தன. ஜூன் மாதம் ஆப்பிள் பழக் காலம் இல்லை. எனவே, காய்கள் குலுங்கின.

இன்னும் என்ன என்னவோ விதம் விதமான மலர் குலுங்கும் செடிகள். சாலையின் இரு புறமும் போம்பிளார் மரங்கள் வானோங்கி நின்றன. சாலையைப் பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு மனோரம்மியமான காட்சி.

ஸ்ரீநகரில் படகு வீடுகள் பல இடங்களில் தால் தடாகத்தில் - ஜீலம் நதியில் - இருக்கின்றன. எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த படகு வீடுகள், சங்கராசாரியார் குன்றுக்கு அடிவாரத்தில் உள்ள காங்ரிபல் என்ற இடத்தில் உள்ளவை. இந்த இடம் வந்தவுடன் பஸ் நின்றது. நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினோம்.

தால் தடாகத்துக்கும் சங்கராசாரியார் மலை அடிவாரத்துக்கும் இடையில் அழகான சிமென்ட் சாலை போட்டிருக்கிறார்கள். அந்தச் சாலையில் பல பூங்காக்கள் கண்ணைக் கவர்கின்றன. காதலர்கள் பூங்கா, நேரு பூங்கா இரண்டும் மிகப் பிரசித்தமானவை. பழைய காஷ்மீர் மகாராஜா ஹரி சிங்கின் அரண்மனையில் நடைபெறும் நவீன வசதிகள் படைத்த ஹோட்டலும் இங்கேதான் இருக்கிறது.

காங்ரிபல்லிலிருந்து படகு வீடுகளுக்குச் செல்லுவதற்காகத் தால் தடாகப் படிகளில் இறங்கினோம். அங்கே தயாராக இருந்த ஷிகாரிகள் - அதாவது, சிறு படகுகள் - எங்களை ஏற்றிக்கொண்டு படகு வீடுகளை நோக்கிக் கிளம்பின.

படகு வீடு ஒவ்வொன்றுக்கும் ஒரு ஷிகாரியும், ஒரு சமையல் படகு வீடும் உண்டு. சமையல் படகு வீடு, பெரிய படகு வீட்டுக்குப் பின்னால் நிற்கிறது. இதில் படகின் சொந்தக்காரரும் அவருடைய குடும்பத்தினரும் வசித்து வருகிறார்கள்.

படகு வீட்டில் தங்கும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய ஆகாரங்களை இவர்கள் தயார் செய்து கொடுப்பார்கள்.

ஷிகாரி ஒரு சிறிய உல்லாசப் படகு. ஓர் ஆள் சுலபமாகத் துடுப்பைப் போட்டே தள்ளிக்கொண்டு செல்லலாம். ஷிகாரியில் மூன்று ஸ்பிரிங் மெத்தைகள் உள்ள ஆசனங்கள் பொருத்தியிருக்கிறார்கள். மெத்தைகள்மீது காஷ்மீரின் பிரசித்தி பெற்ற வேலைப்பாடுகள் நிறைந்த கம்பளங்களை விரித்துப் போட்டிருக்கிறார்கள். இந்த ஆசனங்களுக்கு மேலே அழகு நிறைந்த கூடாரம் அமைந்திருக்கிறது. அந்தக் கூடாரத்தில்தான் எத்தனை சித்திர விசித்திரங்கள்!

தால் தடாகம் சமுத்திரம்போல் மிகப் பெரிதாக இருந்தாலும் அதில் அலைகளே இல்லை. அதனால் ஷிகாரிப் படகின் ஓரம் தண்ணீர் மட்டத்துக்குச் சரியாக அதிக உயரமில்லாமல் இருக்கிறது. அந்தச் சின்ன விளிம்பில் தெரியும் மரத்தில் அற்புதமான முறையில் பலவிதமான வேலைப்பாடுகள் செய்

திருக்கிருர்கள். படகில் உட்கார்ந்தவண்ணம் தண்ணீரில் கை வைத்துக்கொண்டு செல்லலாம். இந்த ஷிகாரியில் உட்கார்ந்தவுடனேயே நாம் நம்மை அறியாமல் மகாராஜாக்களாக மாறிவிடுவோம். அப்படி ஒரு மயக்கத்தைக் கொடுக்கும்படி இருக்கிறது ஷிகாரியின் அமைப்பு. இதில் சுமார் ஆறு பேர் சுகமாகப் பிரயாணம் செய்யலாம். படகு வீட்டை வாடகைக்கு எடுக்கும்போது அதோடு ஒரு ஷிகாரியையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும்.



நிலவிலே படகில் வீணுகானம்

படகு வீட்டுக்கு எஞ்சின் கிடையாது. ஆயினும், அதைத் தடாகத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னேர் இடத்துக்குக் கொண்டு போகலாம். நீளமான குச்சிகளைத் தடாகத்தின் ஆழத்தில் உள்ள தரையில் படும்படி குத்தி உந்தித் தள்ளிச் செல்ல வேண்டியதுதான். படகு வீடுகளை அழகு நிறைந்த உல்லாசமான ஒரு சிறு அரண்மனை என்றுதான் கூற வேண்டும்.

படகு வீட்டுப் படிகளில் கால் வைக்கும்போதே ஏதோ ஒரு வித மான இன்ப மயக்க உணர்ச்சி ஏற்படுகிறது. அந்தப் படகு வீட்டின் வாசல்படிகளில் இரு புறமும் அழகழகான மலர் குலுங்கும் பூந்தொட்டிகளை வைத்திருக்கிருர்கள். உள்ளே சென்ருல் ஏதோ பெரிய மாளிகைக்குள் நுழைந்துவிட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது. விலையுயர்ந்த சோபாக்களும் வேலைப்பாடுகள் நிறைந்த நாற்காலிகளும் நிறைந்த அழகான கூடம். கூடத்துக்கு அடியில் ரத்தினக் கம்பளம் விரித்திருக்கிறது. அதில் காலை வைப்பதற்கே கூச்சமாக இருக்கிறது; அவ்வளவு உயர்ந்த கம்பளம்.

இந்தக் கூடத்தின் சுவர்களில் மலர்க் கொத்துக்களை வைத்து அலங்காரம் செய்திருக்கிருர்கள். காஷ்மீரின் வனப்பு மிக்க காட்சிகளின் வண்ண ஓவியப் படங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றன.

இந்த அலங்காரமான விருந்தினர் கூடத்தைத் தாண்டி உள்ளே பிரவேசித்தால் இன்னெரு கூடம். இது சாப்பாட்டுக் கூடம். சாப்பாட்டு மேஜையும் அதைச் சுற்றி நாற்காலிகளும் போட்டிருக்கிருர்கள்.

இந்தக் கூடத்துக்குப் பின்னல், சாப்பாடுகளை வைக்கும் அறை. இந்த அறையிலிருந்துதான் படகு வீட்டின் மாடிக்குச் செல்லும் படிகள் இருக்கின்றன. ஆமாம்; படகு வீட்டுக்கு மாடியும் இருக்கிறது. மாடியில் உட்கார்வதற்கு வசதியாகப் பல நாற்காலிகள்

இருக்கின்றன. மேலே அழகு மிக்க கூடாரம்.

சாப்பாட்டு அறைக்குப் பின்னால் மூன்று தனித் தனிப் படுக்கை அறைகள் இருக்கின்றன. மூன்றுக்கும் பொதுவாக ஒரு வராந்தா. இந்த வராந்தாவிலும் ரத்தினக் கம்பளம் விரித்துக் கிடக்கிறது. ஒவ்வொரு படுக்கை அறையிலும் அதன் உள்ளேயே குளிக்கும் அறை, 'பிளஷ் அவுட்' அறை எல்லாம் இருக்கின்றன. படுக்கை அறையில் இரண்டு ஸ்பிரிங் கட்டில்கள் இருக்கின்றன; அற்புதமான ரப்பர் மெத்தை பொருத்தியவை. அவற்றின்மீது காஷ்மீர்க் கம்பளங்களை விரித்திருக்கிறார்கள். தவிர, ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள், ஆடை அணிகள் வைத்துக் கொள்ளும் அலமாரிகள், அலங்காரம் செய்துகொள்வதற்கு வேண்டிய தளவாடங்களுடன் கூடிய பெரிய கண்ணாடியுள்ள மேஜை எல்லாம் இருக்கின்றன.

படகு வீடுகளில் மின்சார வசதியும் இருக்கிறது. சில படகு வீடுகளில் ரேடியோவும் இருக்கிறது. தால் தடாகக் கரையோரமாக உள்ள மின்சாரக் கம்பங்களிலிருந்து ஒவ்வொரு படகு வீட்டுக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

காஷ்மீரில் கோடைக் காலத்திலுங்கூட ஈக்கள் அதிகம். படகு வீடுகளுக்குள் ஈக்கள் நுழைந்து தொந்தரவு கொடுக்காமல் இருப்பதற்காக எல்லா ஜன்னல்களிலும் ஈ வலைகள் பொருத்தியிருக்கிறார்கள்.

தேவதாரு மரத்தில் செய்த இந்தப் படகு வீடு ஒவ்வொன்றும் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் விலை மதிப்புள்ளது. ஒரு நாளைக்கு எண்பது ரூபாய் வாடகை. இந்த வாடகை அந்தப் படகு வீட்டில் தங்கும் ஐந்து பேருடைய சாப்பாட்டுச் செலவையும் சேர்த்துத்தான். வருஷத்தில் மூன்று நான்கு மாதங்களே படகு வீட்டை வாடகைக்கு விட முடிகிறது.

தமிழ் நாட்டைப் போலவே நல்ல சாப்பாடு காஷ்மீரத்தில் கிடைக்கிறது. செர்ரி, பிளம்ப், பீச் முதலிய சுவையுள்ள இனிய பழங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. பசுமையான காய்கறிகளுக்குப் பஞ்சமே இல்லை.

தால் தடாகத்தில் படகு வீடுகள் உல்லாசமாக மிதந்து செல்லவும், தால் தடாகத்தின் மத்தியில் உள்ள செயற்கைத் தீவுகளுக்கு மத்தியில் நிற்கவும் ஆரம்பித்து எழுபது ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டாம் ஆண்டு எம். டி. கென்னர்ட் என்ற ஆங்கிலேயர் முதல்முதல் தால் தடாகத்தில் படகு வீட்டைக் கட்டி இறக்கி அதில் உல்லாசமாகக் காலங் கழித்தார். அதைப் பார்த்துப் பிற செல்வர்களும் படகு வீடு கட்டித் தால் தடாகத்திலும் ஜீலம் நதியிலும் உல்லாசமாகக் கோடைக் காலத்தைக் கழிக்க ஆரம்பித்தார்கள்.

'இப்படிப்பட்ட படகு வீடுகளைக் கட்டி ஏன் வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்கக்கூடாது?' என்று நினைத்தார் ஒருவர். உடனே அதைக் காரியத்தில் நிறைவேற்றி வெற்றி பெற்றார், நாராயணதாஸ் என்னும் அந்தக் காஷ்மீர் வாசி. அவருக்குப் பிறகு எத்தனையோ பேர் படகு வீடுகள் கட்டி, யாத்திரிகர்களிடம் வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார்கள். இன்று ஸ்ரீநகரில் இது பெரிய தொழிலாக இருந்து வருகிறது. இதன் மூலம் ஸ்ரீநகரில் சுமார் ஏழாயிரம் பேர் பிழைத்து வருகிறார்கள்.

ஒரு படகு வீடு சுமார் எண்பதடி நீளமும், இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தால் தடாகத்தின் மத்தியில் சிறு சிறு செயற்கைத் தீவுகளைச் செய்து அதன் கரையில் படகு வீடுகளை நிறுத்திப் பெரிய முளைகளில் கட்டி வைத்திருக்கிறார்கள். தீவில் ஏராளமான வில்வ மரங்கள் இருக்கின்றன. படகைக் கட்டி வைப்பதற்குத் தீவின் சொந்தக்காரருக்கு நாள் ஒன்றுக்குப் படகுக்காரர் வாடகையாக ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும்.

தால் தடாகத்தின் தண்ணீரைக் குளிப்பதற்கு மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். சமையலுக்கும்

குடிப்பதற்கும் வேறு தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்கள்.

தால் தடாகத்தில் உள்ள படகு வீடுகளில் தங்கி இருக்கும்போது ஏற்படும் மன அமைதியையும், இனந் தெரியாத இன்பத்தையும் எப்படி வார்த்தைகளில் வடித்துக் கூற முடியும்!

**கா**ஷ்மீரைச் சிருஷ்டித்தது யார்? மனிதர்களா? இல்லை. மனிதர்களால் சிருஷ்டிக்கும் காரியம் ஒன்றுமே அங்கு இல்லை. எல்லாம் வல்ல இறைவனைத் தவிர வேறு யாருமே வனப்பு மிக்க இந்தக் காஷ்மீரைச் சிருஷ்டித்திருக்க முடியாது.

பெரிய கிண்ணம்போல் இமய மலையின் மத்தியில் அது அமைந்திருக்கிறது. காஷ்மீரத்தை யாரேனும் கவர்ந்து சென்று விடுவார்களோ என்று பயந்துகொண்டு இமய மலை தன் பலம் பொருந்திய கைகளால் அந்த அழகுப் பூமியைக் காதலோடு அணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தில் எத்தனையோ விதமான நாகரிக வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்த போதிலும், காஷ்மீர் மட்டும் இன்னும் நாகரிகத்துக்கு அடிமையாகவில்லை. காரணம், காஷ்மீருக்குள் ரெயில் வண்டியே கிடையாது. ரெயில் வண்டியைப்பற்றித் தெரியாத மக்கள் காஷ்மீரில் இருக்கிறார்கள். ஆனால் மோட்டார் வாகனங்கள் அங்கே இருக்கின்றன.

காஷ்மீரத்தில் இன்னொரு விசேஷம் அங்குள்ள பூந்தோட்டங்கள். இந்தத் தோட்டங்கள் ஜஹாங்கீர் சக்கரவர்த்தியின் காலத்திலேயே அமைந்தவையாம். ஜஹாங்கீர் தம் காதல் மனைவி நூர்ஜஹானுக்காக அமைத்த பல பூங்காவனங்கள் இருக்கின்றன. அவற்றில் மிகப் பிரசித்தி பெற்றவை இரண்டு. ஒன்று 'நிஷா தோட்டம்' - அதாவது, ஆனந்தத் தோட்டம்; மற்றொன்று ஷாலிமார் தோட்டம். இந்தத் தோட்டங்களில் காஷ்மீரின் அழகு மிக்க மரங்களும் விதம் விதமான மலர்ச் செடிகளும் படிப்படியாக உயர்ந்து மேல் நோக்கிச் செல்லும் நீர்ப்பொழிவுகளும், கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் காவிய அழகுடன் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றன.

இந்தத் தோட்டங்களுக்குள் சென்றதும், நாம் நம்மை அறியாமலே எங்கோ சென்று விடுகிறோம். பார்க்கும் இடம் எங்கும் பல வர்ணங்களுடன் துலங்கும் மலர்கள் கண் சிமிட்டி நம்மை மயக்குகின்றன.

அங்குள்ள செனார் மரங்களைப் பார்த்தால் ஒரு சமயம் வயசு முதிர்ந்த மரங்களாகக் காட்சி யளிக்கின்றன. இன்னொரு சமயம் இள மரங்களாகத் தோன்றுகின்றன. ஆனால் ஐந்நூறு வருஷத்து மரங்கள் என்று சொல்கிறார்கள்.

குல்மார்க், கிலன்மார்க், பகல்காம் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று அங்குள்ள இயற்கைக் காட்சியை அநுபவித்து மகிழவேண்டும். இந்த இடங்களுக்குச் செல்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. எல்லாவற்றையும்விட அங்குள்ள மலைகள்மீது போவதற்குப் பழக்கிய குதிரைகள் இருக்கின்றன. அவற்றின்மீது ஏறிக்கொண்டு செல்லலாம். வாழ்நாளில் குதிரை ஏறிப் பழக்கம் இல்லாதவர்கள்கூடச் சுகமாகக் குதிரை சவாரி செய்யலாம். இமய மலையின்மீது குதிரை சவாரி செய்துகொண்டு போகும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும், தெரியுமா?

எத்தனையோ சுனை ஊற்றுக்கள் இருக்கின்றன. வெரிநாக் - ஜீலம் நதியின் உற்பத்தி ஸ்தானம்-பார்க்க வேண்டிய இடம். சின்னஞ்சிறு தாமரைத் தடாகம் போன்ற ஒரு குளத்திலிருந்து ஜீலம் நதி பொங்கிவரும் அழகை எப்படிக் கூறுவேன்? அதில் துள்ளிக் குதிக்கும் மீன்களின் கூட்டத்தைப் பற்றி எவ்வாறு வர்ணிப்பேன்? அந்தத் தண்ணீரைத் தொட்டால், அப்பப்பா! 'சுறீர்' என்று குளிர்ச்சி தாக்குகிறது! தாங்க முடியாமல் குளிர்ந்த அந்த நீரைப் பார்ப்பதற்கே உடம்பு நடுங்குகிறது. அப்படிப்பட்ட குளிர். கம்பளிச்

சட்டையை இழுத்துக் கழுத்தை ஒரு தரம் மூடிக்கொள்ள வேண்டி யிருக்கிறது. ஆனால் இந்த ஒன் றையும் லட்சியம் செய்யாமல் திறந்த உடம்புடன் அந்தக் குளிர் நீரில் ஓடி விளையாடும் மீன்களைப் பார்த்துப் பார்த்துக் களிக்க வேண்டும். இவைகளைப் பற்றி யெல்லாம் சொல்லால் விவரித்துக் கூற முடியாது.

மலர்கள்மீது காஷ்மீர மக்கள் மாளாக் காதல் கொண்டவர்கள். கையிலே தாமரை மல ரைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு தால் தடாகக் கரையில் மாலை வேளைகளில் உலாவுகிறார் கள். எதிரில் யாராவது வந்தால் தங்கள் கையிலுள்ள மலரை அவர்களிடம் கொடுத்து மகிழ் கிறார்கள். அவர்கள் அதை மலர்ந்த முகத்துடன் வாங்கிக் கொண்டு தங்கள் கையில் இருக் கும் மலரைக் கொடுக்கிறார்கள். இது ஏதோ நாடகத்தில் காணும் அபூர் வக் காட்சி போல் ஆனந்தமாக இருக்கிறது.

காஷ்மீர் மக்கள் பூக்களைக் கொண்டு தங்கள் வீடுகளை அலங் காரம் செய்யும் அழகுக் கலை, பார்த்துப் பார்த்து அநுபவிக்க வேண்டிய உன்னதக் கலை. படகு வீடுகளில் பூக்களைக் கொண்டு அவர்கள் அழகு செய்திருப்பதைக் காணக் கண் கோடி வேண்டும். அலங்காரக் கலை நிபுணர்களாக இருக்கிறார்கள் காஷ்மீர் மக்கள்.

சின்னஞ் சிறு படகுகளில் பூக்கள் கொண்டுவந்த பூவை போய்விடு கிறாள். அவளைத் தொடர்ந்து இன்னொரு படகு வருகிறது. ''சூடான டீ! குளிருக்கு இதமான டீ! டீ வேண்டுமா, டீ?'' என்று கேட்கிறார் படகில் உள்ள தேநீர் வியாபாரி. டீப்படகைத் தொடர்ந்து இன்னொரு படகு, இல்லை, ஒரு கடையே வருகிறது! நமக்கு என்ன என்ன வேண்டுமோ அவை எல்லாம் அதில் இருக் கின்றன; சீப்பு, சோப்பு, கண் ணாடி இவை போன்ற இன்னும் எத்தனை எத்தனையோ நவநாகரிக சாமான்கள் எல்லாம் இருக்கின் றன. அதைத் தள்ளிக்கொண்டு இன்னொரு படகு உள்ளே வரு கிறது. விதம் விதமான பழங்கள், வேண்டிய காய்கறிகள் எல்லாம் அதில் இருக்கின்றன. இவைகளுக் குப் பின்னால் ஒரு படகு. அதில் சல வைத் தொழிலாளர் வருகிறார். நம் துணிகளை எடுத்துக்கொண்டு, அவ சரமாக வருகிறார். நம்மிடம் துணிகளைக் கொடுத்து விட்டுக் கூடவே அழுக்குத் துணிகளை எடுத் துக்கொண்டு போகிறார். அவர் சென்றவுடன் தலையலங்கார நிபு ணர் வருகிறார். படகு வீட்டின் மாடியில் அமர்ந்து இமய மலையின் இணையற்ற காட்சிகளைப் பார்த் துக்கொண்டு தலையலங்காரம் செய்துகொண்டதை இப்பொழுது நினைத்தால்கூட எவ்வளவோ இன்பமாக இருக்கிறது! பச்சை யும் சிவப்பும் வெள்ளையுமான என்ன என்னவோ பல எண்ணெய் களை உடம்பில் தடவிச் சுகமாக அவர் பிடித்துவிடும்போது ஏற் படும் சுகம் இருக்கிறதே, அதுதான் சுகத்துக்கெல்லாம் சுகம்.

இதற்குப் பிறகு இன்னும் பல படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டே இருக்கின்றன. காஷ்மீரக் கம்பளங்கள், பட்டுக் கள், மர வேலைச் சாமான்கள், கத்திகள், அழகழகான கைத்தடி கள் எல்லாம் வருகின்றன. இவைகளுக்கு மத்தியிலேயே படகு களை ஒதுக்கிக்கொண்டு வேகமாக இன்னும் ஒரு படகு வருகிறது. நமக்கு வந்திருக்கும் தபால்களைக் கொடுக்கிறது. ''உங்களுக்கு ஏதா வது கார்டு, கவர், ஸ்டாம்பு வேண்டுமா?'' என்று அதில் உள்ள தபால்காரர் நம்மை மிகுந்த அன் புடன் விசாரிக்கிறார். நமக்கு வேண்டியதை அவருக்காகவாவது நாமும் வாங்கிக்கொள்கிறோம்.

இப்படிப் படகில் வரும் வியா பாரிகள் எல்லாருக்கும் இந்தியும் ஆங்கிலமும் தெரிகின்றன. ஆனால் அவர்களிடம் வியாபாரம் செய்வது தான் மிகவும் தர்மசங்கடமான காரியம். ''வியாபாரம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா விஷயங்களி லும் காஷ்மீர் மக்கள் மிகவும் நாணயமானவர்கள்'' என்று எங்

கள் படகு வீட்டின் சொந்தக்காரர் கூறினர்.

படகு வீட்டின் வாசலிலிருந்து ஒரு நாள் பொழுதைக் கழிப்பதே அருமையான அநுபவம். அந்த ஒரு நாள் வாழ்க்கையை நினைத்து நினைத்து வாழ்நாள் எல்லாம் மகிழலாம்.

காஷ்மீரில் ஜூன், ஜூலை மாதங்களில் பகல் அதிகம்; இரவு நேரம் மிகக் குறைவு. சூரியன் அஸ்தமிப்பதற்கு இரவு மணி ஒன்பதாகிறது. சூரியனின் மறைவுக்குப் பின் மாலை நேரம் மறைவதற்குச் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிறது. தமிழ் நாட்டில் சூரியன் அஸ்தமித்ததும் இருட்டி விடுகிறதே, அதுபோல் இல்லை. இயற்கையின் விசித்திர விளையாட்டை என்ன சொல்வது!

காங்ரிபல் என்ற இடத்திலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் தால் தடாகத்தில் அழகான தீவு ஒன்று இருக்கிறது. இந்தத் தீவுக்குச் 'சார் செனர்' என்று பெயர்; அதாவது, இந்தச் சின்னஞ்சிறு தீவில் நாலு செனர் மரங்கள் இருக்கின்றன.

செனர் மரம் காஷ்மீரின் அழகுச் செல்வங்களில் ஒன்று. சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாரசீகத்திலிருந்து ஜஹாங்கீர் சக்கரவர்த்தி காஷ்மீருக்குக் கொண்டுவந்து வளர்த்த மரம்! அதன் அழகையும் கம்பீரத்தையும் எப்படி வார்த்தைகளால் வர்ணிக்க முடியும்? அந்த மரத்தின் அமைப்பைப்பற்றிச் சொல்வதா? அதன் குளுமையான இலையைப் பற்றிச் சொல்வதா? அந்த இலையின் பசுமையான நிறத்தைப் பற்றிச் சொல்வதா? எல்லாமாகச் சேர்ந்து ஏதோ ஓர் இளம் பெண் நாணத்துடன் நிற்பது போல் தோன்றும் மயக்கக் காட்சியைப் பற்றிக் கூறுவதா? ''செனர் மரத்தின் இலைகளையோ, கிளைகளையோ ஒடிப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள்'' என்று காஷ்மீரில் ஒரு சட்டமும் இருக்கிறது என்றால் அதன் பெருமையைப் பார்த்துக் கொள்ளுங்களேன்.

செனர் மரம் பூமியில் வேர் பிடித்துத் தழைத்து மரமாவதற்குக் குறைந்தது ஐம்பது ஆண்டுகளாவது ஆகும். இப்படிப்பட்ட நாலு செனர் மரங்கள் வானோங்கி வளர்ந்திருக்கும் தீவைச் சுற்றி எந்தப் பக்கமும் கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே தண்ணீர்! தால் தடாகம் பரந்து விரிந்து கிடக்கிறது! தால் தடாகத்துக்கு அப்பால் இமய மலையின் இணையற்ற எழில் மிக்க கம்பீரத் தோற்றம். வெள்ளிப் பனி மூடிய அதன் சிகரங்கள் நிலவொளியில் கைலாசம்போல் காட்சி தருகின்றன. அதற்கும் மேலே அற்புதமான எழிலுடன் விளங்கும் நீலவானம். அந்த வானத்தில் கணக்கற்ற நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கட்டியம் கூற, பூர்ண சந்திரன் பிரகாசமான வெண்ணிலவைப் பொழிந்து கொண்டு ஒய்யாரமாகப் பவனி வருகிறான்.

சார் செனர் தீவில் பௌர்ணமி நிலவில் இருக்கும்போது ஏற்படும் மன உணர்ச்சியை எப்படி வர்ணிப்பேன்! நிலவு, நிழல், இரவு, தண்ணீர், பனி, மரம் எல்லாமாகச் சேர்ந்து காஷ்மீர் ஏதோ ஓர் அதிசய சக்தியைப் பெற்று நம்மை மயக்குகிறது. அப்பொழுது ஏற்படும் உணர்ச்சியைக் காளிதாசன் போன்ற மகாகவிகள்தான் வர்ணிக்க முடியும்!

செனர் மரத்தின் இலைகள் காற்றிலே லேசாக அசைகின்றன. அது ஒரு சமயம் ஏதோ இனிய காதல் கீதம் இசைப்பது போல் இருக்கிறது. மறு கணம் காதலனைப் பிரிந்த காதலியின் மனத் துடிப்புப் போல் சோகத்துடன் படபடக்கிறது. அடுத்த கணம் காதலனும் காதலியும் சேர்ந்து பாடுவதுபோல மதுரமாக ஆடி அசைகிறது. அவர்கள் இருவரும் சேர்ந்து கலகலவென்று கைகொட்டிச் சிரிப்பது போலச் சலசலக்கிறது.

நம் நாட்டுச்செடி முதலில் பூமியிலிருந்து கிளம்பும்போது குருத்து விட்டுத் தளிர்த்துத் தழைத்துப் பிறகு பூக்கள் மலரும். ஆனால் 'காஷ்மீரில் உள்ள செடி, பூமியி

லிருந்து கிளம்பும்போதே, எடுத்த எடுப்பிலேயே, மலராகவே வெளி வருகிறதோ! பிறகுதான் இலைகள் தளிர்க்கின்றனவோ!' என்று நினைக்கத் தோன்றுகிறது! அப்படி இருக்கின்றன புஷ்பச் செடிகள், இலைகளே தெரியாமல். காஷ்மீரில் இருக்கும் மலர்கள் ஏதோ பல வர்ணங்கள் பூசிய மென்மையான காகிதங்களாலும் நெட்டிகளாலும் செய்த வையோ என்று எண்ணத் தோன்றுகிறது, அவை மணம் வீசாமலும் நாட்கணக்கில் வாடாமலும் இருப்பதைப் பார்க்கும்போது. ஆனால், தொட்டால் எவ்வளவு மிருது! மோந்தால் என்ன மணம்! அங்கே இயற்கையாக மலைகளிலும் மலர் வனங்களிலும் தோப்புக்களிலும் பூத்துக் கிடக்கும் மலர்வனத்தைக் காண இன்பமாக இருக்கிறது.

## காசும் கடிதமும்

ஆண்ட்ரூ கார்னீஜி ஒரு ஸ்காட். இளம் வயசில் மிக ஏழை. பின்னால் கோடீசுவரராகி 36 கோடியே 50 லட்சம் பவுனைத் தர்மம் செய்தவர். பிறர் மனத்தை அறிந்து அவர்களை ஆட்டி வைப்பதில் வல்லவர்.

அவருடைய மைத்துனிக்கு இரண்டு பையன்கள். யேல் யூனிவர்ஸிட்டியில் அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அம்மா கடிதம் எழுதினால், அவர்கள் பதிலே போடுவதில்லை. அவள் மிகவும் வருத்தப்பட்டாள்.

''என்ன பந்தயம்? மறு தபாலிலேயே அவர்களிடமிருந்து நான் பதில் தருவிக்கிறேன்'' என்றார் கார்னீஜி.

''எங்கே, செய்யுங்கள் பார்க்கலாம்! நான் வைக்கிறேன் பந்தயம்'' என்றார் ஒரு நண்பர்.

உடனே தன் மைத்துனி பிள்ளைகளுக்கு ஏதேதோ வம்பளப்பதுபோல நீண்ட கடிதம் எழுதினார் கார்னீஜி. கடிதத்தின் இறுதியில் பின் குறிப்பாக, ''ஆளுக்கு ஐந்து டாலர் பண நோட்டு அனுப்பியிருக்கிறேன்'' என்று எழுதினார்.

ஆனால், பண நோட்டுக்களை வைக்க மறந்தது போல் வைக்காது விட்டுவிட்டார்.

''பண நோட்டைக் காணோமே!'' என்று பயல்களிடமிருந்து மறு தபாலிலேயே பதில் வந்து விட்டது!

—டேல் கார்னீஜி

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# யமன் தந்த வரம்

இந்திரப்பிரஸ்தத்து மன்னன் ஹம்சன் வேட்டையாடப் போனான். அவன் அலைந்து திரிகையில், ஹைமன் என்ற சிற்றரசன் ஒருவன், அவனை வரவேற்று உபசரித்தான். ஹைமனுக்கு அன்றுதான் அழகிய ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. ஆனந்தத்தில் மூழ்கியிருந்த அரசனிடம், அந்தக் குழந்தையைக் கண்ட ஜோஸ்யன் வந்து, "மணமான நான்காவது நாள் இந்தப் பையன் பாம்பு தீண்டி இறந்துவிடுவான்" என்று சொன்னான்.

ஹம்சன் அந்தக் குழந்தையைக் காக்க உறுதியான ஏற்பாடுகள் செய்தான். யமுனை மடுவின் நடுவில் ஒரு கோட்டையைக் கட்டி, அதில் ஹைமனைக் குடும்பத்துடன் வந்து இருக்கச் செய்தான். பதினாறு ஆண்டுகள் கழித்து அரச குமாரனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. மணமான நான்காவது நாள், அந்தப் பாதுகாப்பான இடத்திலும் எங்கிருந்தோ ஒரு பாம்பு வந்து அரச குமாரனைத் தீண்ட, அவன் இறந்தான். இன்பம் துயரமாக மாறியது. கொடுமையே வடிவான யம தூதர்களுக்கும் இந்தக் காட்சியைக் கண்டு இரக்கம் உண்டாயிற்று. அவர்கள் யமனிடம் சென்று வேண்டி, 'தீபாவளியில் ஐந்து நாட்கள் விளக்கேற்றி விழாக் கொண்டாடுகிறவர்களுக்கு இத்தகைய இடுக்கண் வராது' என்ற வரத்தைப் பெற்றார்கள்.

தனத் திரயோதசியிலிருந்து பிராத்ரு துவிதியை வரையில் ஐந்து நாட்களுக்கு நாம் இன்றும் தீபாவளி கொண்டாடுகிறோம். மாசை நீக்கிப் புனிதத்தைப் போற்றுகிறோம். இருளை நீக்கி, ஒளியை வரவேற்கிறோம். துன்பத்தை விரட்டித் தூய இன்பத்தை நாடுகிறோம்.

—காகா காலேல்கர் (வாழ்வே காவியம்)

**Manjari - Nov. '57** **Regd. No. M. 4975**
(Regd. as a Newspaper in Ceylon)

# மஞ்சரி

## பொருளடக்கம்

**ஹேவிளம்பி - கார்த்திகை** **நவம்பர் 1957**


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | .. .. .. | 1 |
| சிலந்தி புரியும் உதவி | .. அமிர்தபஜார் பத்திரிகை | 3 |
| கோல்கொண்டா கோட்டை | .. .. தினமணி சுடர் | 6 |
| சுந்தனும் உபசுந்தனும் | .. .. .. | 10 |
| தாவர உணவு மகாநாடு | .. தி லிஸ்ப் நாச்சுரல் | 15 |
| வீட்டுப் பாடம் | .. .. மாத்ருபூமி | 17 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 22 |
| பெஷி பாதிரியார் | .. இந்தியன் ரெவ்யூ | 25 |
| நிபுணர் கணக்கு | .. .. ஹிந்து | 28 |
| ருஷியச் சந்திரன் | .. ஏ. பி. பத்திரிகை | 29 |
| கொம்பில்லா யானை | .. காமன்வெல்த் டுடே | 34 |
| அந்தக் காலம் | .. .. சிவாஜி | 36 |
| குணம் தரும் கிராம்பு | .. .. ஜனப்ரகதி | 39 |
| சுதந்தரச் சட்ட அரசு | .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் | 41 |
| கொசுவலையில் ஸ்வெட்டர் | ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் | 45 |
| சர்வ மங்களை | .. ஆந்திர பத்திரிகா | 48 |
| வாருணி நீராடல் | .. .. ப்ரபாஸி | 50 |
| சீசாப் பிசாசு (ஆங்கிலக் கதை) | .. ஸ்டீவன்ஸன் - கே. எஸ். பி. | 53 |
| அழகு கொஞ்சும் காஷ்மீர் (புஸ்தகப் பகுதி) | பகீரதன் | 61 |
| யமன் தந்த வரம் | .. .. | (3-ஆம் அட்டை) |